www.padippakam.com

1-15 அக்டோபர் 2001 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



அமெரிக்காவின் பயங்கரவாதம்




படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## இந்து மதத்தைச் சீர்திருத்த முடியுமா?

“சாதிகளைக் கடந்து இந்துக்கள் அனைவரையும் ஒன்றாக இணைப்பதுதான் விநாயகர் ஊர்வலம்” எனப் படம் காட்டுகிறார் இந்து முன்னணி இராம. கோபாலன். ஆனால், மும்பய் நகரில் இயங்கி வரும் “கௌட் சரஸ்வத் பிராமின்” எனும் பார்ப்பன சாதி அமைப்பைச் சேர்ந்த மூன்று பார்ப்பனர்கள், “இந்து மத தர்மப்படி பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் தான் பூணூல் அணிய முடியும். ஆனால், விநாயகர் ஊர்வலத்தின் பொழுது, கண்ட சாதிப் பசங்களெல்லாம் பூணூல் மாட்டிக் கொண்டு, பிள்ளையாருக்குப் பூஜை போடுகிறார்கள். இது, இந்து தர்மத்திற்கு எதிரானது. எனவே, இதனைத் தடை செய்ய வேண்டும்” என வழக்கு தொடுத்திருக்கிறார்கள். நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும், அது நரகலைத்தான் தேடி ஓடும்; அதுபோலத்தான் இந்து மதமும்!

## தாராளமயமாகும் கொத்தடிமைத்தனம்

விவசாயம் நசிவடைய, நசிவடைய தமிழகக் கிராமப்புறங்களில் இருந்து சிறுவர்கள் வெறும் ஐநூறு ரூபாய்க்கும், ஆயிரம் ரூபாய்க்கும் விலைக்கு வாங்கப்பட்டு வெளி மாநிலங்களுக்குக் கொத்தடிமைகளாகக் கடத்திச்செல்லப்படுவது அதிகரித்து வருவதாக மனித உரிமை அமைப்புகள் அம்பலப்படுத்தியுள்ளன. பெரும்பாலும் தமிழகத்தின் தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களால் இருந்து கடத்தப்படும் சிறுவர்கள், கர்நாடகா, குஜராத், ஒரிசா, மகாராஷ்டிரா மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு தமிழர்கள் நடத்தும் மிட்டாய்க் கடைகளில் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இப்படி கடத்தப்பட்ட 190 சிறுவர்கள் மீட்கப்பட்டதைத் தமிழக அரசு ‘சாதனை’யாகக் கூறுகிறது. ஆனால், கடத்தப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையோ இதைவிட பதினைந்து மடங்கு இருக்கும் எனத் தன்னார்வக் குழுக்கள் கூறுகின்றன.



ஒரிஸ்ஸாவுக்குக் கடத்தப்பட்ட சிறுவர்களை மீட்ட சாதனையைத் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் அதிகார வர்க்கம்.

## தொழிலாளி வர்க்கத்தின் மீது விழும் இடிகள்

தொழிலாளர் நலச் சட்டத்தில் மைய அரசு கை வைப்பதற்கு முன்பாகவே, உச்சநீதி மன்றம், ஒப்பந்தத் தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினையில் முதலாளிகளுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்திருக்கிறது. உற்பத்தி சாராத சில பிரிவுகளில், ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது; நிரந்தரத் தொழிலாளர்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் இதுவரை இருந்து வந்த சட்ட விதி. இதனை ரத்து செய்துவிட்ட உச்சநீதி மன்றம், உற்பத்தி சாராத பிரிவுகளில் இனி சேர்க்கப்படும் ஒப்பந்தத் தொழிலாளர்களை, பின்னாளில் நிரந்தரமாக்க வேண்டும் என்ற கட்டாயமும் நிர்வாகத்திற்கு இல்லை எனத் தீர்ப்பளித்திருக்கிறது. இது ஒருபுறமிருக்க, தொழில் நிறுவனங்களை நட்டக் கணக்கு காட்டி, நினைத்த நேரத்தில் மூடி விடுவதற்கு நலிவடைந்த தொழில் நிறுவனங்கள் சட்டம் தடையாக இருப்பதாக முதலாளிகள் முணகிக் கொண்டிருந்தார்கள். அதை, பா.ஜ.க. கூட்டணி அரசு இப்பொழுது கை கழுவிவிட்டது.

## மனித உரிமை: ‘தேசிய’ பத்திரிகைகளின் இரட்டை நாக்கு

ஜம்மு - காசுமீர் விடுதலை முன்னணியின் தலைவரான யாசின் மாலிக், நாடறிந்த ஓர் அரசியல் தலைவர். இவர் மீது 35 வழக்குகள் நடந்து வருகின்றன. சமீபத்தில் இவர் பிணை விதிகளை மீறி விட்டதாகக்கூறி நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டார். திகார் சிறையில் போலீசு, ஆடைகளைக் களையச் சொல்லி அவரை நிர்பந்தித்த பொழுது, யாசின் மாலிக் அதற்கு உடன்பட மறுத்துவிட்டார். இதனால், போலீசார் அவரை மிருகத்தனமாகத் தாக்கி, அவரின் இடது கையை ஒடித்து விட்டனர். இத்துணைக்கும், யாசின் மாலிக் இருதய நோயாளி; அவரின் சிறுநீரகங்கள் பழுதடைந்துள்ளன; மூளைப் புற்றுநோய்க்காக அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ரணம் ஆறாத போதும், அவரை வேண்டுமென்றே போலீசார் மிருகத்தனமாகத் தாக்கினர். தேசியவாதி கருணாநிதி போலீசாரால் இழுத்துச் செல்லப்பட்டதை மனித உரிமை மீறலாகக் கண்டித்த “தேசிய”ப் பத்திரிகைகள், இந்தப் ‘பிரிவினைவாதி’ தாக்கப்பட்டதைத் திட்டமிட்டே மறைத்துவிட்டன.

## ஆர்.எஸ்.எஸ். - சி.பி.எம். இந்து தேசியக் குட்டையில் ஊறும் மட்டைகள்

கேரளாவில் இயங்கி வரும் மனித உரிமை அமைப்புக்களின் கூட்டுக் கமிட்டி, காசுமீரைச் சேர்ந்த ஹுரியத் தலைவர்களை காசுமீர் பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு அழைத்திருந்தது. இது தொடர்பாக செப்.2 அன்று கோழிக்கோடு நகரில் ஒரு கருத்தரங்கம் நடத்தவும் ஏற்பாடுகள் நடந்து வந்தன. இச் செய்தி வெளியானவுடனேயே ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள், “ஹுரியத் தலைவர்கள் கேரளாவிற்குள் நுழைவதைத் தடை செய்ய வேண்டும்” எனக் கோரி ஆங்காங்கே ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்.எஸ்.எஸ். இன் இந்த தேசியவெறிக் கூச்சலுக்கு சி.பி.எம். கட்சி ஒத்து ஊதியது. “ஹுரியத் தலைவர்கள் வருவதால், கேரளாவில் மதக் கலவரம் வெடித்து விடும்; அவர்களின் வருகையை அரசு தடை செய்யாமல் இருப்பது வருத்தமளிக்கிறது” என்றும் அறிக்கைவிட்டு, தனது இந்து தேசபக்தியைக் காட்டிக் கொண்டது.

## சங்கர மடத்தின் பெருந்தன்மை ஜோதிபாசுவின் பணிவு

காஞ்சி சங்கர மடத்தால் நடத்தப்படும் சங்கரச்சார்ய சுவாமிகள் சமஸ்தானம் ஜோதிபாசுவிற்கு, அவரது பொதுச் சேவையைப் பாராட்டி, தேசிய சாதனையாளர் விருது வழங்கவதாக அறிவித்தது. “நான், எனது பொதுச் சேவைக்காக எந்த விருதையும் ஏற்றுக் கொள்வதில்லை” என ஜோதிபாசு சங்கர மடத்திற்குக் கடிதம் எழுதி, அவ்விருது வாங்குவதைப் பணிவுடன் மறுத்துவிட்டார். ஒருபுறம், ‘கம்யூனிஸ்டுக்கே’ விருது வழங் கும் சனாதன சங்கரமடத்தின் பெருந்தன்மை. இன்னொருபுறம், அச்சனாதனிகளின் மனது புண்படாமல் விருதை மறுக்கும் ஜோதிபாசுவின் பணிவு. இதில் யாரைப் பாராட்டுவது? சங்கரமடப் பரதேசிகளையா? போலி புரட்சியாளர் ஜோதிபாசுவையா?


படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 16

**இதழ் 21-22**

16 செப். - 15 அக். 2001

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

மின் அஞ்சல் முகவரி:
puthiyajananayagam@hotmail.com

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# ஜெயா விவகாரம்: அரசியல்—சமூக சீரழிவின் சாட்சி!

அதிகார முறைகேடு - ஊழல் குற்றங்களுக்காக இரண்டாண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, தேர்தலில் போட்டியிடுவதற்குச் சட்டப்படி தகுதியிழந்த ஜெயலலிதா தமிழக முதலமைச்சரானது, அன்றைய ஆளுநர் பாத்திமா பீவி அவரை நியமனம் செய்தது சட்டவிரோதமானது என்று உச்சநீதி மன்றத்தின் அரசியல் சட்ட அமர்வுப் பிரிவு ஒருமனதாகத் தீர்ப்பு வழங்கிவிட்டது. இதனால் பதவியிழந்த ஜெயலலிதா தன் சகபாடி சசிகலா குடும்ப விசுவாசி ஓ. பன்னீர்செல்வம் என்கிற தலையாட்டியை தமிழக முதலமைச்சராக நியமித்துள்ளார். இதனால் தமிழக ஆட்சி நிர்வாகத்தில் பெரிய மாற்றம் எதுவும் நடந்துவிடவில்லை. ஜெயா-சசி கும்பலின் ஆட்டுவிக்கும் கருவி ஆட்சிதான் இருக்கப் போகிறது.

இருந்தபோதும், "இத்தீர்ப்பு அரசியல் சட்டநெறி - நீதித்துறை வரலாற்றில் முத்திரை பதிக்கும், கருத்துச் செறிவும் சட்ட நுட்பமும் தெளிவும் கொண்டது; இலஞ்ச - ஊழல் பேர்வழிகளுக்கு இது ஒரு பாடமாக அமையும். எவ்வளவு சக்தி வாய்ந்தவர்களாக இருந்தாலும் உயர் பதவிகளில் இருந்தாலும் அவர்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்திவிட்டது. இந்த நல்ல முன்னோடியான தீர்ப்பால் கிரிமினல்கள் பொது வாழ்க்கைக்கு வரப் பயப்படுவார்கள். பொது வாழ்க்கையில் இருந்து நேர்மையையும், நாணயத்தையும் முழுமையாக நீக்கவிட முடியாது; நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர் அரசுப் பதவியை வகிக்க அனுமதிக்க முடியாது என்பது மீண்டும் உறுதி செய்யப்பட்டு விட்டது."

— இவ்வாறு தீர்ப்பை ஆதரித்து ஜெயலலிதாவின் எதிரணியில் உள்ள தலைவர்களும் நடுநிலை நாடகமாடும் செய்தி ஊடகங்களும் கருத்து தெரிவித்துள்ளன. இப்படிச் சொல்லும் தலைவர்களில் பா.ஜ.க., பா.ம.க., ம.தி.மு.க., சமதா, ஜனதாவைச் சேர்ந்தவர்கள் இதே ஜெயலலிதாவின் முறைகேடுகளுக்கு நியாயம் கற்பித்தவர்கள்; சட்டத்தை வளைத்து வழக்குகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்குத் துணை போனவர்கள்தாம்.

இத்தீர்ப்பை வரவேற்கும் வடநாட்டு மற்றும் பார்ப்பன பத்திரிகைகள் - வானொளிகள் ஆகிய செய்தி ஊடகங்கள் தமது நடுநிலைத் தோற்றத்தைக் காத்துக் கொள்வதற்காக, "தேசிய அரசியலுக்கு மாறாக நடப்பதெல்லாம், ஜெயலலிதா - கருணாநிதி ஆகிய இரு திராவிடக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான - ஒருவரை ஒருவர் பழிவாங்கும் அநாகரிக அரசியலின் விளைவுதான்" என்று சித்தரிக்கின்றன. ஜெயலலிதா விவகாரம் - அதனால் எழுந்த சட்டச்சிக்கல் ஏதோ தமிழ்நாட்டுக்கே உரிய தனிச்சிறப்பான ஒன்று என்பதாகச் சித்தரிப்பது அப்பட்டமான பொய்யாகும்.

நாட்டின் அரசியல் அமைப்பு முழுவதுமே இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், ஆபாச, கிரிமினல்மயமான புற்று நோய் புரையோடியதாக இருக்கிறது. சமீபத்திய உச்ச நீதி மன்ற வழக்குகளே இதற்குச் சான்றுகளாக உள்ளன. இந்திரா - ராஜீவ், சந்திராசாமி - நரசிம்மராவ், வாஜ்பாயி - அத்வானி ஆட்சிக் காலங்களில் நடந்த, நடந்துவரும் பல ஆயிரம் கோடி ஊழல் விவகாரங்கள் எதிலுமே நீதி முடக்கப்பட்டதைக் கண்டோம். இப்போதும், அரசுத்துறை நிறுவனங்கள் விற்பனை, யூ.டி.ஐ. மோசடி, தெஹல்கா ஆயுத பேரம் போன்றவை கிடப்பிலே போடப்பட்டு விட்டன. மாநிலங்களிலும் நாட்டின் பல முக்கிய நகரங்களிலும் கிரிமினல் குற்றக் கும்பல்கள் அரசியலில் ஆதிக்கம் புரிகின்றன. கொலை - கொள்ளை - கடத்தல் - கற்பழிப்புகளில் ஈடுபடுபவர்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற, மந்திரிசபை உறுப்பினர்களாகவும் உள்ளனர். இப்படி அழுகி முடை நாற்றம் வீசும் அரசியல் அமைப்பில் வெடித்து வெளிவந்திருக்கும் ஒரு எடுத்துக்காட்டுதான் ஜெயலலிதா விவகாரம். ஆட்டுவிக்கும் கருவி கொண்டு ஆட்சி நடத்துவதிலும் தமிழ்நாட்டுக்கு முன்னோடிகளை மராட்டியத்திலும், பீகாரிலும் கண்டிருக்கிறோம்.

ஜெயலலிதாவைப் பதவியிழக்கச் செய்த இந்தத் தீர்ப்பு ஜெயலலிதாவுக்கு ஒரு தற்காலிகப் பின்னடைவுதான் என்றாலும், எதிர்த் தரப்புக்கும், நீதி-நேர்மைக்கும், அரசியல் தூய்மைக்கும் கிடைத்துள்ள வெற்றி என்பது கூட உண்மையல்ல. ஏனென்றால், இந்தத் தீர்ப்பு அரசியல் சட்ட நுட்ப அடிப்படையில்தான் வழங்கப்பட்டிருக்கிறது. இரண்டாண்டுகளுக்குமேல் தண்டனை பெற்ற ஜெயலலிதா, தேர்தலில் போட்டியிடும் தகுதியிழந்தவர்; அப்படிப்பட்டவரை முதல்வராக நியமித்தது சட்டவிதிகளின்படி செல்லாது என்பதுதான் தீர்ப்பு. ஒரு இலஞ்ச - ஊழல் குற்றவாளி பதவியில் நீடிப்பதால் மேலும் எவ்வளவு குற்றங்கள் புரிய முடியும், வழக்குகளைச் சாட்சியங்களைச் சீரழிக்க முடியும் என்கிற அடிப்படையில் பதவி பறிக்கப்படவில்லை. அதற்கான காரியங்களில் ஈடுபடுகிறார் என்று தெரிந்தும் அவர்மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஒருவேளை இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாகத் தண்டனை பெற்றவராக இருந்திருந்தால் அவர் பதவியில் நீடிப்பதற்குத் தடையில்லை. ஒரு பினாமியை முதல்வராக வைத்துக் கொண்டு வழக்குகளையும்

தொடர்ச்சி 7-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# உலகின் முதல்நிலை எதிரியான அமெரிக்காவின் பயங்கரவாதத்தை முறியடிப்போம்!

அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் மீதும், நியூயார்க்கில் உள்ள உலக வர்த்தக மைய கட்டிடங்களின் மீதும் நடைபெற்ற தாக்குதலில் சுமார் 6,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலில் இறந்த சாதாரண உழைக்கும் மக்களுக்காக உலகெங்கிலும் உள்ள மக்கள் வருந்துகின்றனர்; நாமும் வருந்துகிறோம்.

அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட ஏகாதிபத்திய அரசுகளும் புஷ் - டோனி பிளேர் போன்ற அதன் அதிபர்களும் பன்னாட்டு முதலாளிகளும் கூட வருந்துகின்றனர். மாண்டுபோன மக்களுக்காக அல்ல, நொறுங்கிச் சரிந்த பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளுக்காக அவர்கள் வருந்துகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக உலகத்தையே ஆட்டிப் படைக்கும் வல்லரசு என்ற திமிர் கொண்டு அலைந்த அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமே தாக்கப்பட்டு விட்டதால் ஏற்பட்ட அவமானத்தால் குமுறுகின்றனர்; பழிவாங்கப் போவதாக வெறிப்பிடித்து கூச்சலிடுகின்றனர். ''இது அமெரிக்காவின் மீது தொடுக்கப்பட்ட போர்'' என்று அலறுகின்றனர்.

இத்தகைய தாக்குதல்கள் நடந்தால் அதற்கு காரணமானவர்கள் யார் என்று புலனாய்வு செய்து கண்டுபிடிப்பதும், அவர்களை ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட அரசிடம் கோருவதும், பின்னர் அவர்களை விசாரித்து தண்டிப்பதும்தான் ஐ.நாவும் உலக நாடுகளும் பின்பற்றும் நடைமுறை. ஆனால் ''போலீசுக்காரன் சட்டத்தை பின்பற்ற மாட்டான்'' என்பது போல உலக போலீசுக்காரனான அமெரிக்கா இந்த நடைமுறையை எப்போதுமே பின்பற்றியதில்லை; இப்போதும் பின்பற்றவில்லை.

தாக்கியவர்கள் யார் என்பதை தக்க ஆதாரங்களுடன் உலக நாடுகளுக்கு தெரிவிக்காமலேயே பதில் தாக்குதலை தொடங்கி விட்டது அமெரிக்க வல்லரசு. இசுலாமிய பயங்கரவாதி பின்லேடன்தான் இந்த தாக்குதலை நடத்திய குற்றவாளி என்றும்; அவனுக்கு அடைக்கலம் கொடுத்திருப்பது தாலிபன் அரசு என்றும் கூறி ஆப்கானிஸ்தான் மக்கள் மீது போர் தொடுக்க படைகளை குவித்து வருகிறது. கேள்வி எதுவும் கேட்காமல் உலக போலீசுக்காரனாக அமெரிக்காவை அங்கீகரித்து உலக மக்கள் நடக்க வேண்டியது அவர்களின் கடமை என்று அமெரிக்கா கருதுகிறது. பத்திரிக்கைகளும், தொலைக்காட்சிகளும் இதை ஆதரித்து பிரச்சாரம் செய்து வருகின்றன.

''சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்'' என்ற போர்வையில் உலகளவில் தனது இராணுவ மேலாதிக்கத்தை மேலும் விரிவாக்கி நிலைநாட்ட இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறது அமெரிக்க மேல்நிலை வல்லரசு. அடுக்கி வைக்கப்பட்ட பிணங்கள், இறந்து போனவர்களின் உறவினர்கள் சிந்தும் கண்ணீர், இவை தோற்றுவிக்கும் அனுதாபம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு இன்னொரு மிகப்பெரிய கொலை வெறியாட்டத்திற்கு திட்டம் தீட்டுகிறது அமெரிக்க அரசு.

**உலகப் பொருளாதார ஆதிக்கச் சின்னமான உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்டதையடுத்து, பீதியோடு ஓடும் நியூயார்க் நகர மக்கள்.**



சற்றே சிந்தித்துப் பாருங்கள்! பென்டகன் தகர்க்கப்பட்டதற்காக நாம் எதற்காக வருந்த வேண்டும்? வியட்நாம் முதல் ஈராக் வரை உலக மக்களை இலட்சக்கணக்கில் குண்டு வீசிக் கொன்ற அமெரிக்க இராணுவத்தின் தலைமையகம் அது. அந்தக் கொலைகாரர்களின் கூடாரம் அழிந்ததென்றால் அதைக் கொண்டாடுவதுதானே நியாயம்?

உலக வர்த்தக மையம் என்பது என்ன? இந்தியா ,உள்ளிட்ட உலக நாடுகளின் தொழில்களையும் விவசாயத்தையும் அழித்து, கோடிக்கணக்கான மக்களை வேலையிழக்கச் செய்து, பட்டினிச் சாவுக்கு தள்ளும் பன்னாட்டு நிறுவனங்களின் அலுவலகங்கள் இயங்கும் இடம். அர்சத் மேத்தாவைப் போன்ற வர்த்தகச் சூதாடிகள் உலகத்தைக் கொள்ளையிட திட்டமிடும் சதிக் கூடாரம். அந்தக் கொள்ளையர்களின் கூடாரம் அழிந்ததென்றால் அதைக் கொண்டாடுவது தானே நியாயம்?

கொல்லப்பட்ட சாதாரண மக்களுக்காக வருந்துவோம். சதிகாரர்களும், கொலைகாரர்களுமான அமெரிக்க இராணுவ அதிகாரிகளுக்காகவும் உலக சுரண்டலாளர்களான அமெரிக்க முதலாளிகளுக்காகவும் கம்பெனி நிர்வாகிகளுக்காகவும் வருந்தத் தேவையில்லை. தனிநபர் அல்லது குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்ற இந்த மாதிரியான நடவடிக்கைகளால் அமெரிக்க வல்லரசை முறியடிக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்வோம். அதே நேரத்தில் அமெரிக்க அரசுதான் உலகின் மிகப்பெரிய பயங்கரவாதி என்பதையும் புரிந்து கொள்வோம்.

ஒசமா பின்லேடன் ஒரு இசுலாமியத் தீவிரவாதி என்பது உலகறிந்த உண்மை. ஆனால் அந்த பின்லேடனை ஆயுதமும் பயிற்சியும் அளித்து உருவாக்கியதே அமெரிக்க உளவு நிறுவனம்தான் என்பது உலகம் அறியாத உண்மை. ரசியாவை முறியடிக்க வேண்டும் என்ற தனது சொந்த



படிப்பகம்

www.padippakam.com

நோக்கத்துக்காக ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு இசுலாமிய மத போதையூட்டி அமெரிக்கா உருவாக்கிய தீவிரவாத குழுக்களில் ஒன்றுதான் தாலிபான். அமெரிக்காவின் கட்டளைப்படி தாலிபானை ஆட்சியில் அமர்த்தியது பாகிஸ்தான் அரசு. மக்கள் மேல் ஏவிவிடுவதற்காக வளர்த்த கடா தன் மார்பிலேயே பாய்கிறது என்றால் அதற்காக வளர்த்தவன் வயிறு எரியட்டும்; நாம் ஏன் வருந்த வேண்டும்?

''நிராயுதபாணிகளான மக்களைக் கொல்பவர்கள் பயங்கரவாதிகள்'' என்று குற்றம் சாட்டுகிறது அமெரிக்கா. பயங்கரவாதத்தின் இலக்கணம் இதுதான் என்றால் தனது போர்க்கப்பல்கள் தாக்கப்பட்டதற்குப் பதிலடி கொடுக்க ஹிரோஷிமா, நாகசாகி நகர மக்கள் மீது அணுகுண்டு வீசி இலட்சக்கணக்கில் அவர்களைக் கொன்றது யார்? வானத்திலிருந்து எரிகுண்டுகளை வீசி குழந்தைகளையும், பெண்களையும் கூட வியட்நாமில் தீ வைத்து எரித்துக் கொன்றது யார்? ஈராக்கின் பள்ளிகள், மருத்துவமனைகள், குழந்தைகள் காப்பகங்கள் மீதெல்லாம் ஏவுகணைகளை வீசிக் கொன்றது யார்? அமெரிக்க அரசுதான் உலகமகா பயங்கரவாதி!

தன் மீது நடத்தப்பட்ட தாக்குதலை உலக நாடுகளின் சுதந்திரத்தின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாக சித்தரிக்கிறார் அமெரிக்க அதிபர் புஷ். ஜனநாயகம், சுதந்திரம் என்ற சொற்களுக்கு எதிர்ப்பதம் ஒன்று உண்டென்றால் அது அமெரிக்க ஏகாதிபத்தியம் என்பதுதான். சொந்த நாட்டைச் சூறையாடிய பிலிப்பைன்சின் மார்கோஸ், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களையும், கம்யூனிஸ்டுகளையும் நரவேட்டையாடிய இந்தோனேசியாவின் சுகார்ட்டோ, தமிழ் மக்களின் ரத்தம் குடித்த இலங்கையின் ஜெயவர்த்தனே, பாகிஸ்தானின் இராணுவ சர்வாதிகாரிகள், ஈரானின் ஷா, வளைகுடாவில் இசுலாமிய அரசு என்ற பெயரில் மன்னராட்சி நடத்தும் ஷேக்குகள், சிலியின் பினோச்செட் மற்றும் பிற தென்னமெரிக்க சர்வாதிகாரிகள், நிகரகுவாவின் சமோசா, பனாமாவின் நோரிகா இன்னும் ஆப்பிரிக்க கண்டத்தின் இனக்குழு சர்வாதிகாரிகள்... ஆகிய இவர்கள் அனைவருக்கும் ஆதரவளித்தது அமெரிக்க அரசுதான்.



5,000-க்கும் மேற்பட்ட இந்தியர்களைக் கொன்ற போபால் விஷவாயு தாக்குதலில் பலியான இளம் குழந்தை.

அமெரிக்க முதலாளிகள் தமது நாடுகளில் கொள்ளையிடுவதற்கு எதிராக ஏழை நாட்டு மக்கள் போராடிய போதெல்லாம் ஆயுதமும், இராணுவமும் அனுப்பி ஜனநாயகத்திற்கும், சுதந்திரத்திற்குமான அவர்களது போராட்டத்தை ஒடுக்கியது அமெரிக்க அரசுதான்.

தென்னாப்பிரிக்க கருப்பின மக்களுக்கு எதிராக வெள்ளைநிறவெறி அரசுக்கு ஆதரவு, பாலஸ்தீன மக்களுக்கு எதிராக யூத வெறி பிடித்த இசுரேலுக்கு ஆதரவு... என அனைத்து வகையான விடுதலைப் போராட்டங்களின் எதிரியும் அமெரிக்க அரசுதான்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலி நாட்டின் கம்யூனிஸ்ட் தலைவர் அலண்டேயையும், ஆயிரக்கணக்கான மக்களையும் கொலை செய்து சிலியின் செம்புச் சுரங்கங்களைக் கைப்பற்றிக் கொண்டது அமெரிக்க அரசு; கம்யூனிசம் வெற்றி பெறாமல் தடுக்க கொரியாவின் மீது போர் தொடுத்தது; வியட்நாமில் கம்யூனிசத்தை ஒழிக்க 18 ஆண்டுகள் போர் நடத்தி இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தது. பொருளாதாரத் தடை விதித்து கியூபாவை நசுக்குகிறது.

உலக முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதற்கும், அமெரிக்க முதலாளிகள் உலகத்தைக் கொள்ளையடிப்பதற்கும் ஏற்ப தனது கைக்கூலி அரசாங்கங்களை எல்லா நாடுகளிலும் நிறுவுவதுதான் அமெரிக்க வெள்ளை மாளிகையின் பணி; அதற்கெதிராகக் குரல் கொடுக்கும் மக்கள் தலைவர்களைக் கொலை செய்யும் சதிக் கும்பல்தான் சி.ஐ.ஏ; இதற்கான அடியாள் படைதான் பென்டகன். உலக நாடுகளின் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பொசுக்குவதற்கான கொள்ளிக்கட்டைதான் அமெரிக்க சுதந்திர தேவி ஏந்தியிருக்கும் தீப்பந்தம்.

நியூயார்க்கிலும், வாஷிங்டனிலும் நடந்துள்ள இந்த விமானத் தாக்குதலை உலக சமாதானத்தின் மீது நடந்துள்ள தாக்குதலாக சித்தரிக்கிறது அமெரிக்க அரசு. உலக நாடுகளிடையே சமாதானம் நிலவினால் அதன் விளைவாக நட்டமடையும் முதல் நாடு அமெரிக்காதான். அமெரிக்க ஆயுத வியாபாரிகளின் விற்பனையை அதிகரிப்பதற்காகவும், உலகின் எல்லா பிராந்தியங்களிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காகவும் அமெரிக்கா தூண்டிவிட்ட போர்கள் ஏராளம். இன்று தாலிபான்கள் ஏந்தியிருப்பவைகூட அமெரிக்கத் துப்பாக்கிகள் தான். உலகின் மூலை முடுக்கெல்லாம் கொக்கோ கோலாவைப் போல துப்பாக்கியை விற்பனை செய்த மரண வியாபாரியான அமெரிக்காவிற்கு சமாதானத்தைப் பற்றிப் பேச என்ன அருகதை இருக்கிறது?

இது ஒரு நீண்ட யுத்தம் என்றும் பயங்கரவாதத்தை உலகிலிருந்தே ஒழித்துக்கட்டாமல் இந்த யுத்தத்தை நிறுத்தப் போவதில்லை என்றும் பிரகடனம் செய்கிறார் அமெரிக்க அதிபர் புஷ். இசுலாமியத் தீவிரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் உலகம் முழுவதிலும் தனது இராணுவ, அரசியல் மேலாதிக்கத்தை நிறுவுவதற்காக

கம்யூனிஸ்டுகளை ஒழிக்க வியட்நாம் மீது அமெரிக்கா நடத்திய போரின் பொழுது வீசிய நேபாம் குண்டுகளால், உடல் வெந்த நிலையில் ஓடி வரும் சிறுமி பான் தி கிம் புக் (நடுவில்).



www.padippakam.com

பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட உரிமம் பெறுவதுதான் அமெரிக்க வல்லரசின் நோக்கம். உலக வங்கி, உலக வர்த்தகக் கழகம், ஐ.எம்.எஃப் ஆகிய நிறுவனங்களின் மூலம் உலகில் உள்ள ஏழைநாடுகளின் மீது தனது பொருளாதார மற்றும் நிதி ஆதிக்கத்தை நிறுவியிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம், அரசியல் - இராணுவ ரீதியாகவும் தனது உலக மேலாதிக்கத்தை நிறுவிக் கொள்வதற்கு இதை ஒரு சாக்காக பயன்படுத்திக் கொள்கிறது. ஏற்கனவே தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரில் தனது இராணுவ மேலாண்மையை நிறுவ முயற்சி செய்து கொண்டிருக்கும் அமெரிக்க வல்லரசு, ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களின் பிணங்களின் மீது ஏறி நின்று தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முயல்கிறது.

ஈராக் மீதான யுத்தம், யுகோஸ்லாவியாவில் சிறு அளவிலான அணு குண்டுகள் வீசி இராணுவத் தாக்குதல், சூடான் மீது ஏவுகணை வீச்சு... என்று உலகின் எல்லா நாடுகளது உள் விவகாரங்களிலும் தலையிட்ட அமெரிக்கா, இப்போது ஆப்கானிலும் பாகிஸ்தானிலும் கால் வைக்கிறது. பயங்கரவாத எதிர்ப்பு, மனித உரிமை மீறல், ஜனநாயக மீட்பு என்பதெல்லாம் அமெரிக்க இராணுவ தலையீட்டையும், அப்பாவி மக்களைக் குண்டு வீசி கொல்வதையும் நியாயப்படுத்தும் முகாந்திரங்கள் தான்.

உலகமயமாக்கத்திற்கும், மறுகாலனியாக்கத்திற்கும், அமெரிக்க மேலாதிக்கத்திற்கும் எதிரான போராட்டம் அனைத்தையும் பயங்கரவாத நடவடிக்கையாகவே சித்தரிக்கிறது அமெரிக்க அரசு. கொக்கோ கோலாவிற்கும், ஃபோர்டுக்கும், என்ரானுக்கும், பில்கேட்சுக்கும் எதிரான போராட்டம் எந்த நாட்டில் நடந்தாலும் அதை அமெரிக்காவிற்கு எதிரான பயங்கரவாதம் என்று முத்திரை குத்தி அந்நாட்டில் இராணுவத் தலையீடு செய்யும் உரிமையை அமெரிக்கா கோருகிறது. இது ஒரு நீண்ட யுத்தம் என்று அதிபர் புஷ் கூறுவதன் உட்பொருள் இதுதான்.

நாம் இசுலாமியத் தீவிரவாதத்தை எதிர்க்கிறோம்; அமெரிக்க உழைக்கும் மக்கள் கொல்லப்பட்டதை கண்டிக்கிறோம். அதற்காக அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை நாம் ஆதரிக்க முடியாது. நீதி, நியாயம், மனிதாபிமானம், ஜனநாயகம் என்ற எந்தச் சொல்லையும் உச்சரிக்கும் அருகதைக்கூட அமெரிக்க அரசுக்கு கிடையாது. இன்று ஆப்கானிலும், பாகிஸ்தானிலும் அமெரிக்கா நுழைய அனுமதித்தால், நாளை அமெரிக்கப் படை காசுமீரில் நுழையும்; கன்னியாகுமரியிலும் நுழையும்.

அமெரிக்க மக்களின் துயரத்தை நாம் புரிந்து கொள்கிறோம். அதே நேரத்தில் உலக மக்களுக்கு அமெரிக்கா அளித்த துன்பத்தை அம்மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மாறாக, உலகை மேலாதிக்கம் செய்வதுதான் அமெரிக்காவின் தேசிய உணர்வு என்றால், அந்த ஏகாதிபத்திய தேசிய உணர்வை நாம் மதிக்கத் தேவையில்லை. ஆதிக்க உணர்வு சிந்தும் கண்ணீருக்கு நாம் இரக்கம் காட்டவும் தேவையில்லை.



ஈராக் மீது அமெரிக்கா ஏவிய பொருளாதாரத் தடையுத்தரவால், உயிர் காக்கும் மருந்துகள் கிடைக்காமல் உயிருக்குப் போராடும் சிறுவர்கள். இத்தடையுத்தரவு கொன்று குவித்த குழந்தைகள், சிறுவர்களின் எண்ணிக்கை கிட்டதட்ட ஐந்து இலட்சம்.

1984-ல் போபால் நகரில் அமெரிக்க நிறுவனமான யூனியன் கார்பைடு வெளியிட்ட நச்சுப் புகை 5000 இந்தியர்களைப் பலி கொண்டதே, நினைவிருக்கிறதா? அந்த நச்சுப் புகையால் இலட்சக்கணக்கான மக்கள் பையப்பைய இறந்ததும், ஊனமானதும் அவர்களது சந்ததியும் ஊனமாகிப் பிறப்பதும் நினைவிருக்கிறதா? அந்த நிறுவனம் இந்தியாவிலிருந்து வெளியேற்றப்படவில்லை. அந்நிறுவனத்தின் எவரெடி பேட்டரி இன்னும் விற்பனையாகிறது. அந்நிறுவனத்தின் அமெரிக்க தலைவர் ஆண்டர்சென் கைது செய்யப்படவில்லை. பின்லேடனை பிடிக்க ஆப்கானுக்கு அமெரிக்கப்படை வருவதைப் போல இந்தியப்படை அமெரிக்கா செல்லவில்லை. அந்த கொலைக் குற்றத்திற்காக இன்றுவரை யாரும் தண்டிக்கப்படவில்லை. இதை நினைத்து எத்தனை பேர் அழுதிருக்கிறீர்கள்?

அமெரிக்காவில் ஆறாயிரம் பேர் செத்ததற்காக அழுவது இருக்கட்டும்; முப்பது கோடி இந்தியர்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்களே அதற்குக் காரணம் யார் தெரியுமா? இந்திய உணவுக் கழகத்தில் தானியம் நிரம்பி வழிந்து எலி தின்று அழிந்தாலும் சரி, பட்டினியால் வாடும் ஏழைகளுக்கு இலவசமாக விநியோகிக்க முடியாது என்று மைய அரசு சொல்கிறதே - அதற்குக் காரணம் யார் தெரியுமா? இவ்வாறு இரக்கமில்லாமல் பேசுவதற்கு இந்திய அரசுக்கு உத்திரவிட்டது யார் தெரியுமா? உலக வர்த்தகக் கழகம் - உலக வங்கி. அதாவது அமெரிக்க வல்லரசு!

பட்டினிச் சாவு, அரசு மருத்துவமனைகளில் மருந்தின்றி மக்கள் சாவு, வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் தற்கொலை, உலகமயமாக்கத்தால் நொடித்துப்போன சிறு தொழிலதிபர்கள் தற்கொலை, கடன் தொல்லை தாங்காமல் விவசாயிகள் தற்கொலை, வேலையின்மை காரணமாக இளைஞர்கள் தற்கொலை, வறுமையினால் குடும்பம் குடும்பமாகத் தற்கொலை...

இந்தச் சாவுகளுக்கு எந்த பயங்கரவாதி காரணம்? அந்த பயங்கரவாத கும்பலின் மீது தாக்குதல் தொடுப்பது பற்றி சிந்தியுங்கள். அமெரிக்கச் சாவுக்கு அழுதது போதும்!

இசுலாமியத் தீவிரவாதம் ஆபத்தானது; ஒழிக்கப்பட வேண்டியதுதான்! எல்லா மதத் தீவிரவாதங்களும் ஒழிக்கப்பட வேண்டியது தான்! ஆனால் அமெரிக்க மேல்நிலை வல்லரசு என்ற இரத்தக் காட்டேரி உலகையே மேலாதிக்கம் செய்ய, இரத்தவெறியோடு அலைந்து கொண்டிருக்கும் மிகப்பெரிய பயங்கரவாத சக்தியாகும்.

'சர்வதேசப் பயங்கரவாதி' பின்லேடனை ஒழிப்பது என்ற பெயரில் தனது மேலாதிக்க பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட தார்மீக உரிமை பெறுவதில் அமெரிக்கா வெற்றி பெற்றுள்ளது. அந்த பயங்கரவாதத்தின் கோர விளைவுகளை உலகம் சந்திக்க இருக்கிறது. எனவே, உடனடி அபாயமாகவும், மிகப்பெரிய அபாயமாகவும் உள்ள அமெரிக்காவின் உலக மேலாதிக்க பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடுவதே உலக மக்களின் பிரதான கடமையாக உள்ளது.

அதேசமயம், இந்தியாவில் முசுலீம்களை அடக்கி ஒடுக்கி வைக்கக் கிடைத்திருக்கும் நல்ல வாய்ப்பாகக் கருதி அமெரிக்கா மற்றும் இசுரேலுடன் கூட்டு சேர்ந்து மிகத் தீவிரமாக செயல்படும் இந்துமத வெறிச் சக்திகளையும், வாஜ்பாய் அரசையும் நாம் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்; இந்தியாவை அமெரிக்காவின் இராணுவத் தளமாக மாற்றும் அதன் திட்டத்தை முறியடிக்க மக்கள் அணிதிரள வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com

## தலையங்கம் தொடர்ச்சி

- சாட்சியங்களையும் சீரழிப்பதற்கும் தடையில்லை. தண்டிக்கப்பட்ட குற்றவாளி எப்படி முதல்வரானார், இந்தப் பதவிக் காலத்தில் என்ன செய்தார் என்பதற்கும் விசாரணையும் இல்லை, தடையும் இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு மேல் என்ன, எவ்வளவு குறைந்த தண்டனை பெற்றாலும் அதிகாரமும் செல்வமும் புரளும் பதவியில் அமருவதற்கான உரிமை கிடையாது என்று பறிக்கப்படவில்லை.

ஜெயா-சசி கும்பல் மீது 46 இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் இருந்தபோதும் ஐந்தாண்டுகளில் இரண்டு வழக்குகளில் மட்டுமே தண்டனைத் தீர்ப்பு வழங்கும்படி நேர்ந்தது, ஜெயலலிதாவின் எதிர்த்தரப்புக்கு மட்டுமல்ல; நீதிக்கும் தோல்விதான். இவ்வளவு காலம் இழுத்தடித்து வழக்குகளை முடக்கி வைப்பதில் நீதித்துறையையே பயன்படுத்திக் கொண்டது ஜெயலலிதாவுக்கு வெற்றிதான். நீதித்துறை உட்பட ஒட்டுமொத்த அரசியல் அமைப்பும் சமுதாயமுமே இலஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகளுக்கு அப்பாற்பட்டதல்ல என்று எடுத்துக்காட்டுவதன் மூலம், தான் தண்டனைக்குரிய குற்றம் எதுவும் புரிந்துவிடவில்லை என்றும் சாதித்து வருகிறார், ஜெயலலிதா. அதில் பெருமளவு வெற்றியும் பெற்றுவிட்டார்.

அவரது அரசியல் எதிரியான கருணாநிதியைத் தவிர, நாட்டின் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஏதோ ஒரு சமயத்தில் ஜெயாவுடன் கூட்டுச் சேர்ந்து, அவருடைய குற்றங்களுக்கு வக்காலத்து வாங்கச் செய்வதில் வெற்றி பெற்று விட்டார். ஜெயா - சசி கும்பலின் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், உல்லாச - ஊதாரி வாழ்க்கையை நாட்டு மக்கள் அப்பட்டமாகவே அறிந்த பிறகும் அது மீண்டும் ஆட்சிக்கு வருவதை எதிர்த்தரப்பினால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அரசியல் சட்டவிதிகளை வைத்து நீதிமன்றங்கள் மூலமாகத்தான் ஜெயாவைப் பதவி யிழக்கச் செய்ய முடிந்ததே தவிர, ஜெயா - சசி கும்பலை ஆளத் தகுதியற்றவர் என்று நிராகரிக்குமாறு மக்களை நம்ப வைக்க முடியவில்லை. சட்ட நுட்ப ரீதியில் எதிர்த்தரப்பினர் வெற்றி பெற்றாலும் அரசியல் ரீதியில் தோற்றுப்போனார்கள். அதனால்தான் நீதித்துறை விலை போய்விட்டது, தனக்கு எதிரான தீர்ப்பு, சதிகாரர்களின் சூழ்ச்சியினால் வந்ததுதான் என்றும் இந்தப் பின்னடைவு தற்காலிகமானதுதான், மீண்டும் முதல்வராவேன் என்றும் ஜெயலலிதாவால் சவால்விட முடிகிறது. இது எப்படிச் சாத்தியமாகிறது? ஜெயலலிதா போன்ற குற்றவாளிகள் நாட்டின் அரசியல் சமுதாய அமைப்பில் அசைக்க முடியாதவாறு எங்கும் நிறைந்திருக்கிறார்கள்; அவருடைய எதிர்த்தரப்பிலும் கூட! ●

# ஆட்டம் போட்ட ரவுடிக் கும்பலை அடக்கியது வி.வி.மு.

**ம**துரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் இயங்கிவரும் விவசாயிகள் விடுதலை முன்னணி, கடந்த ஜூலை 16-ஆம் தேதியன்று உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் நடக்கும் முறைகேடுகளைக் கண்டித்துப் பேரணியும் ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டமும் நடத்தியது. தோழர் இராமர் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து கோரிக்கை மனுவைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள் ஆவன செய்வதாக உறுதியளித்தனர். ஆனாலும் அரசு மருத்துவமனையில் லஞ்ச ஊழலும் ஏழை நோயாளிகளிடம் அலட்சியமும் முறைகேடுகளும் களையப்படாமல் தொடர்ந்து நீடித்து வந்தன.

இந்நிலையில் தோழர் இராமர், கடந்த செப்டம்பர் முதல் நாளன்று உசிலை அரசு மருத்துவமனைக்கு நோயுற்ற தனது இரு குழந்தைகளையும் கூட்டிச் சென்று மருத்துவரைச் சந்தித்து, குழந்தைகளின் வாயிலும் உடலிலும் புண் ஏற்பட்டு ஆறாமல் உள்ளதை விளக்கினார். பொறுப்பிலிருந்த மருத்துவர் சுகந்தி, குழந்தைகளைத் திரும்பிக் கூட பார்க்காமல், உடலைப் பரிசோதிக்காமல் எதையோ சீட்டில் கிறுக்கிவிட்டு, அடுத்த நோயாளியை அழைத்தார். உடனே தோழர் இராமர், 'என்னம்மா இது? நான் சொன்னதைக் கேட்டு மருந்து எழுதித் தர்றீங்க; குழந்தைகளைப் பரிசோதித்து என்ன ஏதுன்னு பார்க்க மாட்டீங்களா; உள்ளபடியே குழந்தைகளுக்கு என்ன நோய்னு உங்களுக்கு எப்படித் தெரியும்? இப்படி அலட்சியமா மருந்து எழுதிக் கொடுத்து குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டா என்ன செய்யுறது? செய்யுற தொழில பொறுப்பா செய்யுங்க!'' என்று குமுறியதும், இதைப் பார்த்த மற்ற நோயாளிகளும் மருத்துவரைச் சூழ்ந்து கொண்டு ''ஏழை நோயாளிகள் என்றால் இளக்காரமா? காசு கொடுத்தாதான் ஒழுங்கா வைத்தியம் பார்ப்பீங்களா?'' என்று நீண்ட காலமாக உள்ள தமது ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தனர். சரமாரியாகக் கேள்வி எழுப்பினர்.

பொது மக்களின் கோபத்தைக் கண்டு பீதியடைந்த மருத்துவர்கள் நிலைமையைச் சமாளிக்க தமது கூட்டாளியான குரு ஒயின்ஸ் என்ற சீமைச்சாராயக் கடைக்காரருக்கு ''போன்'' செய்தனர். அங்கிருந்து ஆட்டோவில் வந்த ஐந்துபேர் கொண்ட ரவுடிக் கும்பல், தோழர் இராமரைச் சூழ்ந்து கொண்டு தாக்கியதோடு, மருத்துவமனையிலிருந்த புறநோயாளிகள் சிலரையும் உதைத்து ''இனி எவனாவது ஆஸ்பத்திரியில கேள்வி கேட்டா இது தாண்டா நடக்கும்'' என்று எச்சரித்துவிட்டுச் சென்றது.

இத்தாக்குதலைப் பற்றியும் தனக்கு நேர்ந்த அவமானத்தையும் புகார் மனுவாக எழுதி உசிலம்பட்டி போலீசு நிலையத்தில் தோழர் இராமர் முறையிட்டார். போலீசார், குரு ஒயின்ஸ் கடைக்கு ''போன்'' செய்து சமரசப்படுத்த முயன்றனர். இதைத் தோழர் இராமர் ஏற்க மறுத்து புகாரைப் பதிவு செய்யுமாறு உறுதியாக வலியுறுத்தியதும், அரசு மருத்துவமனை நிர்வாகத்திடம் ஒரு பொய்ப் புகார் மனு வாங்கி, தோழர் இராமர் மருத்துவமனையில் கலாட்டா செய்து, பெண் மருத்துவரைக் கொலை வெறியோடு தாக்கியதாகப் பொய்வழக்கு சோடித்து மதுரை சிறையில் அடைத்தனர். போலீசார் அளித்த பொய்ச் செய்தியை ''பெண் டாக்டரைத் தாக்க முயற்சி! வாலிபர் கைது!'' என்று தலைப்பிட்டு ''மாலைமலர்'' நாளேடு வாந்தியெடுத்தது. உசிலை வட்டத்தில் நீண்டக் காலமாகச் செயல்பட்டு வரும் விவசாயிகள் விடுதலை முன்னணியை அறிந்த பொதுமக்கள், நடந்த சம்பவத்தைக் கேட்டு அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் வெளிப்படுத்தினர். அரசு மருத்துவர்கள் - குரு ஒயின்ஸ் - போலீசு கூட்டணியின் ரவுடித்தனத்தை அம்பலப்படுத்தியும் இந்த அட்டூழியத்துக்குப் பதிலடி கொடுக்க உழைக்கும் மக்களை அறைகூவியும் உடனடியாக வி.வி.மு. சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டது.

இதைக் கண்டு அரண்டு போன குரு ஒயின்ஸ் கும்பல், வி.வி.மு.விடம் ''பிரச்சினையைப் பெரிதுபடுத்த வேண்டாம்; சமரசமாகப் போகலாம்'' என்று பேச்சு வார்த்தைக்கு வந்தது. இதன்படி, குரு ஒயின்ஸ் உரிமையாளர்கள், தோழர் இராமரின் சொந்தக் கிராமமான கருக்கட்டாம்பட்டி மந்தையில் பொதுமக்கள் முன் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்; அபராதமாக குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டும் என்று வி.வி.மு. அறிவித்த முடிவை குரு ஒயின்ஸ் கடையினர் ஏற்றுக் கொண்டனர். பொய்ப் புகார் கொடுத்த மருத்துவமனை நிர்வாகமும் பொய் வழக்கு சோடித்த போலீசும் இன்னமும் தொடர்ந்து பித்தலாட்டம் செய்து வருகின்றன. அதிகாரத் திமிர் படைத்த இக்கும்பலை அம்பலப்படுத்தி வி.வி.மு. தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகிறது.

ஆணவத்தோடு அதிக்கிரமத்தில் ஈடுபட்ட குரு ஒயின்ஸ் கும்பலின் கொட்டத்தை ஒடுக்கிய வி.வி.மு.வின் செயல்பாட்டைக் கண்ட உழைக்கும் மக்கள் ''இதுதான் அநியாயத்தைத் துணிவோடு எதிர்க்கும் உண்மையான நக்சல்பாரி அமைப்பு'' என்று பாராட்டி தமது நல்லாதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

— தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி,
உசிலை வட்டம்.

www.padippakam.com

## இந்து மதவெறியர்களின் சதி:

# அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு அடியாளாக இந்தியா?

ஒசாமா பின் லேடன் என்ற தனிமனிதனைப் பிடிப்பதற்காக, ஒரு நாட்டின் (ஆப்கான்) மீதே போர் தொடுக்கத் துடிக்கும் அமெரிக்காவின் மேலாதிக்க வெறிக்கு, விழுந்தடித்துக் கொண்டு ஆதரவளிக்கிறது இந்தியா. ஆதரவென்றால், ஏனோதானோவென்ற, வாய் வார்த்தை ஆதரவல்ல.

பிரதமர் வாஜ்பாயி அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷிடம், "இந்தியா, எவ்வித ஐயத்திற்கு இடமின்றியும், எவ்வித நிபந்தனைகள் இன்றியும் ஆதரவளிப்பதாக" புரோநோட்டில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்காத குறையாக உறுதியளிக்கிறார். மேலும், "பின்லேடனின் நடமாட்டம் பற்றியும், அவனது தீவிரவாதப் பயிற்சி முகாம்கள் பற்றியும் உளவுத் தகவல்கள் வேண்டுமா? இல்லை, உங்கள் நாட்டு போர் விமானங்களுக்கு பெட்ரோல் போடுவது போன்ற உதவிகளைச் செய்ய வேண்டுமா? இல்லை, இந்திய இராணுவத்தை உதவிக்கு இறக்கிவிட வேண்டுமா? எதையும் செய்யக் காத்திருக்கிறோம்" என நாட்டை ஆளும் இந்து மதவெறிக் கும்பல் வலியப் போய் அறிவிக்கிறது.

இத்துணைக்கும், அமெரிக்க அரசு இது நாள்வரை வாயைத் திறந்து வெளிப்படையாக, "இந்த உதவி வேண்டும்" என இந்திய அரசிடம் எந்தவிதமான கோரிக்கையையும் வைக்கவில்லை. இதை மைய அரசும் ஒப்புக் கொள்கிறது. பின் ஏன் இந்த அவசரக்குடுக்கைத்தனம்?

"ஒசாமா பின்லேடன் இப்பொழுது அமெரிக்காவின் முதல் எதிரி; காசுமீரில் தீவிரவாதத்தைத் தூண்டிவிட்டு வருவதால், அவன்தான் நமக்கும் எதிரி. எனவே, பின்லேடனையும், அவனுக்கு ஆதரவளித்து வரும் தாலிபானையும் தாக்கத் துடிக்கும் அமெரிக்காவுடன் ஒத்துழைத்தால் நமக்குத்தான் இலாபம். இதன் மூலம் காசுமீரில் முசுலீம் தீவிரவாதிகளைக் கட்டுக்குள் கொண்டு வரலாம். சந்தடி சாக்கில், தாலிபானுக்கு முழு ஆதரவு அளித்து வரும் பாகிஸ்தானையும் ரெண்டு தட்டு தட்டி வைக்கலாம். இவை மட்டுமின்றி தெற்காசியாவில் அமெரிக்காவின் நம்பகமான ஆளாக நடைபோடலாம்" என்ற ஆசைக் கனவுகளோடுதான் இந்து மத வெறிக் கும்பல் வலியப் போய் அமெரிக்காவிற்கு ஆதரவளித்தது.

இந்தியா, அமெரிக்காவுக்கு அடியாள் வேலை பார்ப்பதை முதலில் ஒத்துக் கொண்ட எதிர்க்கட்சிகள் கூட, பின்பு தயங்கத் தொடங்கின. அமெரிக்காவின் போர்வெறிக்கு எதிராக உலகெங்கிலும் எதிர்ப்புகள் வலுவடையத் தொடங்கியதாலும், உள்நாட்டில் முசுலீம்களின் ஓட்டுக்களை இழந்து விடுவோமோ என்ற அச்சத்தாலும், "ஆப்கான் மீதான போருக்கு ஐ.நா.வின் ஒப்புதலைப் பெற வேண்டும்" என்று எதிர்க்கட்சிகள் நியாயவானைப் போல பேசி வருகின்றன.

ஆனாலும், இந்துமதவெறிக் கும்பல், "கடந்த பத்தாண்டுகளாகவே இந்தியா முசுலீம் தீவிரவாதத்தை எதிர்கொண்டு வருகிறது. பாகிஸ்தான், சீனாவுக்கு எதிராக இந்தியா நடத்திய போர்களில் இறந்தவர்களை விட, காசுமீரில் பயங்கரவாதத்துக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகம். எனவே, அமெரிக்காவை ஆதரிப்பதில் தவறில்லை. வரலாற்றின் சரியான பக்கம் நாம் நிற்க வேண்டும்" என்று கூறி, இந்து தேசிய வெறியைத் தூண்டிவிட்டு, தனது அமெரிக்க அடிவருடித்தனத்தை மூடி மறைத்துவிட முயலுகிறது.

"முசுலீம்களுக்கு எதிரான இந்து - கிறிஸ்தவக் கூட்டணி உருவானால் நல்லது" என்று கூடக் கூறிவரும் இந்து மதவெறிக் கும்பல், பலவிதங்களில் தங்களின் அடியாளாகும் விருப்பத்தைக் காட்டிக் கொண்ட பின்னரும்கூட, அமெரிக்கா, பின்லேடன் - தாலிபானுக்கு எதிராகத் தான் நடத்தவுள்ள 'புனித'ப் போரில் இந்தியாவைக் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்ளவில்லை. "எந்த பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாக அறிவிக்க வேண்டும்" என இந்துமதவெறிக் கும்பல் அமெரிக்காவிடம் கெஞ்சிக் கூத்தாடி வந்ததோ, அதே பாகிஸ்தானைத் தனது கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டு, இந்தியாவை ஒதுக்கி வைத்து விட்டது.

இதன் பிறகுதான் இந்து மதவெறிக் கும்பல் முசுலீம் மத பயங்கரவாதிகளை எதிர்ப்பதற்கு "உலகக் கூட்டணி" பற்றி பேசத் தொடங்கியது. ஆனாலும், அவர்கள் தமது கூட்டாளி நப்பாசையை முழுமையாகக் கைவிடவில்லை. இளம் வாலிபர்களை வளைக்கும் வேசியைப் போல, அமெரிக்காவைத் தன் பக்கம் இழுத்துவிடத் துடிக்கின்றனர்.

"தாலிபானை வளர்த்துவிட்டதே பாகிஸ்தான்தான் என்பது அமெரிக்காவுக்குத் தெரியாதா? பயங்கரவாதத்துக்கு உதவும் நாட்டைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு பயங்கரவாதத்தை எதிர்க்க முடியுமா? பாகிஸ்தானில் உள்நாட்டுக் கலவரம் மூண்டுவிட்டால், பாகிஸ்தான் பின்வாங்கி விடும். முசுலீம் பயங்கரவாதம் உங்கள் நாட்டைத் தாக்கியவுடன் போர் தொடுக்கும் அமெரிக்கா, பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட எங்களையும் சேர்த்துக் கொள்ளக்கூடாதா?" என்றெல்லாம் இந்துமதவெறிக் கும்பல் பணிவுடன் கூறி, அமெரிக்காவுக்குத் தூண்டில் போடுகிறது. மேலும், "பயங்கரவாதத்தை எதிர்க்க ஜனநாயக நாடுகளின் ஒத்துழைப்புதான் வேண்டுமே தவிர, சர்வாதிகாரிகளின் உதவியல்ல" என பாகிஸ்தானோடு சக்களத்தி சண்டையில் இறங்குகிறது.

"ஆப்கானின் அண்டை நாடு பாகிஸ்தான்; தாலிபான், பின்லேடன் பற்றிய உளவுத் தகவல்களை பாகிஸ்தானால் எளிதில் தரமுடியும்" போன்ற இராணுவ முக்கியத்துவம் ஒருபுறமிருக்க, ஆப்கானுக்கு எதிரான போரில், அமெரிக்காவுக்கு முசுலீம் நாடுகளின் ஆதரவு அரசியல் ரீதியாகவே தேவைப்படுகிறது. ஏனென்றால், பாலஸ்தீன பிரச்சினையில், முசுலீம் எதிர்ப்பு - யூத இனவெறியனாக அம்பலப்பட்டுப் போயுள்ள அமெரிக்கா, இந்தப் போரின் மூலம் மேற்காசிய முசுலீம் மக்களின் வெறுப்பை மேலும் சம்பாதித்துக் கொள்ள விரும்பவில்லை. இந்தப் போர் முசுலீம் மத பயங்கரவாதிகளுக்கு எதிரானதே தவிர, முசுலீம் நாடுகளுக்கோ, மக்களுக்கோ எதிரானதல்ல எனக் காட்டிக் கொள்ள விரும்புகிறது.

இந்த அரசியல் கணக்கைப் புரிந்து கொள்ளாத இந்து மதவெறிக் கும்பல், தெரு நாயைப் போல அமெரிக்காவின் காலைச் சுற்றி சுற்றி வருகிறது. இந்த விசுவாசத்துக்குக் கிடைத்த பரிசுதான் பொருளாதாரத் தடைகள் நீக்கம்.

காசுமீரில் அப்பாவி இந்துக்களையும் சீக்கியர்களையும் முசுலீம் மத பயங்கரவாதிகள் கொன்று குவித்து வருகிறார்கள். எனவே, ஆப்கான் மீதான அமெரிக்காவின் போருக்கு அடியாள் வேலை பார்ப்பதில் தவறில்லை என்கிறார்கள் இந்து மதவெறியர்கள். இதே நியாயப்படி பார்த்தால், ஆயிரக்கணக்கான அப்பாவி முசுலீம்களை இந்து மதவெறிக் கும்பல் கொன்று குவித்து வருவதைக் காரணம் காட்டி, எந்தவொரு முசுலீம் நாடும் இந்தியா மீது படையெடுக்கலாம். எனவே, பின்லேடனையும், இசுலாமிய தீவிரவாதத்தையும் ஊட்டி வளர்த்த அமெரிக்காவிற்கு மட்டுமல்ல, இந்துமத பயங்கரவாதிகளுக்கும் முசுலீம் மத பயங்கரவாதிகளை எதிர்த்துப் போராட எவ்வித

www.padippakam.com

அருகதையும் கிடையாது.

''காசுமீரில் முசுலீம் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டி தேசிய ஒருமைப்பாட்டைக் காக்கும் நோக்கத்திற்காகத்தான் அமெரிக்காவை ஆதரிக்கிறோம்'' என்பது இந்து மத வெறிக் கும்பலின் இன்னொரு வாதம். அமெரிக்காவோடு கூட்டணி சேர்ந்துவிட்ட முஷாரப்பும், ''இந்தியா வசமுள்ள காசுமீரை விடுதலை செய்யும் நோக்கத்தோடுதான் தாலிபானைத் தியாகம் செய்துவிட்டதாக''க் கூறுகிறார். ''அமெரிக்கா ஆதரவுடன் காசுமீர் விடுதலை'' என்று பேசி, தனது 'உள்நாட்டு ''ஜிகாதி''களைச் சாந்தப்படுத்துகிறார். ஆக, இன்று காசுமீர் பிரச்சினையின் தீர்வு மிகவும் வெளிப்படையாகவே அமெரிக்காவின் கட்டைப் பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப் பட்டுவிட்டது.

இன்று, முசுலீம் மத பயங்கரவாதத்தை ஒழிக்க ஆப்கான் மீது போர் தொடுக்க உரிமை கோரும் அமெரிக்கா, நாளை முசுலீம் மக்களை தாஜா செய்வதற்காக, இந்து மத வெறி - அரசு பயங்கரவாதத்தைக் காட்டி காசுமீரின் மீது கைவைக்கும். இன்று, ஆப்கானில் முசுலீம் மத பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்ட அமெரிக்கா தொடுக்கும் போரின் பின்னே பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்களின் இலாபம் மறைந்து கொண்டிருக்கிறது என்றால், நாளை, காசுமீர் பிரச்சினை, பன்னாட்டு கேளிக்கை / சுற்றுலா நிறுவனங்களுக்குச் சாதகமாகத் தீர்க்கப்படும். இந்தப் பன்னாட்டு நிறுவனங்களை எதிர்த்துக் கொண்டு இந்து மதவெறியர்களால் எந்த ராஷ்டிரத்தையும் காக்கவும் முடியாது; கட்டவும் முடியாது.

இதனால்தான் ஜார்ஜ் புஷ், ''மேற்காசியாவைப் போலவே, தெற்காசியாவிலும் அமெரிக்காவுக்கு சுவாரசியமான அனுபவங்கள் காத்திருக்கின்றன'' என்று மதிப்பிடுகிறார்; ''இந்தியாவும், பாகிஸ்தானும் தங்களின் உறவு குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும்'' என ஆலோசனை தருகிறார்.

தெற்காசியாவின் பேட்டை ரௌடியாக இந்தியாவை அமெரிக்கா அங்கீகரிக்க தயார் என்றால், அதற்காக எதையும் தியாகம் செய்ய இந்திய அரசும் தயாராகவே இருக்கிறது. இதற்காகத்தான் இந்திய நாட்டின் பொருளாதாரம் அமெரிக்காவுக்குத் திறந்துவிடப்படுகிறது; இதற்காகத்தான் காசுமீரில் அமெரிக்காவின் தலையீடு அனுமதிக்கப்படுகிறது. இதற்காகத்தான், அமெரிக்காவின் தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர இந்தியா சம்மதிக்கிறது. இதற்காகத்தான், இந்தப் போரின்பொழுது, மும்பய், பூனா, கோவாவில் இருக்கும் விமானப் படைத் தளங்களை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்ள சம்மதம் தெரிவிக்கப்படுகிறது. இதற்காகத்தான் ஆப்கான் மீதான போரில் அமெரிக்காவின் அடியாள்படையாகச் செயல்படவும் தயார் என இந்து மதவெறிக் கும்பல் அறிவிக்கிறது.

அமெரிக்காவும் சரி, இந்தியாவும் சரி, ''இந்தப் போர் முசுலீம் பயங்கரவாதிகளுக்கு எதிரானது தானே தவிர, அப்பாவி மக்களுக்கு எதிரானது அல்ல'' எனத் திரும்ப திரும்பக் கூறி வருகின்றனர். ஆனால், முசுலீம் பயங்கரவாதிகள் மீது முதல் அடி விழும் முன்பே, உழைக்கும் மக்களின் மீது அடி விழத் தொடங்கிவிட்டது. போர் அறிவிப்பு வெளியானவுடனேயே சரியத் தொடங்கிய இந்திய ரூபாயின் மதிப்பு, இன்னும் நின்றபாட்டைக் காணோம்; வாஜ்பாயி, விலைவாசி உயர்வுக்குத் தயாராகும்படி மக்களை எச்சரிக்கிறார். அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்காக நடத்தப்படும் இந்தப் போருக்கு நாம் ஏன் தண்டம் கட்ட வேண்டும்? நாம் ஏன் தியாகம் செய்ய வேண்டும்?

இந்தப் பொருளாதாரத் தாக்குதல் ஒருபுறமிருக்க, ''தடா''வைப் போல, பயங்கரவாதத்தை ஒடுக்க புதிய சட்டம் கொண்டு வரவும் இந்து மதவெறிக் கும்பல் திட்டமிடுகிறது. அப்பாவி முசுலீம்களின் மீதும், போராடிய தொழிலாளர்களின் மீதும், இன விடுதலைப் போராளிகளின் மீதும், புரட்சியாளர்களின் மீதும்தான் ''தடா'' ஏவிவிடப்பட்டதே தவிர, மதவெறி பயங்கரவாதத்தை அது ஒடுக்கிவிடவில்லை. ஏதாவதொரு இந்து மதத் தீவிரவாதியின் மீதாவது ''தடா'' பாய்ந்ததாகச் சொல்ல முடியுமா? இந்தப் போர் முசுலீம் பயங்கரவாதத்தை ஒழிக்கிறதோ இல்லையோ, உழைக்கும் மக்களின் அற்ப சொற்ப ஜனநாயக உரிமைகளுக்கும், வாழ்க்கைக்கும் வேட்டு வைத்து விடும்.

எனவே, இது அநீதியான போர். இந்த அநீதியான போர் ஐ.நா.வின் அங்கீகாரம் பெறுவதால் நீதியான போராக மாறிவிடாது. இந்த அநீதியான ஆக்கிரமிப்பு போர் ஆப்கான் மீது மட்டும் தொடுக்கப்பட்டதல்ல; தெற்காசியாவின் அமைதி, சமாதானம், மக்களின் நல்வாழ்வு ஆகியவற்றின் மீது தொடுக்கப்பட்ட போர். ஆகையால், தெற்காசிய மக்கள் கூட்டாக இணைந்து இந்த ஆக்கிரமிப்புப் போரை எதிர்க்க வேண்டும். அது ஒன்றுதான் தெற்காசியாவில் அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கும், தெற்காசியாவில் பிற்போக்கின் கோட்டையாக உள்ள இந்தியாவின் பேட்டை ரௌடி தனத்திற்கும் முடிவு கட்டும்.



அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு போருக்கு ஆதரவாக தீவிரவாத உருவ பொம்மையை எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் இந்து மதவெறியர்கள்.

● முத்து

www.padippakam.com

# உலகின் கொடிய பயங்கரவாதி அமெரிக்காவே!

அமெரிக்காவின் மீது நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுக்க அமெரிக்கா படைகளைக் குவித்து வருகிறது. பயங்கரவாதத்தை முறியடிப்பது என்ற பெயரால் அமெரிக்கா மேற்கொள்ளும் போர் நடவடிக்கைகளை உலகமே ஓரணியில் திரண்டு ஆதரிப்பதாக பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் ஓயாமல் பிரச்சாரம் செய்து வருகின்றன. ஆனால் உலகின் பல்வேறு நாடுகளது மக்கள் அமெரிக்காவின் மேலாதிக்கப் போர்வெறியாட்டத்தை ஆதரிக்கத் தயாராக இல்லை. உலகெங்கும் - அமெரிக்காவிலும் கூட கண்டன ஆர்ப்பாட்டங்கள் பெருகி வருகின்றன. அமெரிக்காவின் புரட்சிக் கம்யூனிஸ்டு கட்சி வெளியிடுள்ள அறிக்கையை இங்கே தருகிறோம்.

செப்டம்பர் 11, 2001 அமெரிக்க ஐக்கிய நாடுகள். அதிர்ச்சி - எஃகு, காண்கிரீட் மலைகள் நொறுங்கி விழுகின்றன. இழப்பு - ஒரு கணம் உயிர்கள் சிதறடிக்கப்படுகின்றன.

இடிபாட்டு மலைகளுக்கிடையே தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடுகிறார்கள்.

வானிலிருந்து பயங்கரம்.

காணாமல்போன தன் கணவனின் படத்தை வைத்துக் கொண்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்புள்ள வரிசையில் ஒரு மாநிறத் தோலுடைய பெண் நிற்கிறாள். கூர்ந்து பார்த்தால் தன் கணவன் திரும்பக் கிடைத்துவிடுவான் என்பதைப் போல அந்தக் காட்சியைக் கண்கள் தடவிப் பார்க்கின்றன.

ஒரு நீல நிறக்கண் இளைஞன் தன் காதலி பற்றிய செய்திக்காக பதற்றத்துடன் காத்திருக்கிறான். நம்பிக்கை - பங்காளிகள், நண்பர்கள், சக ஊழியர்கள் மரணமடைந்து போனார்கள் என்ற எதார்த்தத்தை நோக்கித் திரும்புகிறது. எங்கிருந்தோ வந்த ஒரு மோதல் அவர்களின் அன்றாட வாழ்க்கை யில் கொடிய முறையில் குறுக்கீடு செய்து பறித்துக் கொண்டு போய்விட்டது.

திடீரென்று பாக்தாத், பெல்கிரேடு, சூடான், பாலஸ்தீனத்தின் மேற்குக்கரை, வியத்நாம், பனாமா, இந்தோனேசியா, ஹிரோஷிமா, வீகுயிஸ் ஆகிய நகரங்களையும் நாடுகளையும் நியூயார்க் நினைவுபடுத்தி விட்டது.

காட்சிகள் நமது மனதை நிரப்புகின்றன. அமெரிக்க விமானங்கள் குண்டு மழை பொழியும்போது தமது குழந்தைகளை அணைத்துக் கொண்டு பாக்தாத் நகரத் தெருக்களில் ஓடும் தாய்மார்கள்; உயிர் பிழைத்திருக்கத் தேவையான குடிநீர் அமெரிக்கக் குண்டு வீச்சுக்களாலும் தடைகளாலும் வேண்டுமென்றே நஞ்சு கலக்கப்பட்டு தமது குழந்தைகள் மாண்டு போவதை காணும் ஈராக்கியப் பெண்கள்; பாலஸ்தீன மேற்குக் கரையில் அமெரிக்கத் ஏவுகணைகளால் கொல்லப்பட்ட மகன்களின் சவப்பெட்டிகளைக் குடும்பம் குடும்பமாக சுமந்து செல்லும் மக்கள்; அமெரிக்க குரூயிஸ் ஏவுகணை வீச்சால் சிதைந்து போன சூடான் நாட்டில் மருந்துத் தொழிற்சாலையில் இருந்து எழும்ப முயலும் தொழிலாளர்கள்; விண்வெளியில் இருந்து அமெரிக்கக் குண்டு வீச்சுக்களில் இருந்து தப்பிப்பதற்கு ஓடி ஒளியும் பெல்கிரேடு மக்கள்; வாஷிங்டன் நடத்திய இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு காரணமாக தமது காதலர்கள், மகன்கள், மகள்கள் ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்டிருக்கும் சிலி விளையாட்டு மைதானத்தைக் கண்டு நிரந்தரமாக உறைந்து போயிருப்பவர்கள்; அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. தயாரித்தளித்த அரசியல் எதிரிகளின் பட்டியலைத் தமது சட்டைப் பையில் திணித்துக் கொண்டுள்ள இந்தோனேசிய இராணுவக் கொலைப் படைக் குழு. ஆயிரக்கணக்கானோரைக் கொன்று ஆறுகளை நிரப்பும் பயங்கரத்தால் திகைத்துப் போனவர்கள் - இந்தக் காட்சிகள் நமது மனதை நிரப்புகின்றன.

ஹிரோஷிமா, வியத்நாம், பாக்தாத்... போர் நமது வீடுகளுக்கே வந்துவிட்டது. உலக வர்த்தக மையமும், பென்டகனும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிதி மற்றும் இராணுவக் குறியீடுகளாக இருந்தபோதும், தாக்குதலின் விளைவாக பல அப்பாவி மக்கள் யதார்த்தத்தில் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இதற்கு யார் பொறுப்பு? அமெரிக்க மக்களை அழிவுப் பாதையில் தள்ளியது யார்?

அமெரிக்காவின் அதிகாரபுரி தனது விரலை மத்திய கிழக்கை நோக்கிச் சுட்டுகிறது. ஆனால் பதில், அமெரிக்க மண்ணிலேயே கிடக்கிறது. (அதாவது அமெரிக்காவேதான் இதற்குக் காரணமாக உள்ளது). தங்கள் இடையறாத உலகச் சுரண்டலாலும், இராணுவ நடவடிக்கைகளாலும் உலக மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தி, எண்ணற்ற குற்றங்கள் புரிந்தன, இந்த ஏகாதிபத்தியங்கள். இவை தாம் உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான மக்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசை வெறுக்கும் சூழலை உருவாக்கின.

நமது கண்களை மறைத்திருந்த தூசு அகன்று தெளிவாகும் போது, அமெரிக்க அதி

ஆப்கானிஸ்தான் மீதான போர் நடவடிக்கைகளை எதிர்த்து அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் ஆர்ப்பாட்டம்.



www.padippakam.com

காரக் கட்டுமானமும், அதன் இரத்த வெறி பிடித்த இராணுவ இயந்திரமும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் தவிர்க்க முடியாத பின் விளைவுகளால், உலகின் மிகவும் சக்தி வாய்ந்த நாட்டின் மக்கள் பணயக் கைதிகளாக பிடிப்பட்டிருப்பதைத் தாமே காண்கிறார்கள். உலகம் முழுவதிலு முள்ள மக்களுக்கெதிரான பயங்கரங்களை, நியூயார்க்கிலும் வாஷிங்டனிலும் சிந்திய கண்ணீரை விட ஒரு ஆயிரம் மடங்கு பெருகச் செய்யும் பயங்கரங்களை - நிரந்தி ரமாக்கி விட்டிருப்பதோடு, இந்தக் கல்நெஞ் சக்கார ஏகாதிபத்தியவாதிகள் இப்போது, இதேமாதிரியான பேரழிவை தமது சொந்த மிருகத்தின் அடி வயிற்றில் ஏற்படுத்துமாறு அழைக்கிறார்கள்.

மேலும் இப்போது தமது பதிலடிக்கு ஆதரவளிக்குமாறு மக்களை அழைக்கி றார்கள். நீதி மற்றும் போர் பற்றிப் பேசுகி றார்கள். இல்லை; முடி யாதென்று நாம் சொல்வோம்.

இந்த மேலாதிக்க வெறியர்கள் தமது போர்ப் பாதையைத் தொடர்வதற்கான உரிமை கிடையாது. உலகம் முழுவதும் அள வற்ற வேதனைக்கும் துயரத்துக்கும் அவர்கள் மூலக்காரணமான வர்கள். இதுவரை பெயர் குறிப்பிடாத நாடுகளுக்கும் இலக்குக ளுக்கும் எதிரான போர் - இராணுவ நடவடிக்கைக ளுக்கான அவர்களின் தற்போதைய முயற்சி களை நாம் தீவிரமாக எதிர்க்க வேண்டும்.

இந்த அதிர்ச்சியிலிருந்து பின்வரும் உண்மையை அடைந்திருக்கிறோம்; உலகச் சுரண்டலாளர்களுக்கு - பெருந்திரளான மக் களைக் கொன்ற கொலைகாரர்களுக்கு இந் தப் பயங்கரத்திற்குப் பதிலடி கொடுப்பதற்கு எந்த உரிமையுமில்லை. அவர்களால் மேலும் அழிவையும் அநீதியையும்தான் கொண்டு வர முடியும். அந்தச் சக்திகளுடன் சேர்வதும், அவர்களிடம் பாதுகாப்பைக் கோருவதும் இப்பூமியிலுள்ள மக்களுக்கு எதிராக அவர்கள் மேலும் பல குற்றங்கள் புரிவதை மட்டுமே ஊக்குவிக்கும்.

இசுரேலிய ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அரேபிய இளைஞர்கள் உற்சாகமாகக் கொண்டாடும் படங்களைக் காட்டி பயங்கர பீதியுற்று, பழிவாங்குங்கள் என்று அவர்கள் அழைக்கிறார்கள். ஆனால், மத்திய கிழக் கிலும் உலகின் பிற பகுதிகளிலும் உள்ள மக்கள் செப்டம்பர் 11 நிகழ்ச்சிகளுக்காக ஏன் கொண்டாடுகிறார்கள் என்பதை நாம் கேட்க வேண்டியிருக்கிறது; அப்பாவிகள் மாண்டு போனார்கள் என்பதற்காக அல்ல, படுகொலைகள் புரிந்து விட்டு, தன்னை யாரும் வெல்ல முடியாது என்று பீற்றிக் கொண்டிருந்த ஒரு ஆணவமிகுந்த வல்ல ரசு கூட தாக்குதலில் இருந்து தப்ப முடியாத இலக்காக உள்ளதை நிரூபித்துக் காட்டியதற் காகக் கொண்டாடுகிறார்கள்.

●○●

நமது துன்பம் - வேதனையை மூலதன மாகக் கொண்டு, தங்களின் பிரார்த்த னையில் இணைந்து கொள்ளுமாறு ஆட்சி யாளர்கள் அழைக்கிறார்கள். ஆனால் மாண்டு போனவர்களை மக்கள் நினைவு கூறும்போது அதிகாரக் கட்டுமானம் என்ன செய்கிறது? மேலும் போர் மற்றும் போலீசு அரசின் ஒடுக்கு முறையைக் கட்டவிழ்த்து விடுகிறது. உலக மக்களை வேட்டையாடிக் கொண்டே அவர்களைப் பாதுகாப்பதாகப் பேசுகிறார்கள்; கொலைப்பட்டியலைத் தயார் செய்கிறார்கள், தாக்குதல் நடவடிக் கைகளில் ஈடுபடுகிறார்கள், பல புதிய ''தாதா''த்தனமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

அவர்கள் பயங்கரத்தைப் போர் மூலம் முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறுகி றார்கள்; மேலும் பெரிய பயங்கரங்களைக் கொண்டு வருவதற்காக இராணுவத்தைத் தயார் செய்கிறார்கள். அவர்களோடு இணைந்து அவர்களின் கொடிகளை அசைக்கும்படி நம்மிடம் அவர்கள் கோருகி றார்கள். முடியாது.

தற்போதைய பதற்றத்தின் மத்தியில், வரலாற்றுப் படிப்பினைகளை நாம் நினைவு கூறுகிறோம். இன்னொரு பியர்ல் துறை முகத் தாக்குதல் போன்ற நிகழ்ச்சி என்று அவர்கள் பேசுகையில், அன்று - இரண்டாம் உலகப் போரின் போது, மக்கள் தமது சொந்தப் பாதுகாப்புக்கான பயபீதியை அமெரிக்க அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டு ஜப்பானியர்கள் - அமெரிக்கர்கள் பலரைக் கைது செய்து, அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து அவர் களை வதைமுகாம்களில் அடைத்தது, நமது நினைவுக்கு வருகிறது. அமெரிக்க ஆட்சி யாளர்களை எதிர்த்த எவரையும், எதிரிக்கு உதவியும் புகலிடமும் கொடுப்பதாக முத்திரை குத்த முயன்றதை நாம் அறிவோம்.

இந்தக் குற்றங்களை நினைவு கூறுவது, இம்மாதிரியானவைத் திரும்பவும் நிக ழாமல் தடுத்திடும் நமது உறுதியைப் பலப் படுத்தும். அவர்களது போர் நடவடிக்கை களின் பின்னே, அவர்களின் கொடியின் பின்னே அணிவகுக்கும்படி அதிகாரபூர்வ மாகவோ, அதிகாரபூர்வமற்ற முறையிலோ நிர்ப்பந்தித்து நம்மை அடி பணிய வைத்துவிட முடி யாது. அரேபிய மக்கள் மீதான இந்த அசிங்க மான மிரட்டல்கள், தாக்குதல்களில் உள்ள நச்சுத்தனமான தர்க்கத்தை நம்மால் அறி ய முடியும்.

இழந்துவிட்ட அன்புக்குரியவர்களுக் காக மக்கள் துக்கம் அவ தானிக்கையில், நாம் ஒருவரை ஒருவர் ஆறுத லாகத் தழுவிக் கொள்ளு கையில், நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்று அக்கறையோடு விரும்புபவர்கள் உலக மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்ட வேண்டி யதும் இந்த அதிகாரக் கட்டமைப்பின் குற்றங்க ளுக்கு எதிராக அவர்களோடு இணைந்து நிற்க வேண்டியதும் ஒவ்வொரு போர் மற்றும் ஒடுக்குமுறை நடவடிக்கைக்கு எதி ரான நமது எதிர்ப்பை வலுப்படுத்துவதும் அவசியமானதாகும்.

நமது எதிர்ப்பைக் கட்டி எழுப்பு கையில், ஒரு புதிய போரைச் சுமத்துகின்ற இந்த ஒடுக்குமுறையாளர்களின் தன்மை யைப் பற்றியும், இந்த நாட்டு அல்லது இந்த உலக மக்களின் நலன்களுக்காக ஆட்சி நடத் துவதாகக் கூறும் இந்த ஆணவ - அகங்கார மிருகங்களின் தன்மை பற்றியும் நாம் தெள்ளத்தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம். அவர்கள் அதிகாரத்தில் இருக்கும் வரை, அவர்களுடைய அதிகார அமைப்பிலிருந்து வரும் பயங்கரங்கள் வானத்திலிருந்து மழை பொழிவதைப் போல தொடரவே செய்யும்.



**உலக மேலாதிக்க வல்லரசு அமெரிக்கா மீதான தாக்குதலை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் பாலஸ்தீன சிறுவர்கள்.**

**புரட்சிக் கம்யூனிஸ்டு கட்சி,**
**அமெரிக்க ஐக்கிய நாடுகள்.**
செப்.14, 2001.


படிப்பகம்

www.padippakam.com



# சாதிவெறி அட்டூழியம்: இன்னுமொரு தேசிய அவமானம்

கர்நாடக மாநிலத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட பெண்மணியை நிர்வாணமாக்கி வீதிகளில் அடித்து இழுத்து வந்து சாதிவெறியர்கள் நடத்திய வன்கொடுமையைக் கண்டு, நாடே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது.

கர்நாடக மாநிலத்தின் வடக்கேயுள்ள பெல்லாரி மாவட்டத்தில் உள்ளது வானேனூர் கிராமம். இக்கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், தான் காதலித்து வந்த மிகவும் பிற்பட்ட சாதியைச் சேர்ந்த இளம் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு சாதிவெறியர்களுக்கு அஞ்சி கிராமத்தை விட்டே தனது மனைவியுடன் தப்பியோடித் தலைமறைவாகி விட்டார். ஒரு மாதத்துக்கு மேலாகியும் இவர்களைக் கண்டறிய முடியாமல் ஆத்திரமடைந்த சாதிவெறியர்கள், இளங்காதலர்கள் தப்பியோட எர்ரம்மா என்ற தாழ்த்தப்பட்ட பெண்மணிதான் உதவினார் என்று பொய்க் குற்றம் சாட்டி அவரைத் தொடர்ந்து அச்சுறுத்தி தொல்லை கொடுத்து வந்தனர். சம்பவம் நடந்தபோது எர்ரம்மா, வெளியூரிலுள்ள தனது மகள் வீட்டிற்குச் சென்றதால், அவர்தான் இரகசியமாக காதலர்களுக்கு உதவியதாகக் கூறி, கடந்த ஆகஸ்டு 26-ம் தேதியன்று ஆதிக்க சாதிவெறியர்கள் எர்ரம்மாவை வீடு புகுந்து தாக்கி அடித்து இழுத்து வந்தனர். அவரது ஆடைகளை உருவி நிர்வாணமாக்கி, அவர்மீது எச்சிலைத் துப்பி தடியால் அடித்து வீதிகளில் இழுத்து வந்து, "எல்லோரும் இந்தக் காட்சியை நன்றாகப் பாருங்கள்" என்று குடிபோதையில் கூச்சலிட்டனர். எர்ரம்மாவின் மகள் தனது கிழிந்த புடவையிலிருந்து ஒரு துண்டைக் கிழித்து தனது தாயின் உடலைப் போர்த்த முற்பட்டபோது, சாதிவெறியர்கள் அவரை அடித்து சாக்கடையில் வீசினர். அவமானத்தால் துவண்ட எர்ரம்மா தனது மானத்தை மறைக்க முயன்றபோது, அவரது கைகளைத் தடியால் அடித்தனர். எர்ரம்மாவின் கணவரான ஏனப்பா, சாதிவெறியர்களின் காலில் விழுந்து கெஞ்சிய போதிலும், அவரை மிருகத்தனமாக அடித்து தனது மனைவியின் பின்னே கைகளைக் கட்டிக் கொண்டு வருமாறு செய்தனர். எர்ரம்மா கிராமப் பஞ்சாயத்து கொடிக் கம்பத்தின் அருகே அரைமணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்டார். அதன் பின்னரே அவருக்கு ஆடைகள் கொடுக்கப்பட்டன. இதில் கொடுமை என்னவென்றால், இத்தாக்குதலில் மேல்சாதியைச் சேர்ந்த பெண்களும் சேர்ந்து கொண்டு எர்ரம்மாவை நிர்வாணமாக்கி அடித்து இழுத்து வந்துள்ளனர்.

இச்சாதிவெறிக் கொடுமை பற்றிய செய்தி மெதுவாகக் கசிந்து, முக்கிய குற்றவாளிகள் என 8 பேரைப் போலீசார் கைது செய்தனர். ஆனால் மறுநாளே அவர்கள் பிணையில் வெளிவந்து மிரட்டத் தொடங்கினர். பின்னர் தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளும் மனித உரிமை அமைப்புகளும் தொடர்ந்து போராடிய பிறகே, சாதிவெறியர்கள் சிறையிடப்பட்டுள்ளனர்.

எர்ரம்மா மீது வன்கொடுமைத் தாக்குதலை நடத்தியவர்கள் வால்மீகி எனப்படும் மிகவும் பிற்பட்ட சாதியினராவர். இருப்பினும் ஓட்டு வங்கியைக் குறிவைத்து ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனால் இவர்களது அட்டூழியங்களை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்ய முடியவில்லை என்று போலீசு கையை விரிக்கிறது.

# போராட்டங்களைக் கண்டு அஞ்சும் பேடிகளாக போலி கம்யூனிஸ்டுகள்

"ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள், பொதுக்கூட்டங்கள் முதலானவற்றை பொது மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு ஏற்படுகிறது. சமூக விரோதிகள் இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு வன்முறையில் ஈடுபட்டு பொது மக்களுக்கும் பொதுச் சொத்துக்களுக்கும் பெரும் சேதம் விளைவிக்கின்றனர். எனவே ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களை நாம் தடை செய்ய வேண்டும். அதேசமயம் மக்களின் ஜனநாயக உரிமையையும் நாம் புறக்கணிக்கக் கூடாது. எனவே வார நாட்களில் அல்லாமல் விடுமுறை நாட்களில் இத்தகைய போராட்டங்களை நடத்திக் கொள்ள நாம் அனுமதிக்கலாம்"

— இப்படி உழைக்கும் மக்களின் போராட்டங்களுக்குத் தடை விதிக்க நியாய வாதங்களை அடுக்குவது ஆளும் பாசிச இந்துவெறி பாரதீய ஜனதாவோ, எதிர்த் தரப்பான பாசிச காங்கிரசோ அல்ல. பாட்டாளிகளின் கட்சி, போராட்டப் பாதையில் பீடு நடைபோடும் கட்சி என்றெல்லாம் பீற்றிக் கொள்ளும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர் தான் இப்படி போராட்டங்களுக்குத் தடை விதிக்கக் கிளம்பியுள்ளார்.

"ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களை வன்முறை நிகழாமல் அமைதியாக நடத்த வேண்டும்; மாறிய அரசியல் - பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப நாகரீகமான முறையில் நடத்த வேண்டும். வார வேலை நாட்களைத் தவிர்த்து, ஞாயிற்றுக் கிழமை அல்லது விடுமுறை நாட்களில் ஊர்வலம் - ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டால், அனைத்து தரப்பினருக்கும் இடையூறு இல்லாமல் இருக்கும்" என்று ஆளும் வர்க்கங்களைப் போல உபதேசம் செய்கிறார் மே.வங்க 'மார்க்சிஸ்ட்' முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா. சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரான பிமன் போஸ், "இனிவரும் நாட்களில், விடுமுறை நாட்கள் தவிர மற்ற நாட்களில் ஊர்வலம், ஆர்ப்பாட்டம், பொதுக் கூட்டங்களை நடத்த கொல்கத்தா நகரில் அனுமதிக்கவே கூடாது. பொதுக் கூட்டங்களைக் கூட நகரின் ஒதுக்குப்புறமான பகுதிகளில் மட்டுமே நடத்த அனுமதிக்க வேண்டும்" என்று ஆலோசனை கூறுகிறார். மே.வங்க 'மார்க்சிஸ்ட்' கட்சியின் செயலாளரான அனில் பிஸ்வாஸ், "நாங்கள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாமல் முன்மாதிரியாக ஊர்வலங்களை நடத்தி மாநில அரசுக்கு முழு ஒத்துழைப்பு தருவோம்" என்று 'மார்க்சிஸ்ட்' முதல்வரின் ஆலோசனையை வரவேற்று ஆதரிக்கிறார்.

ஏற்கனவே மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வர், "தொழிற்சங்க நடவடிக்கை என்ற பெயரில் தொழிலாளர் வேலை நிறுத்தங்களிலோ, முரட்டுத்தனமான போராட்டங்களிலோ ஈடுபட்டால் அதை அரசு சகித்துக் கொண்டிருக்காது; கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று எச்சரிக்கையும் விடுத்துள்ளார். இப்போது போராட்டமே கூடாது; அதுவும் கூட 'நாகரீகமான' முறையில், முஷ்டியை உயர்த்தி முழக்கமிடாமல், 'அமைதியான' முறையில் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்திக் கொள்ள வேண்டும் என்கிறார். ஞாயிற்றுக் கிழமைகளில் மதியம் கறி சோறு சாப்பிட்டு முடித்து ஓய்வெடுத்த பிறகு புரட்சி நடந்து முடிந்துவிட்டால் - அதுவும் மாலையில் தொலைக்காட்சிகளில் திரைப்படம் ஒளிபரப்பாவதற்கு முன்பாக புரட்சி முடிந்துவிட்டால் மிகவும் வசதியாக இருக்கும் என்றுதான் இப்போலி கம்யூனிஸ்டுகள் எதிர்பார்க்கிறார்கள்.

உழைக்கும் மக்களின் போராட்டங்களையே கேவலப்படுத்தி, வெளிப்படையாகவே அவற்றை ஒடுக்கவும் துணிந்துவிட்ட இத்துரோகிகளுக்கு இன்னும் எதற்கு செங்கொடி?



படிப்பகம்

# இலட்சம் கொடுத்தால் பஞ்சாயத்துத் தலைவர் பதவி

# எத்தனை கோடிக்கு பிரதமர் பதவி?

தமிழகத்தில் உள்ளாட்சி (பஞ்சாயத்து) தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்தல் நடப்பதற்கு வேட்டை, வாக்குப் பதிவு முதலானவை நடப்பதற்கு முன்னரே பல பஞ்சாயத்துகளில் ஆதிக்க சக்திகள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர். இந்த 'ஜனநாயக'க் கேலிக்கூத்து மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பரவலாக அரங்கேறியுள்ளது.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தைச் சேர்ந்த செல்லம்பட்டி ஒன்றியத்திலுள்ள அய்யனார் குளம் பஞ்சாயத்தில் கடந்த செப்டம்பர் 12-ஆம் தேதியன்று பஞ்சாயத்துத் தலைவர் பதவி பகிரங்கமாக ஏலம் விடப்பட்டது. கிராமத்தின் மந்தையில் (பொதுமைதானம்) ஒலிபெருக்கி கட்டி ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் முன்னிலையில் இந்த கேலிக்கூத்து நடந்தது. பஞ்சாயத்து தலைவர் பதவிக்குப் போட்டியிடுவோர் ரூ. 25,000 டெபாசிட் கட்ட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு 13 பேர் போட்டியில் கலந்து கொண்டனர். அதைத் தொடர்ந்து ஏலம் விடப்பட்டு ரூ. 5 லட்சத்து 43,000-க்கு ஏலம் கேட்ட போஸ் என்பவர் பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்குப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இன்னும் சில பஞ்சாயத்துகளில் ஏலமுறைக்குப் பதிலாகக் ''குடவோலை'' முறை பின்பற்றப்படுகிறது. இதன்படி, போட்டியிடுபவர்கள் தலா ஒரு லட்சம் கட்ட வேண்டும். போட்டியாளர்களின் பெயர்களைக் கொண்ட சீட்டுகளை ஒரு குடத்தில் போட்டு கிராமத்தின் கட்டைப் பஞ்சாயத்தார் முன்னிலையில் ஒரு குழந்தையை விட்டு ஒரு சீட்டை எடுக்கச் சொல்ல வேண்டும். அச்சீட்டில் உள்ளவரே பஞ்சாயத்துத் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார்.

மதுரை மாவட்டத்தின் உசிலம்பட்டி, பேரையூர் வட்டங்களிலும், சிவகங்கை மாவட்டத்தின் மானாமதுரை வட்டத்திலும் இச்சட்ட விரோத மோசடித் தேர்தல் பகிரங்கமாகவே நடந்து வருகிறது. பஞ்சாயத்துத் தலைவர் பதவி மட்டுமின்றி, துணைத் தலைவர், வார்டு உறுப்பினர் பதவிகளும் இவ்வாறு ஏலம் விடப்படுகின்றன. இவ்வாறு 'தேர்ந்தெடுக்கப்பட்ட'வர்களைத் தவிர வேறு எவரும் பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிடக் கூடாது. இம்முடிவை யாராவது மீறினால், அவர் ஆதிக்க சக்திகளால் கொல்லப்படுவார்; அல்லது சமூகப் புறக்கணிப்பு செய்யப்பட்டு ஊரை விட்டே விரட்டப்படுவார். பணபலமும், சாதிய பலமும், அடியாள் பலமும் கொண்ட கந்துவட்டிக்காரர்கள், காண்டிராக்டர்கள், சாராய வியாபாரிகள், கிரிமினல் பின்னணி கொண்டவர்கள் என ஆதிக்க சாதிவெறியர்களே இத்தகைய கட்டைப் பஞ்சாயத்து முறையில் போட்டியின்றித் 'தேர்ந்தெடுக்க'ப்பட்டுள்ளனர். பஞ்சாயத்துத் தலைவர் பதவியை ஏலம் விட்டு கிடைத்த இலட்சக்கணக்கான தொகையைக் கொண்டு, கட்டைப் பஞ்சாயத்துப் பேர்வழிகள் கிராமத்துக்கு அடிப்படை வசதிகளைச் செய்யப் போவதுமில்லை. உள்ளூர் கோயில் திருப்பணி, குடமுழுக்கு திருவிழா, 'குடி - கூத்து, விருந்து, கும்மாளம் என வாரியிறைப்பதும் சாதி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதும்தான் வழக்கமாக நடக்கிறது.

பஞ்சாயத்துத் தலைவர் பதவியை ஏலத்தில் எடுத்த போஸ்: விலை போன 'ஜனநாயகம்'.



எல்லாவற்றுக்கும் மேலாக, பஞ்சாயத்து தலைவர் பதவியை பல இலட்சங்களுக்கு ஏலத்தில் எடுத்து 'தலைவர்'களாகியுள்ளவர்கள், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அதைவிட பல மடங்கு வெளிப்படையாகவே கொள்ளையிடப் போகிறார்கள். கட்டைப் பஞ்சாயத்து முடிவுப்படி, இதை எதிர்த்து யாரும் கேள்வி கேட்கவும் முடியாது. பகற் கொள்ளைக்குப் பகிரங்க ஏலம் விடப்படும் பஞ்சாயத்து தலைவர் பதவியே இப்படி என்றால், எம்.எல்.ஏ., எம்.பி; அமைச்சர் பதவிகளில் ஓட்டுப் பொறுக்கிகளும் ஆதிக்க சக்திகளும் அடிக்கும் கொள்ளை எவ்வளவு என்று சொல்ல வேண்டியதில்லை.

ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் தூண்களாகச் சித்தரிக்கப்படும் பத்திரிகைகள், இம்மோசடித் தேர்தலை அம்பலப்படுத்தி ஆதிக்க சக்திகளை எதிர்க்க முன்வரவில்லை. மாறாக, இக்கட்டைப் பஞ்சாயத்துத் தேர்தலை பரபரப்புச் செய்தியாக வெளியிடுவதோடு, ஊருக்குள் வீண் தகராறு ஏற்படாமல், பாரம்பரியமான முறையில் கிராமப் பெரியவர்கள் முன்னிலையில் பதவியை ஏலம்விட்டு தலைவரைத் தேர்ந்தெடுப்பதாக வெட்கமின்றி பாராட்டி எழுதுகின்றன. இம்மோசடித் தேர்தலை, முன்மாதிரியாகச் சித்தரித்து தென்மாவட்ட தினத்தந்தி, தினமலர், தினகரன், தினபூமி முதலான நாளேடுகள் சிலாகித்து எழுதி வருகின்றன.



குடவோலை முறை: சாதிய ஆதிக்கவாதிகளின் நவீன தேர்தல் கூத்து.

உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் கீழ்மட்ட அளவில்கூட ஜனநாயகத்தை நிறுவி வளர்த்து, பூத்துக் குலுங்கச் செய்துள்ளதாக ஆட்சியாளர்கள் பீற்றிக் கொள்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்துத் தேர்தல்கள் உள்ளூர் ஆதிக்கச் சக்திகள் சட்டப்பூர்வ அங்கீகாரம் பெறுவதற்கான ஏற்பாடாகவும், ஜனநாயக மோசடியாகவுமே உள்ளது. போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு அனைத்து ஓட்டுப் பொறுக்கிகளும் இந்த மோசடியை மூடி மறைத்து ''இதுதான் உண்மையான ஜனநாயகம்'' என்று உழைக்கும் மக்களைத் தொடர்ந்து ஏய்த்து வருகின்றனர். உள்ளூர் ஆதிக்க சக்திகளின் நாட்டாண்மைக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் அளிக்கும் இப்போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணித்து, இம்மோசடி ஜனநாயகத்தை அம்பலப்படுத்தி கம்யூனிசப் புரட்சியாளர்கள் மட்டுமே உழைக்கும் மக்களின் அதிகாரத்திற்காகப் போராடி வருகிறார்கள். ●



படிப்பகம்

www.padippakam.com



# மறுகாலனியாதிக்க எதிர்ப்பு
# தீ பரவட்டும்

நாடு மீண்டும் காலனியாக்கப்பட்டு வருவதன் விளைவாக, நம் நாட்டின் விவசாயம், சிறு தொழில்கள், தேசிய உற்பத்தி அனைத்திலும் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

இதற்கு எதிராக, மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் ''கோக் - பெப்சி போன்ற அந்நிய பன்னாட்டுப் பொருட்களை எரிக்கும் போராட்டத்தை'' செப்டம்பர் மூன்றாம் தேதியன்று தமிழகம் முழுவதும் போர்க்குணத்தோடு நடத்தியுள்ளன. அதனையொட்டி, துண்டறிக்கை, சுவரொட்டி, சுவரெழுத்து, தெருமுனைக் கூட்டங்கள், தட்டிகள் முதலான பல்வேறு வடிவங்களில் பிரச்சாரம் செய்திருந்தன.

உலக அளவில் உலக வர்த்தகக் கழகத்துக்கு எதிராகவும், அமெரிக்க மேலாதிக்கத்துக்கு எதிராகவும் போராட்டங்கள் வலுபெற்று வரும் சூழலில், இப்போராட்டம் மேலும் முக்கியத்துவம் பெறுவதோடு, புதிய நம்பிக்கையை ஊட்டுவனவாகவும் அமைந்தன.

**கம்பம் நகரில்:** உத்தமபாளையம் வட்டார விவசாயிகள் விடுதலை முன்னணி 'நமது விவசாயத்தையும், தொழில்களையும் அழித்து வரும் பன்னாட்டுக் கம்பெனிகளின் பொருட்களைப் புறக்கணிப்போம்! தீயிடுவோம்!' என்றும், இதுவே 'உண்மையான நாட்டுப்பற்று' என்றும் வட்டாரம் முழுவதும் வீச்சான அளவில் இரு நாட்கள் ஆட்டோ மூலம் பிரச்சாரம் செய்தது. இறக்குமதி கொள்கையால் வட்டாரம் முழுவதும் உள்ள தேங்காய் விலை வீழ்ச்சியால் பாதிப்படைந்த தென்னை விவசாயிகள், காய்கறி விவசாயிகள், கடலை விவசாயிகளுக்கு அமைப்பின் முழக்கங்கள் புதிய நம்பிக்கையினை ஏற்படுத்தின.

செப்டம்பர் 3-ம் தேதியன்று மாலை கம்பம் பெரிய பள்ளிவாசல் அருகே விடுதலை போராட்டத்தில் உயிர்நீத்த பல்வேறு தியாகிகளை நினைவு கூறும் விதமாக சிறுவர்களின் வீதி நாடகத்தோடு, தோழர்களின் பேரணி தொடங்கியது. பேரணியின் முன்பாக நான்கு தோழர்கள் பன்னாட்டுக் கம்பெனிகளின் பொருட்கள் அடங்கிய சவப்பெட்டியினைச் சுமந்து சென்றனர். கம்பம் நகரத்தில் இதுநாள் வரை நடத்தப்பட்ட எந்தவொரு ஓட்டுக் கட்சிகளின் பேரணியிலும் காணாத அளவுக்கு, விவசாயத் தோழர்களின் கட்டுக்கோப்பான, உணர்வுபூர்வமான பேரணியாக இப்பேரணி அமைந்தது.

இறுதியாக, கம்பம் பூங்கா திடலில் தோழர்கள் சிறப்புரையாற்றிய பிறகு பன்னாட்டுப் பொருட்களின் சவப்பெட்டிக்குத் தீயிடப்பட்டது. கொழுந்து விட்டெரிந்த தீயின் வேகத்தோடு போட்டியிட்ட வி.வி.மு. தோழர்களின் முழக்கங்கள், பன்னாட்டு கம்பெனிகளை நாட்டைவிட்டே விரட்டியடிக்கும் உத்வேகத்தை கம்பம் நகர மக்களிடையே ஏற்படுத்தியது.

**உசிலம்பட்டியில்:** செப்-3ம் தேதி உசிலம்பட்டியில் அந்நியப் பொருட்கள் எரிப்புப் போராட்டம் போலீசின் தடையை மீறி நடைபெற்றது. உசிலம்பட்டி முருகன் கோயில் அருகே கோக்-பெப்சி குளிர்பான பாட்டில்கள், சாம்பு போன்றவற்றை தீ வைத்து எரித்தனர். இதில் ஒன்பது தோழர்கள் கைது செய்யப்பட்டு மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

**திருப்பத்தூரில்:** ஊரில் இரண்டு முக்கிய கடைவீதிகளின் வழியே கோகோ-கோலா பாட்டில் எட்டு அடி உயரத்துக்குச் செய்து முழக்கமிட்டபடியே தோழர்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்று தீயிட்டு எரித்தனர். போலீசிடம் அனுமதி வாங்காததால் இவை எரிவதற்குள் ஓடிவந்து அணைத்துவிட்டது போலீசு. ஏழு தோழர்கள் கைதாகி மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

**ஓசூரில்:** அந்நியப் பன்னாட்டுப் பொருட்கள் எரிப்புப் போராட்டம் ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்களால் காலை 11 மணிக்கு ஓசூர் பேருந்து நிலையத்தில் நடத்தப்பட்டது.

போராட்டம், பறையடித்துத் தொடங்கப்பட்டது. சிறப்புரையாற்றிய தோழர்கள் ''உண்மையான தேசபக்தி என்பது மக்களைப் பற்றியும், அவர்களது துன்பங்களைப் பற்றியும் புரிந்து கொண்டு அதற்கு தீர்வு காண போராடுவதுதான்'' என்ற அடிப்படையில் பேசினர். இறுதியாக அந்நியப் பொருட்களை ஒவ்வொன்றாக மக்களுக்கு அடையாளம் காட்டி ஒரு பெரிய பெட்டியில் போட்டுத் தீயிட்டு கொளுத்தினர்.

**பென்னாகரத்தில்:** செப்-3 அந்நிய பொருட்கள் எரிப்புப் போராட்டம் போலீசு அனுமதியுடன் நடைபெற்றது. பாடல்கள், முழக்கங்களுடன் அந்நிய பன்னாட்டுப் பொருட்களைப் பாடையில் கட்டி ஊர்வலமாக எடுத்துச் சென்ற வி.வி.மு. தோழர்கள் பேருந்து நிலையத்தில் அதை எரித்தனர்.



**நெய்வேலியில்:** கோக்-பெப்சி போன்ற அந்நிய பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களை



படிப்பகம்

www.padippakam.com

எரிக்கும் போராட்டம் நெய்வேலி பகுதியில் புதுக்குப்பம் சதுக்கம் அருகில் நடைபெற்றது. பகத்சிங் இன்கோ செர்வ் மற்றும் ஒப்பந்த தொழிலாளர் சங்கத்தின் சார்பாக சுமார் 115 பேருக்கு மேல் (15 பெண்கள் உட்பட) கலந்து கொண்டனர்.

ஊர்வலம் தொழிற்சங்க அலுவலகத்தில் இருந்து பறை முழங்க, அந்நிய நிறுவனங்களுக்கு எதிராக முழக்கமிட்டபடி கிளம்பியது. ஊர்வலத்தில் கோக், பெப்சி போன்ற பாட்டில் மாதிரிகள் (2 மீட்டர் உயரத்தில் செய்யப்பட்டது) எடுத்துச் செல்லப் பட்டது. தோழர்கள் உரைக்குப் பிறகு உருவ பொம்மைகள் தீயிட்டு எரிக்கப்பட்டன.

எரிப்புப் போராட்டம் நடக்கும் இடத்திற்கு ஊர்வலம் சென்றடையும்போது அங்கு ஒரு வேனில் இருந்து கோக் பாட்டில்கள் இறங்கிக் கொண்டிருந்தது. தோழர்களின் முழக்கத்தைக் கண்டு வேன் உடனே மாயமாய் மறைந்து விட்டது.

**கரூரில்:** போலீசின் அனுமதியுடன் பு.மா.இ.மு.வினர் கரூர் பேருந்து நிலையம் அருகில் அந்நிய பொருட்களைத் தோரணமாகக் கட்டி, மக்களின் பார்வைக்கு வைத்து, இறுதியில் எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**போடியில்:** எரிப்புப் போராட்டம் போடி தேவர் சிலை முன்பு நடைபெற்றது. அந்நிய பன்னாட்டுப் பொருட்களுக்கு எதிராக போராட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பிய பின்னர், அவை தீயிட்டு எரிக்கப்பட்டன. பொது மக்களும், மாற்றுக் கட்சியினரும் - குறிப்பாக சி.பி.ஐ. மற்றும் சி.பி.(எம்) கட்சியினரும் நமது போராட்டத்தைப் பார்த்து விட்டுப் பாராட்டினர்.

**ஈரோட்டில்:** எரிப்புப் போராட்டத்துக்கு அனுமதி கேட்டு போலீசிடம் சென்றபோது இன்று நாளையென்று இழுத்தடித்து கடைசியாக மாலை 4 முதல் 5 மணி வரை ஆர்ப்பாட்டம் நடத்த மட்டும் அனுமதி அளித்தது. ஈரோடு பு.மா.இ.மு. தோழர்கள் மதியம் 3 மணிக்கே, "நாட்டை மீட்கும் போராட்டம்; இது நக்சல்பாரிகளின் போராட்டம்" என்ற முழக்கத்துடன் ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கினர். அப்போது கியூ பிரிவு போலீசார் நகராட்சி அதிகாரியைத் தூண்டிவிட்டு, 'பேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என்றால் நகராட்சியிடம் அனுமதி கேட்க வேண்டும்' என்று கூறி போராட்டத்தைத் தடுக்க முயன்றனர். அதையும் மீறி ஆர்ப்பாட்டம் தொடங்கியது.





மாலை 3.45 மணிக்குப் பன்னாட்டுப் பொருட்களை எரிக்க முயன்ற தோழர்களை மிரட்டியும், எரியும் பொருட்களை அணைத்தும், ஏழு தோழர்களைக் கைது செய்தது போலீசு. மீண்டும் 4 மணிக்கு பேருந்து நிலையம் நுழைவு வாயிலருகில் சாலையை மறித்து பன்னாட்டுப் பொருட்களை, மற்றொரு அணியாக தோழர்கள் பிரச்சாரம் செய்து எரித்தனர். இதனால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுப் பரபரப்பு ஏற்பட்டது. போலீசார், மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்களைக் கைது செய்தனர்.

**மதுரையில்:** மதுரை தலைமை அஞ்சலகம், ஜெய்கிந்துபுரம், டவுன் ஹால் ரோடு, பெரியார் பேருந்து நிலையம் ஆர்.எம்.எஸ். ரோடு ஆகிய நான்கு இடங்களில் எரிப்புப் போராட்டம் நடைபெற்றது.

ஆர்.எம்.எஸ். ரோட்டில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட 5 தோழர்களை போலீசு கைது செய்தது. கைது செய்த தோழர்களை போலீசு வண்டியில் ஏற்றும் போது தோழர்களும், திரளான மக்களும் கூடி நின்று பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராக முழக்கமிட்டனர். நகரின் மையப்பகுதியில் நடைபெற்ற இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

**கோவையில்:** கோவை காந்திபுரம் மைய பேருந்து நிலையத்தின் எதிரே தமிழ்நாடு உணவகம் முன்பு மக்கள் கலை இலக்கியக் கழகம், புதிய ஜனநாயகத் தொழிலாளர் பிரச்சாரக்குழு தோழர்கள் எரிப்பு போராட்டத்தை நடத்தினர். போராட்டத்தில் கலந்து கொண்ட 33 தோழர்கள் (4 பெண் தோழர்கள் உள்பட) கைது செய்யப்பட்டு மாலை விடுவிக்கப்பட்டனர்.

**சென்னையில்:** ம.க.இ.க.வும், பு.ஜ.தொ.மு.வும் எரிப்புப் போராட்டத்தை நடத்த் அனுமதி கேட்டதற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மக்கள் நடமாட்டமில்லாத பகுதியில் ஆர்ப்பாட்டத்திற்கு மட்டும் அனுமதி வழங்கியது போலீசு. தடையை மீறி பாரிமுனையில் மக்கள் கூடும் 4 இடங்களில் தோழர்கள் பன்னாட்டுப் பொருட்களை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து எரித்தனர். கடைசியாக குறளகம் எதிரே எரித்தனர். அமெரிக்க தொப்பியை ஒருவர் அணிந்து கொள்ள அதன்மேல் நெருப்புப் பற்ற வைத்து ஊர்வலமாக அழைத்து வந்த காட்சி மக்களிடையே வரவேற்பை பெற்றது.

**திருச்சியில்:** எரிப்புப் போராட்டத்தையொட்டி பிரச்சாரம் செய்ய சென்ற ஆட்டோக்களைக் கைப்பற்றி, தோழர்களையும் கைது செய்தது போலீசு. ஆர்ப்பாட்டத்துக்காக கூடிய தோழர்களையும் கைது செய்தது. போலீசிடம் வாக்குவாதம் செய்த பிறகு தோழர்கள் முழக்கமிட்டுக் கொண்டே போலீசு நிலையம் சென்றனர்.

இருப்பினும் எப்படியாவது எரிப்புப் போராட்டத்தை நடத்தியே ஆக வேண்டும் என்ற நோக்கத்தில் இரண்டாவது அணியாக திரண்ட தோழர்கள் 'கல்யாணி கவரிங்' கடையருகே அந்நிய பொருட்களை எரித்தனர். பெப்சி, கோகோ - கோலா. பாட்டில்கள் உடைக்கப்பட்டது. தோழர்கள் ஆவேசமாக முழக்கமிட்டனர். போக்குவரத்து தடைபட்டது. பிற கடைக்காரர்கள் அவசர அவசரமாக கோக்-பெப்சி பாட்டில்களை உள்ளே எடுத்து வைத்துவிட்டனர். பெண்கள், சிறுவர்கள் உட்பட நாற்பது தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதைத்தவிர, காந்திபுரம், உறையூர், நாச்சியார் கோவில் பகுதிகளிலும் எரிப்புப் போராட்டம் நடைபெற்றது.

**பள்ளிப்பாளையத்தில்:** கோக்-பெப்சி போன்ற அந்நியப் பொருட்கள் எரிப்புப் போராட்டம் பள்ளிப்பாளையம் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டமாக தொடங்கி இறுதியில் எரிப்புப் போராட்டம் நடந்தது. எரிக்க தேவையான பொருட்களை மளிகை கடைகாரர்கள் மற்றும் நண்பர்கள் வாங்கிக் கொடுத்து ஆதரவு தெரிவித்தனர். 300-க்கும் மேற்பட்ட பொது மக்கள் கூடி நின்று போராட்டத்தை வரவேற்றனர்.

## ஒரிசாவில் பட்டினிச் சாவுகள்

# நிவாரணமல்ல... உணவுக் கலகமே ஒரே தீர்வு!

அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனிலும், நியூயார்க்கிலும் நடந்த தாக்குதல்கள் இந்திய ஆளும் வர்க்கத்திற்கும், அவர்களின் ஊதுகுழல்களான 'தேசிய' பத்திரிகைகளுக்கும் பலவிதங்களில் சாதகமாக அமைந்து விட்டன. அமெரிக்காவில் தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னர், ஒரிசா மாநிலத்தில் கிட்டதட்ட 20 பழங்குடியினர் பட்டினியால் இறந்து போனது பற்றியும்; ஆந்திரா, இராசஸ்தான், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட ஆறு மாநிலங்களில் கடும் வறட்சியின் காரணமாக, அம்மாநிலங்களைச் சேர்ந்த ஏழை மக்கள் பட்டினிச் சாவிற்குள் நெட்டித் தள்ளப்படுவது பற்றியும்; தமிழ்நாடு உள்ளிட்டு நாட்டின் பல்வேறு மாநிலங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு, ரேசன் அரிசியும், கோதுமையும் முறையாக, முழுமையாக வழங்கப் படாதது குறித்தும் செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. மக்களின் வாழ்வுரிமை குறித்து கேள்விகளும், விவாதங்களும் எழத் தொடங்கின. அமெரிக்காவில் தாக்குதல் நடந்த மறுநிமிடமே, 35 கோடி இந்திய மக்களின் வயிற்றுப் பிரச்சினையைப் பத்திரிகைகள் மிக இலாவகமாக ஓரங்கட்டிவிட்டன.

ஒரிசாவைச் சேர்ந்த ராயகடா மாவட்டத்தில் உள்ள காசிபுர் பகுதியில் வாழும் பழங்குடியின மக்கள் வேலை இன்றி, அதனால் உணவும் இன்றி பட்டினியால் இறந்து போகும் அபாயத்தில் இருக்கக் கூடிய தகவல்கள் ஜூலை மாதத்தில் வெளியாகின. ஒரிசா மாநில அரசும், மைய அரசும் பத்திரிகைகளில் அம்பலமான அபாயம் குறித்து அலட்டிக் கொள்ளாமல், எருமை மாட்டின் மீது மழை விழுந்த கதையாக இருந்ததால், சிவில் உரிமைகளுக்கான மக்கள் யூனியன் (P.U.C.L.) எனும் அமைப்பு, இது குறித்து உச்ச நீதி மன்றத்தில் பொதுநல வழக்குத் தொடுத்தது.

இந்த வழக்குக் குறித்து உச்சநீதி மன்றத்தில் நடந்த விசாரணையில், ''பல்வேறு மாநில அரசுகளிடம், அந்தந்த மாநிலங்களில் வறுமை கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் தொகை பற்றிய முறையான கணக்கெடுப்போ, புள்ளி விபரமோ இல்லை'' என்பது தெரிய வந்தது. உதாரணத்திற்குச் சொன்னால், தில்லி அரசு, தனது யூனியன் பகுதியில் ஏழைக் குடும்பங்களே எதுவும் இல்லை எனக் குறிப்பிட்டிருந்தது. மும்பய் நகரிலுள்ள ஆசியாவிலேயே மிகப் பெரிய நகர்ப்புற சேரியான தாரவியில் 150 குடும்பங்களே வறுமை கோட்டுக்குக் கீழே வாழ்வதாக மகாராஷ்டிரா மாநில அரசு கணக்கெடுத்திருந்தது.

மாநில அரசுகளிடம் தங்கள் மாநிலங்களில் வறுமை கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் பற்றிய முறையான கணக்கு இல்லையே தவிர, அவர்களுக்கு வழங்க வேண்டிய ரேசன் அரிசியும், கோதுமையும் மட்டும் கனகச்சிதமாக, கள்ளச் சந்தைக்குத் திருப்பிவிடப்பட்டிருந்தன. குறிப்பாக, பட்டினிச் சாவு பிடித்தாட்டும் ஒரிசாவில், பட்டினியால் செத்துப் போன குடும்பங்களுக்குக் கூட, முறையாக அரிசி வழங்கப் பட்டுள்ளதாகக் கணக்குக் காட்டியது, ஒரிசா மாநில அரசு.

மைய அரசின் கையிருப்பில் 6 கோடி டன் அரிசியும், கோதுமையும் இருக்கும் பொழுது, எந்தவொரு இந்தியனும் பட்டினியால் முடங்கிப் படுத்துக் கொள்ள அனுமதிக்க மாட்டோம் எனச் சபதம் போடுகிறார், வாஜ்பாயி. அவர்களே சுயதம்பட்டம் அடித்துக் கொள்ளும்படி, இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் புழுத்து நாறும் அளவிற்கு அரிசியும், கோதுமையும் கொட்டிக் கிடக்கும் பொழுதுதான், ஒரிசாவின் ராயகடா மாவட்டத்தைச் சேர்ந்த 20 பழங்குடியினர் பட்டினியால் இறந்து போனதாகச் செய்திகள் வருகின்றன.

எப்படிப்பட்ட வக்கிரமான முரண்பாடு இது? இந்த முரண்பாட்டை எடுத்து வைத்துக் கொண்டு உச்சநீதி மன்றம், மைய, மாநில அரசுகளை ஒரு பிடிபிடித்தது; முதலாளித்துவப் பத்திரிகைகளும் உச்சநீதி மன்றத்தோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு அரசின் பொறுப்பற்றத் தன்மையைச் சாடின. இவர்களின் இந்த தார்மீக கோபம் வறுமை கோட்டுக்குக் கீழே வாழும் மக்கள் பட்டினியால் சாகிறார்களே என்ற மனிதாபிமானத்தால் எழவில்லை; மாறாக, எத்தனை போர்வை போட்டு மூடினாலும் இந்த முரண்பாட்டை மூடி மறைக்க முடியாதே என்ற ஆதங்கத்தால் எழுந்தது.

ஒரிசா மாநில அரசும், மைய அரசும் ''ஒரிசாவில் நடந்திருப்பது பட்டினிச் சாவுகள் அல்ல, அப்பழங்குடியினர் மாங்கொட்டைகளை உண்பதால், அது நஞ்சாகி இறந்து போனதாக'' வாதாடுகின்றன. உச்சநீதி மன்றமும், ''அப்பழங்குடியினர் மாங்கொட்டைகளை உண்ண வேண்டிய அவசியம் என்ன?'' என்ற கேள்வியைக் கூட எழுப்பாமல், இப்பிரச்சினையில் நைசாக ஒதுங்கிக் கொண்டது. அதேசமயம், ''மாநில அரசுகள் தங்கள் மாநிலங்களில் வறுமை கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் பற்றி மூன்று வாரத்திற்குள் கணக்கெடுக்க வேண்டும்; வேலையில்லாமல் வறுமை கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்குக் கொஞ்ச காலத்திற்கு இலவசமாகக் கூட உணவு அளிக்கலாம்; வறட்சி தாக்கிய பகுதிகளில் எல்லாம் வேலைக்கு உணவு உள்ளிட்டு அனைத்து சமூக நலத் திட்டங்களையும் இம்மி பிசகாமல் நடைமுறைப் படுத்த வேண்டும்'' என உத்தரவிட்டுத் தனது கருணை உள்ளத்தைக் காட்டிக் கொண்டது. மேலும், இதைச் செயலாக்கத் துடிப்புமிக்க பொறுப்பான அதிகாரிகள் தேவை; அப்படிப்பட்ட அதிகாரிகளைக் கண்டுபிடித்துத் தருமாறு பி.யு.சி.எல். அமைப்பையும் கேட்டுக் கொண்டது.

மக்களுக்கு எதிரானதாக அதிகார வர்க்கக் கும்பலை வளர்த்து வைத்துக் கொண்டு, அவர்களில் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்கும்படி

பசிக்கு அரைவயிறு சோறு கிடைக்காமல், மாங்கொட்டைக் கஞ்சியை குடித்து ''கோமா'' நிலைக்குச் சென்று, உயிருக்குப் போராடும் குழந்தை.



www.padippakam.com

உச்சநீதி மன்றம் கூறுவதைவிடக் கேலிக் கூத்தானது வேறெதுவும் இருக்க முடியாது. நரகலில் கூட நல்லரிசியைத் தேடிக் கண்டு பிடித்துவிடலாம்; ஆனால், அதிகார வர்க்கத்தில் பொறுப்பானவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது நடக்கவே முடியாத காரியம். குறிப்பாக, ஒரிசாவில் நடந்த பட்டினிச் சாவுகளைப் பற்றிய அதிகார வர்க்கத்தின் மேலான கருத்துக்களைப் பார்த்தால், அவர்கள் நாணயம், இரக்கம், மனசாட்சி போன்ற மனிதப் பண்புகளே இல்லாத இழிபிறவிகள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பட்டினிச் சாவுகள் நடந்த ஒரிசாவின் ராயகடா மாவட்டத்தின் காசிபூர் பகுதியில் வாழும் ஒரு இலட்சம் பேரில் 65 சதவீத மக்கள் ''கோந்த்'' என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். பதினான்கு வருடங்களுக்கு முன்பு பட்டினிச் சாவுகளால் இந்தியாவை உலுக்கிய காலகந்தி, இந்தப் பகுதியில்தான் உள்ளது. கடந்த மூன்று, நான்கு வருடங்களாகவே, வெள்ளம், வறட்சியால் அடுத்தடுத்து, பாதிக்கப்பட்டு, இந்தப் பகுதி விவசாயம் பொய்த்துப் போனது. மாநில அரசு வேலைக்கு உணவு போன்ற மாற்று வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தராமல் அலட்சியப்படுத்தியதால், இப்பழங்குடியின மக்கள் மாங்கொட்டையை, காட்டுக் கிழங்குகளைத் தின்று உயிர்வாழ வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த அவலம் குறித்து வேதனையும், வெட்கமும்பட வேண்டிய ஒரிசா மாநிலத் தலைமைச் செயலரோ, ''மாங்கொட்டையைச் சாதாரணமாக நினைத்துவிடாதீர்கள்; அது சத்தான உணவு'' என்று தனது அகங்காரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார். ''அப்படியென்றால், எங்களைப் போல நீங்களும் மாங்கொட்டைகளைத் தின்னுங்கள்'' என்று கூறி பழங்குடியினர் மத்தியில் செயல்படும் அமைப்புகள், மாங்கொட்டைகளை அதிகார வர்க்கக் கும்பலுக்கு அனுப்பி வைத்து, தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்தன.

திகிரி கிராமத்தைச்சேர்ந்த சோரா பேனி என்பவர், ''எங்களுக்கு அரிசி கொடுங்கள்; நாங்கள் மாங்கொட்டை சாப்பிடுவதை விட்டு விடுகிறோம்'' என்கிறார். ஆனால், ராயகடா மாவட்டத்தின் ஆட்சியாளர் சேதி, ''அரிசிச் சோறே கொடுத்தாலும் இவர்கள் மாங்கொட்டையைத் தான் சாப்பிடுவார்கள்; ஏன்னா, மாங்கொட்டை பழங்குடியினரின் உணவுக் கலாச்சாரம்'' என்று தனது சமூக அறிவைக் காட்டித் திமிர்வாதம் செய்கிறார். மேலும், ''கூழானாலும் குளித்துக் குடி என்பது பழமொழி. ஆனால், பழங்குடியினரிடம் சுத்தம், சுகாதாரம் பத்தாது. அதனால்தான் இந்தச் சாவுகள்'' என்று தனது பார்ப்பனத் திமிரையும் கொட்டுகிறார், சேதி.

''ராயகடா மாவட்டத்தைச் சேர்ந்த பழங்குடியின மக்களை முன்னேற்ற வேண்டுமென்பதற்காகவே, இந்தப் பகுதியில் கடந்த பத்தாண்டுகளில் 60 கோடி ரூபாய் பெறுமான பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே, காசிபூர் பகுதியில் வாழும் பழங்குடியினரில் ஏழைகள் யாரும் இருக்க முடியாது'' என்கிறார், சேதி. இவரின் குருட்டுக் கணக்கின்படி பார்த்தால், ஒரிசாவில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் ஏழைகளே இருக்க முடியாது.

''பட்டினிச் சாவு என்றால் என்ன? இறந்து போனவரின் வயிற்றைக் கிழித்துப் பார்த்தால், வயிற்றில் எந்த உணவுப் பொருளும் இருக்கக் கூடாது; ஆனால், இறந்துபோன பழங்குடியினரின் வயிற்றில் மாங்கொட்டை கஞ்சி இருந்தது; அதனால், இவை பட்டினிச் சாவு கிடையாது'' என விஞ்ஞானப்பூர்வ விளக்கம் அளிக்கிறார், அரசாங்க மருத்துவர். இப்படிப்பட்ட வக்கிரம் நிறைந்த, கோணல் புத்திக்காரர்களிடமிருந்து மக்களுக்குப் பொறுப்பானவர்களைத் தேடச் சொல்கிறது நீதிமன்றம்.



**கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இராசஸ்தானில், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளச் சொல்லிப் போராடும் கிராமப்புற மக்கள்.**

ஒரிசாவை ஆளும் பிஜு ஜனதா தளக் கும்பலோ, பட்டினியோடு போராடும் பழங்குடி இன மக்களை இழிவுபடுத்துவதில் அதிகார வர்க்கத்திற்கு எவ்விதத்திலும் சளைத்ததாகத் தெரியவில்லை. அம்மாநிலத்தின் வருவாய்த்துறை அமைச்சர் அரிச்சந்திரன், ''இவர்களைக் கூப்பிட்டு வேலை கொடுத்தால்கூடச் செய்ய மாட்டார்கள்'' என வசை பாடினார். நாடாளுமன்றத்தில் பட்டினிச் சாவுகள் பற்றிய விவாதம் நடந்தபொழுது, ''இவர்களுக்கெல்லாம் ஒரு தொலைக் காட்சி பெட்டியை வழங்கிவிட்டால், வத வதவென்று பிள்ளை பெற்றுக் கொள்வதைத் தடுத்து விடலாம்'' என ஆபாசமாக நக்கல் அடித்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைகொட்டிச் சிரித்தார்கள்.

ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக், இப்பட்டினிச் சாவுகள் பற்றி மட்டுமல்ல, மாநிலத்தின் நிர்வாகத்தைப் பற்றியே அக்கறை கொள்ளாமல், ஒவ்வொரு நாள் மாலைப் பொழுதையும், தனது டூன் பள்ளி நண்பர்களோடு சேர்ந்து கொண்டு, குடி, கும்மாளம், கூத்து எனக் கழித்து வருகிறார். இதற்காகவே தனது வீட்டின் பின்புறம் ஓர் அந்தப்புரத்தை உருவாக்கி வைத்திருக்கிறார். அந்தக் கால மன்னர்கள் ராஜ பவனி வருவது போல, நவீன் பட்நாயக் காசிபூர் பகுதியைச் சுற்றிப் பார்க்க வந்தபொழுது, பழங்குடியின மக்கள் அவர் காரின் மீது மாங்கொட்டைகளை வீசியெறிந்து, தங்களின் ஆத்திரத்தை வெளிக் காட்டினர்.

இப்படிப்பட்ட மக்கள் விரோத நிர்வாகத்தை அங்கொன்றும், இங்கொன்றுமாக மாற்றியமைத்து, காகித உத்தரவு போட்டு முடுக்கிவிட்டு, ஏழை மக்களின் வயிற்றுப் பாட்டுப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என நமது காதில் பூ சுற்றுகிறது உச்சநீதி மன்றம். புதிதாகப் பதவியேற்றுக் கொண்ட போலீசு அதிகாரி ''ரவுடிகளை ஒழித்து விடுவேன்'' என உதார் விடுவதற்கும், உச்ச நீதி மன்றத்தின் இந்த அதிரடிக் கட்டளைக்கும் இடையே எந்த வேறுபாடும் கிடையாது.

உச்சநீதி மன்றம் உத்தரவு இட்டவுடன், தில்லி அரசு, தனது யூனியன் பகுதியில் 20 இலட்சம் குடும்பங்கள் வறுமை கோட்டுக்குக் கீழ் வாழ்வதாகக் கணக்குக் காட்டியது. இதுபோல், ஒவ்வொரு மாநில அரசும் புள்ளிவிபரக் கணக்கை உச்சநீதி மன்றத்திடம் கொடுத்தன. மூன்று, நான்கு வருடங்களாக நடக்காத கணக்கெடுப்பு, மூன்றே வாரத்தில் முடிந்துவிட்டதை, சோகமயமான கேலிக் கூத்து எனக் கிண்டலடித்த உச்சநீதி மன்றம், ''எந்த அடிப்படையில் இந்திய மக்களை வறுமை கோட்டுக்கு மேலே, வறுமை கோட்டுக்குக் கீழே எனக் கூறுபோடுகிறீர்கள்?'' என்ற கேள்வியை மட்டும் கேட்கவில்லை.

நேற்று வேலையில் இருந்த தொழிலாளிக்கு இன்று வேலை கிடையாது; நேற்று சிறு ஆலை அதிபராக இருந்தவர், இன்று பன்னாட்டு நிறுவனங்களின் போட்டியைச் சமாளிக்க முடியாமல் ஆலையை மூடுகிறார். நேற்று சிறு விவசாயியாக இருந்தவர், இன்று போண்டியாகிப் போய் நிற்கிறார். இப்படி இந்திய நாடு நிச்சயமின்மையில் சிக்கிக் கொண்டு மூச்சுத் திணறுகிறது.

இந்த நிச்சயமின்மையை ஒழிக்க ஒரு வழி சொல்லாமல் வறுமை கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் குறித்து உச்சநீதி மன்றம் கண்ணீர் விடுவதும்; அதற்கு முதலாளித்துவப் பத்திரிகைகள் ஒத்து ஊதுவதும்; உச்ச நீதி மன்றத்தின் கட்டளைக்குப் பணிந்து ஆட்சியாளர்கள் அரசு இயந்திரத்தை முடுக்கி விடுவதும், ''நான் அடிக்கிற மாதிரி நடிக்கிறேன்; நீ அழுகிற மாதிரி நடி'' என்கிற மோசடி நாடகத்தைத்தான் நினைவூட்டுகின்றன.

● செல்வம்


படிப்பகம்

www.padippakam.com

# சவடாலுக்கு மூலஉத்தி சந்தர்ப்பவாதமே தந்திர உத்தி — ''தமிழ்த் தேச''த்தின் சதிராட்டம்

கடந்த 2000-ஆம் ஆண்டு ஜூன், ஜூலை, ஆகஸ்டு ''புதிய ஜனநாயகம்'' இதழ்களில் இலங்கை - ஈழப்போர், இந்திய அரசின் நிலை, விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவு இந்தியத் தமிழின வாதக் குழுக்கள் - அரசியல் கட்சிகளின் அணுகுமுறை ஆகியவை பற்றி எழுதப்பட்டிருந்தது. இவற்றில் ஜூன் இதழில் வெளிவந்த ''ஈழம் மலருமா? இழுபறி நீடிக்குமா?'' என்ற கட்டுரையை ஒதுக்கி வைத்துவிட்டு அதன்பிறகு வந்த ''இந்தியாவின் நிலையும் விடுதலைப்புலிகள் ஆதரவாளர்களின் தமிழினத் துரோகமும்'' என்ற கட்டுரைக்கு மட்டும் மறுப்புரை எழுதியிருக்கிறார், ''தமிழ்த் தேசம்'' பத்திரிக்கையின் ஆசிரியர் தியாகு என்பவர். இதன் பொருள், முதலில் வெளிவந்த கட்டுரையில் புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் மீதான விமர்சனம் ஏதுமில்லை, அக்கட்டுரைக்கு தியாகு போன்றவர்கள் பதிலளிக்கத் தேவையில்லை என்பதல்ல. ஈழப்பிரச்சினை குறித்து தியாகு போன்றவர்கள் உருவாக்கி வரும் பொய்யான தோற்றத்தைத் தகர்க்கும் ஆணித்தரமான வாதங்கள் ஜூன் ''பு.ஜ.'' கட்டுரையில் இருந்தன.

குறிப்பாக, ''தமிழீழம் விரைவிலேயே மலர்ந்து விடும்; இறுதி வெற்றியைப் புலிகள் சாதிக்கும் தருணம் வந்துவிட்டது; புலிகளின் இலட்சியம் ஈடேறப் போகிறது; உலகத் தமிழர்கட்கு ஒரு தனிநாடு, தாய்நாடு விரைவில் அமையப் போகிறது'' என்கிற பிரமைதட்டும் பிரச்சாரம் உண்மையல்ல என்பதையும், இலங்கை - ஈழப்போர் நிலைமையோ, இந்தியாவின் அணுகுமுறையோ அதற்கு இடமளிக்காது என்பதையும் ஜூன் ''பு.ஜ.'' கட்டுரை எடுத்துக் காட்டியது. இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகள் எவ்வளவுதான் சக்தியும், நுட்பமும் திறனும் பெற்றிருந்தாலும், அரசியல் ரீதியில் அவர்கள் பாரிய தவறு இழைத்து வருவதையும் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தது. மேலும் குறிப்பாக இந்திய அரசு குறித்த புலிகளின் மதிப்பீடும் அணுகுமுறையும் அடிப்படையிலேயே தவறானதென்று விளக்கியிருந்தது.

இவையெதையும் மறுக்க முடியாத நிலையில், ''பு.ஜ.''வின் ஜூலை, ஆகஸ்டு கட்டுரையை மட்டும் எடுத்துக் கொண்டு மறுப்புரை என்கிற பெயரில் திருவாளர் தியாகு விதண்டாவாதங்களும் குதர்க்கங்களும் எழுதியிருக்கிறார். தனது திருத்தல்வாத பாரம்பரிய பாணியில் ''பு.ஜ.''வின் விமர்சனங்கள் ஆதாரபூர்வமற்றவை என்று காட்டுவதற்கு முயன்றிருக்கிறார். அப்படிக் காட்டுவதன் மூலம் ''பு.ஜ.''வின் விமர்சனங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு தப்பித்துக் கொள்ள முயலுகிறார். எடுத்துக்காட்டாக,

''இந்தியாவிலிருந்து தமிழ்நாடு ஏன் பிரிய வேண்டும்? அப்படிச் செய்வதற்கு அவசியம் ஏதுமில்லை'' என்று புலிகளின் அதிகாரபூர்வ அறிவுரையாளர் ஆண்டன் பாலசிங்கம் கூறியதாக ''பு.ஜ.'' கட்டுரையாளர் எடுத்துக் காட்டுகிறார். எங்கு எந்தச் சூழலில் அவர் இப்படிச் சொன்னார் என்பது குறிப்பிடவுமில்லை, சான்று ஏதும் சுட்டப்படவுமில்லை. பாலசிங்கம் அப்படிச் சொன்னதாகவே வைத்துக் கொள்வோம். அது அவர் கருத்தாக இருக்கலாம். அது எம்மைக் கட்டுப்படுத்தாது. குறித்துக் கொள்ளுங்கள், தோழரே!'' என்று தியாகு எழுதுகிறார்.

1999 நவம்பர் 27 மாவீரர் தினத்தன்று இலண்டனில் பத்திரிக்கையாளர்களுக்கு ஆண்டன் பாலசிங்கம் அளித்த பேட்டியில் இருந்துதான் ''பு.ஜ.'' எடுத்துக் காட்டியிருந்தது. (ஆதாரம்: ''ஃபிரண்ட்லைன்'' 1999 டிசம்பர் 24, பக்: 127) ஒருவேளை இப்படி ஆதாரத்தைக் காட்டினாலும் இடம், சூழலுக்குப் பொருத்தமற்ற சான்று என்று கூறித் தட்டி கழித்து விடலாம் என்றுதான் ''எங்கு எந்தச் சூழலில் இப்படிச் சொன்னார்'' என்று முன்கூட்டியே கேள்வி எழுப்புகிறார் தியாகு. அதையும் மீறி தமிழ்நாட்டு சுயநிர்ணய உரிமைக்குத் துரோகமிழைக்கும் வகையில் புலிகளின் ஆலோசகர் பேசலாமா என்று கேட்டுவிடுவார்கள் என்பதற்காக பாலசிங்கத்தின் கருத்து தம்மைக் கட்டுப்படுத்தாது என்று முன்னெச்சரிக்கையாகக் குறித்துக் கொள்ளும்படி கூறுகிறார் தியாகு.

தமிழ்நாட்டு சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையில் புலிகளின் நிலை துரோகத்தனமானது என்று அறியும்போது அதை விமர்சிக்கவோ, எதிர்க்கவோ, மறுக்கவோ துணிவும் திராணியுமற்ற தியாகு, அது ''பாலசிங்கத்தின் கருத்து; தம்மைக் கட்டுப்படுத்தாது'' என்கிறார். இப்படிச் சொல்லிவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? புலிகளின் அதிகாரபூர்வ ஆலோசகர், அதிகாரபூர்வ பேச்சாளர் தெரிவிக்கும் கருத்து, புலிகளின் அதிகாரபூர்வ நிலைப்பாடு - இதுதான் என்றாகாதா? தமிழ்நாட்டுத் தன்னுரிமைக்கு முன்னுரிமை என்பதை தமிழினவாதக் குழுக்கள் இலட்சிய முழக்கமாக அறிவித்திருக்கின்றனர். இவற்றில் சிலர் தனித்தமிழ்நாடு என்ற முழக்கத்தையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த முழக்கங்களுக்கு அவசியம் ஏதுமில்லை என்று புலிகள் அறிவிக்கிறார்கள்; அதை மறுக்கவோ, எதிர்க்கவோ, கண்டிக்கவோ மாட்டார்கள் என்றால் இவர்களின் இலட்சிய முழக்கங்களே கேலிக்கூத்தாக்கப்படவில்லையா? இவர்களின் நம்பகத் தன்மையே கேள்விக்குள்ளாகவில்லையா?

இந்திய அரசு தொடர்ந்து ஈழ எதிர்ப்பு நிலையெடுத்து வந்த போதும், விடுதலைப் புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் எட்டி உதைக்கும் கால்களையும் நக்கி எஜமான விசுவாசம் காட்டும் சில பிறவிகளைப் போல நடந்து கொள்ளுகிறார்கள், அப்படிச் செய்தால் இந்திய அரசின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற முடியும் என்று நம்புகிறார்கள் என்பதைப் பல ஆதாரங்களுடன் ''புதிய ஜனநாயகம்'' கட்டுரைகள் குறிப்பிட்டுள்ளன. இந்த ஆதாரங்களை மறுக்கவோ, நமது விமர்சனங்களுக்குப் பதிலளிக்கவோ இயலாத நிலையில் எல்லா விமர்சனங்களுக்கும் ''ஆம்'' விகுதி சேர்த்து மழுப்பிவிட்டு நழுவுகிறார் தியாகு.

''தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் தம்மையும் தாம் சார்ந்த அமைப்பையும் காத்துக் கொள்வதற்காக மத்திய அல்லது மாநில அரசுகளின் அல்லது இரண்டினதும் புகழ்பாடி, சமரசம் செய்து கொண்டு சந்தர்ப்பவாத அரசியல் நடத்த வேண்டும் என்று எண்ணுகிறார்களாம்!

''எட்டி உதைக்கும் கால்களையும் நக்கி எஜமான விசுவாசம் காட்டும் சில பிறவிகள் போல நடந்து கொண்டால் இந்திய அரசின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற முடியும் என்று நம்புகிறார்களாம்.

''இந்தக் கண்டனங்களுக்கு நாம் விடை சொல்ல விரும்பவில்லை. தமிழக அரசியல் களத்தை அக்கறையுடன் கவனித்துக் கொண்டிருப்பவர்களின் முடிவுக்கே இதை விட்டுவிடுகிறோம்.

''இந்திய அரசைப் பகைத்துக் கொள்ளாத வகையில் பேசவும் எழுதவும் வேண்டும் என்று நினைக்கிறோமாம்! எமது பேச்சைக் கேட்பவர்களும், எழுத்தைப்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பவர்களுமே இது குறித்தும் தீர்ப்புச் சொல்லட்டும்.

''தமிழீழ விடுதலை ஆதரவாளர்களைக் கடித்துக் குதறியது போதாது என்று பு.ஜ. கட்டுரையாளர் தமிழீழ விடுதலைப் புலிகளின் பக்கம் திரும்புகிறார். அவர்களின் அரசியல் அணுகுமுறைக் கொள்கையே இதுதானாம்:

''... இந்திய அரசின் ஆதரவு அல்லது ஒப்புதல் இல்லாமல் தனி ஈழத்துக்கான போரில் வெற்றிபெற முடியாது; அதற்காக என்ன விலை கொடுத்தாவது இந்தியாவின் ஆதரவு அல்லது ஒப்புதலைப் பெறுவது; அதுவும் முடியாவிட்டால் இந்திய அரசை நடுநிலைப்படுத்துவதற்காக அதன் பிராந்திய மேலாதிக்கத்தை ஏற்பது; தேவையானால் இந்திய அரசின் ஏவலாளாக செயல்படுவது என்கிற ரீதியில் ஈழவிடுதலைப் புலிகளின் அரசியல் மூலஉத்தி அமைந்திருக்கிறதா?

''ஆம் என்கிறார் பு.ஜ. கட்டுரையாளர். ஈழ விடுதலைப்புலிகளும் இந்திய அரசை 'தாஜா' செய்யும் வேலையில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்கிறார். இந்த மூல உத்திக்கு அவர் காட்டும் சான்றுகள் இவைதான்.

''எம்.ஜி.ஆர் மற்றும் இந்திரா - ராஜீவ் பரம்பரையைப் புலிகள் வானளாவப் புகழ்ந்தார்களாம்! 'இந்திய அமைதிப்படை' விரட்டியடிக்கப்பட்ட பிறகும் ராஜீவிடம் சமரசம் காணத் தூது அனுப்பினார்களாம்! இந்தியாவுடன் மோதும் நோக்கம் விடுதலைப் புலிகளுக்குக் கிடையாது என்று ஆண்டன் பாலசிங்கம் அறிவித்துவிட்டாராம்!

''விடுதலைப் புலிகளின் மூல உத்திக்கான இந்த அபாரமான சான்றுகளை மறுக்காமலேயே ஒரு சில மறுக்க முடியாத உண்மைகளை மட்டும் எடுத்துக் காட்டி அவற்றைத் தராசின் மறுதட்டில் வைத்துப் பார்க்கும்படி பு.ஜ. கட்டுரையாளரை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்'' என்று எழுதிச் செல்லும் தியாகு அதற்காக ஐந்து அம்சங்களைக் காட்டுகிறார். இவை எப்படி சிறிது அளவே உண்மை கலந்த பெரும் பொய்கள் என்பதைப் பிறகு பார்ப்போம்.

இவ்வாறு நமது விமர்சனங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பொறுக்கியெடுத்து வெறுமனே ''ஆம்'' என்ற விகுதி சேர்த்து எழுதிவிட்டு, வாசகர்களின் முடிவுக்கே விட்டுவிடுவது என்றால் இதுதான் ''புதிய ஜனநாயகம்'' கட்டுரைக்கு மறுப்பா? விமர்சனங்களோடு, அவற்றிக்கான ஆதாரங்களையும் எடுத்துக் காட்டி மறுப்பது தானே உண்மையில் மறுப்புரையாகும். தாங்கள் அறிவித்த தமிழ் தேசத் தன்னுரிமைக்கே விசுவாசமாக இல்லாமல் புலிவாலைப் பிடித்துக் கொண்டு சுற்றியவர்களிடம் அத்தகைய பொறுப்பை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்!

ஈழ விடுதலைப் புலிகளின் இந்திய எதிர்ப்புக்குச் சான்றாக ஐந்து அம்சங்களை தியாகு அடுக்கி இருக்கிறார். சிங்களப் படையின் மிகக் கடுமையான நெருக்குதலுக்கிடையிலும் புலிகள் இந்தியப் படையைத் துணைக்கு அழைக்கவில்லை; ராஜீவ் - ஜெயவர்த்தனே உடன்படிக்கையை மூல உத்தி வகையில் மறுதலித்து, இந்திய வல்லரசின் புவிசார் நலன்களுக்காக அவ்வுடன்படிக்கை திணிக்கப்படுவதாக தொடக்கத்திலேயே அறிவித்தார்கள்; இந்தியப் பகைவனைத் தங்கள் மக்களுக்கும் உலகிற்கும் புலிகள் தோலுரித்துக் காட்டினார்கள். உலகின் நான்காவது பெரியதான இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை எதிர்த்துக் களங்கண்டார்கள்; இன்றளவும் இந்திய வல்லரசின் தெற்காசிய மேலாதிக்க திட்டங்களுக்கு முதற்பெருந்தடையாக இருப்பவர்கள் புலிகள் என்று கூறுகிறார்.

இங்கே, ''இன்றளவும் இந்தியப் பேரரசின் தெற்காசிய மேலாதிக்கத் திட்டங்களுக்கு முதற்பெரும் தடையாக இருப்ப



''தமிழ்த் தேசம்'' தியாகு: புலிவாலைப் பிடித்துக் கொண்டு சந்தர்ப்பவாத சதிராட்டம்.

வர்கள் புலிகள்; இதற்காகவன்றோ பொய்க் காரணங்களைக் காட்டி புலிகள் இயக்கத்தை இந்திய அரசு தடை செய்துள்ளது'' என்று எழுதுகிறார் தியாகு. ஆனால் இதே மறுப்புக் கட்டுரையின் இரண்டாம் பகுதியில் வேறு மாதிரி எழுதுகிறார். ''தமிழீழம் அமைவது அதனளவிலேயே இந்திய நாட்டின் (அரசு மற்றும் மக்களின்) நலன்களுக்கு எதிராக அமையப் போவதில்லை. தமிழீழம் தானாக வலிய வந்து இந்திய அரசைப் பகைத்துக் கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. இந்திய அரசுதான் மக்கள் நலனுக்கு மாறாகவும், ஆளும் வர்க்க நலனுக்குத் தோதாகவும் வலியச் சென்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் குலைக்க முயல்கிறது'' என்று எழுதுகிறார்.

தமிழீழம் அமைவது இந்திய அரசின் நலன்களுக்கு எதிரானது அல்லவென்றும் அதேசமயம், இந்திய வல்லரசின் தெற்காசிய நலன்களுக்காகவே ராஜீவ் - ஜெயவர்த்தனே உடன்படிக்கை திணிக்கப்படுவதாக புலிகள் அறிவித்தார்கள் என்றும் முன்னுக்குப் பின் முரணாகப் பித்தலாட்டம் செய்கிறார், தியாகு. இந்திய வல்லரசின் புவிசார் அரசியல் நலன்களுக்கு - இந்தியப் பேரரசின் தெற்காசிய மேலாதிக்கத் திட்டங்களுக்கு விடுதலைப் புலிகளோ தமிழீழமோ எதிராகவோ, தடையாகவோ இருக்க மாட்டா என்று திரும்பத் திரும்ப வாக்குறுதி அளிக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இதற்கான ஆதாரங்களை முன் வைத்து புலிகளையும் அவர்களின் ஆதரவாளர்களின் சந்தர்ப்பவாதத்தையும் ''பு.ஜ.'' அம்பலப் படுத்தியது.

1999 நவம்பர் 27 மாவீரர் தினத்தன்று இலண்டனில் ஆண்டன் பாலசிங்கம் அளித்த பேட்டி, (ஆதாரம்: மேற்படி ''ஃபிரண்ட்லைன்'' இதழ்) மற்றும் இதே கருத்தை வெளிப்படுத்தும் பழ. நெடுமாறன் ''விண் நாயகன்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி மற்றும் மணியரசன் தனது ''தமிழர் கண்ணோட்டம்'' பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஆகியவற்றை ஆகஸ்ட் 2000 பு.ஜ. மேற்கோள் காட்டி எழுதியிருந்தது.

இவற்றை ஆதாரமாக வைத்து தனி ஈழத்துக்கான போரில் இந்தியாவின் ஆதரவு அல்லது ஒப்புதலைப் பெறுவதற்கு என்ன விலையும் கொடுப்பது, அதன் பிராந்திய மேலாதிக்கத்தையும் ஏற்பது, தேவையானால் இந்திய அரசின் ஏவலாளாகச் செயல்படுவது என்பதே புலிகளின் அரசியல் மூல உத்தி என்று ''பு.ஜ.'' எழுதியது. இந்தச் சான்றுகளை மறுக்க முடியாமல், ''மறுக்காமலே'' புலிகளின் இந்திய எதிர்ப்புக்குச் சான்றாக ஐந்து அம்சங்களை முன் வைத்து வாதம் புரிகிறார் தியாகு.

ஆனால் தியாகுவின் வாதத்துக்கு மறுப்பாக ஆண்டன் பாலசிங்கத்தின் இலண்டன் பேட்டி அமைந்துள்ளது. முதலில் அது ''பகைவன் நம் மீது பழி சுமத்த முற்படும் போது அந்தப் பழியை அவனுக்கு எதிராகவே திருப்புகிற அரசியல் உத்தி ''பு.ஜ.'' கட்டுரையாளருக்குத் தேவைப்படுகிறதோ இல்லையோ, புலிகளின் ஆலோசகருக்குத் தேவைப்படுகிறது'' என்கிறார். அடுத்த வரியிலேயே ''பிரபாகரனிடமிருந்து மேற்கோளாக எதையுமே காட்டவில்லை'' என்று எழுதி ஆண்டன் பாலசிங்கத்தின் கூற்றை ஆதாரமாகக் காட்டுவதை ஒதுக்கித் தள்ளிவிடுகிறார். பாலசிங்கம் புலிகளின் அதிகாரபூர்வ பேச்சாளரும், ஆலோசகருமாவார். அதோடு பாலசிங்கம் அதே பேட்டியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஒப்புதலோடுதான் இந்தியா பற்றிய கருத்துக்களைக் கூறுவதாக அறிவித்திருக்கிறார். ''பு.ஜ.'' இதையும் எடுத்துக்காட்டியிருக்கிறது. அதனால்தான் ''பு.ஜ.'' காட்டும் சான்றுகளை மறுக்காமலே ஐந்து அம்சங்களை அடுக்கி, புலிகள் ஒரு அரசியல் உத்தி

யாகத்தான் இந்திய ஆதரவுப் பேச்சுப் பேசுகின்றனர்; மற்றபடி புலிகள் எப்போதுமே இந்திய எதிர்ப்பாளர்கள்தான் என்று சாதிக்க முயன்றுள்ளார்.

இந்திய அரசின் ஏவலாளாக புலிகள் செயல்பட்டதற்கு நேரடியாகவே, "பு.ஜ" பலமுறை சான்றுகளோடு எழுதியிருக்கிறது. குறிப்பாக தியாகு "மறுப்பு" எழுதிய கட்டுரைக்கு முன்பு ஜூன் 2000 "பு.ஜ." இதழிலும் எழுதியிருக்கிறது. இந்திரா, ராஜீவ், எம்.ஜி.ஆர். ஆகிய இந்திய ஆட்சியாளர்களுடனும், இந்திய உளவுப் படையான "ரா"வுடனும், புலிகளுக்கு இருந்த உறவு, "ரா"வின் உதவிகளை மட்டுமல்ல, உத்தரவுகளையும் ஏற்று அனுராதபுரம் போன்ற படுகொலைகள் புரிந்ததையும் ஈழப்போரை நிறுத்திக் கொள்வதற்கு ஈடாக பல கோடி ரூபாய் பேரம் பேசியதையும் எழுதியிருக்கிறது.

ஆனால் புலிகள் படை ஒரு பாசிச அமைப்பு, எனவே அதற்கே உரிய முறையில் "இறுதி இலட்சியம் தனது குழு நலனே", என்பதை முன் வைத்து இந்திய - இலங்கை அரசுகளுடனான பேரங்களை முறித்துக் கொண்ட நிகழ்ச்சிகளும் உண்டு. இதைச் சான்றுகாட்டி மிகப் பெரிய இலட்சியவாதிகள் போலக் காட்டிக் கொள்கின்றனர். ஈழ விடுதலைப் போரைக் கை விடுவது, அதற்காக புலிகளை மட்டுமே ஏகபோக ஈழப் பிரதிநிதிகளாக ஏற்பது, ஈட்டுத் தொகையாக எவ்வளவு கோடி ரூபாய்களைப் பெறுவது ஆகிய பிரச்சினைகளில்தான் ராஜீவ், பிரேமதாசா, சந்திரிகாவுடன் பேரங்கள் முறிந்தன. புலிகள் மீதான இத்தகைய குற்றச்சாட்டுகள் ஏற்கனவே பிற செய்தி ஊடகங்களில் வந்துள்ளன. அவற்றை தியாகு போன்றவர்கள் ஏற்க மறுப்பார்கள் என்பதால் இங்கே புலிகளின் அதிகாரபூர்வ பத்திரிகையிலிருந்தே ஒரு சான்று தருகிறோம்.

"இரகசியப் பேச்சு நடந்தது. யுத்தம் தொடர்வது இந்தியாவுக்கு அவமானம் என்கிறார்கள். நாம் பேச்சு வார்த்தைக்குத் தயார்; யுத்த நிறுத்தமும் செய்யலாம் என்றோம். ஆயுதங்களின் ஒரு பகுதியை ஒப்படைக்க வேண்டும் என்றனர். நாம் சம்மதித்தோம். ஆனால் மக்களுக்கு யுத்தத்தால் ஏற்பட்ட நட்டத்திற்கு நூறு கோடி ரூபாயும், இயக்கத்திற்கு ஐம்பது கோடி ரூபாயும் தரவேண்டும் என்றோம். சம்மதித்தார்கள்"

"ஆனால் முதலில் யார் எதைக் கொடுப்பது என்பதில் சிக்கல் வந்தது. முதலில் பணத்தைத் தாருங்கள். பிறகு ஆயுதங்களை ஒப்படைக்கலாம் என்றார் தலைவர் பிரபா. நாங்கள் ஆயுதங்களைத் தந்து விட்டால் நீங்கள் சரணாகதி அடைந்து விட்டீர்கள், நாங்கள் வெற்றி பெற்று விட்டோம் என்று பிரச்சாரம் செய்வீர்கள்' என்றார் பிரபா." (புலிகளின் அதிகாரபூர்வ ஏடான "களத்தில்" 19.2.1993 பக்: 5). இவ்வாறு



பாசிச இந்திராவுக்குப் பொய்களாலேயே புகழஞ்சலி செலுத்திய புலிகளின் தலைவர் பிரபாகரன்.

யாழ் பல்கலைக் கழகத்தில் கலை இலக்கியப் பத்திரிகையாளர் நடத்திய கிட்டு அஞ்சலிக் கூட்டத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி ஆன்ரன் பாலசிங்கம் தனது சிறப்புரையில் குறிப்பிட்டதாக புலிகளின் ஏடு வெளியிட்டுள்ளது. புலிகளின் இந்திய எதிர்ப்பு எத்தகையது என்பதை இதுவே காட்டுகிறது.

தியாகுவே என்ன சொல்லுகிறார்: "ராஜீவ் - ஜெயவர்த்தனா உடன்படிக்கையை மூல உத்தி வகையில் மறுதலித்து, இந்திய வல்லரசின் புவிசார் அரசியல் நலன்களுக்காக அவ்வுடன்படிக்கை திணிக்கப்படுவதாகத் தொடக்கத்திலேயே அறிவித்தவர்கள் புலிகள்" என்கிறார். இதன் பொருள் அவ்வுடன்படிக்கையைப் புலிகள் மூல உத்தி வகையில்தான் மறுதலித்தார்கள்; தந்திரஉத்தி வகையில் மறுதலிக்கவில்லை; ஏற்றுக் கொண்டார்கள் என்பதுதானே. "சிங்களப்படையின் மிகக் கடுமையான நெருக்குதலுக்கிடையிலும் இந்தியப் படையைப் புலிகள் துணைக்கு அழைத்ததில்லை" என்கிறார், தியாகு.

ராஜீவ் - ஜெயவர்த்தனே உடன்படிக்கை இந்தியாவின் இராணுவத் தலையீட்டையும் உள்ளடக்கியது என்பது அனைவருக்கும் தெரியும். மூலஉத்தி வகையில் புலிகள் அதை மறுதலித்ததாகவே இருந்தாலும் தந்திரவுத்தி வகையில் அவ்வுடன்படிக்கையை ஏற்றார்கள் என்கிறபோது, இந்திய இராணுவத் தலையீட்டுக்கு ஒப்புக் கொண்டார்கள் என்பதுதானே பொருள். தந்திர உத்தி வகையில் ஏற்றுக் கொண்டதோடு இந்திய இராணுவத்திடம் ஆயுதங்களை ஒப்படைக்கவும் செய்தனர். ஈழத்தின் மீது புலிகளின் ஏகபோக உரிமையை மறுக்கும் வகையில் பிற குழுக்களை அங்கீகரித்து ஒரு பொம்மை அரசை நிறுவும் முயற்சியில் இந்திய அரசு இறங்கியபோது, புலிகளுடனான அதன் பேரங்கள் முறிந்து போன நிலையில்தான் தவிர்க்க முடியாதவாறு இந்திய இராணுவத்துடன் போரிடும் நிலைக்குப் புலிகள் தள்ளப்பட்டார்கள். இந்திய இராணுவத் தலையீட்டைப் புலிகள் கோரவில்லை என்று பெருமையடித்துக் கொள்ளுகிறார், தியாகு. ஆனால் அவ்வாறு கோருவதை விட மோசமானது இந்திய உளவுப்படையான "ரா"வின் தலையீட்டைப் புலிகள் ஏற்றதாகும். இதன் தொடர்ச்சியாகத்தான் பிரபாகரனை "ரா" உளவுப்படை டெல்லிக்குக் கடத்திக் கொண்டு போனதும், நட்சத்திர விடுதியில் அடைத்து வைத்து உருட்டி மிரட்டி ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை ஏற்கும்படி செய்ததும் நடந்தன.

"இந்திய வல்லாதிக்கத்தை அசட்டை செய்து, இந்தியாவின் உதவியை நாடாது ஜே.ஆர். செயற்பட்டது, அப்போதைய இந்தியப் பிரதமரான இந்திராவுக்கு ஆத்திரத்தை ஊட்டியது.

தமிழீழ விடுதலைப் போராளிகளை கொண்டு ஜே.ஆருக்கு பாடம் புகட்ட இந்திரா திட்டமிட்டார். சிங்கள அரசை ஆட்டம் காணச் செய்து, தனது காலடியில் விழ வைக்கும் தந்திரோபாயமாக - இடைக்கால உத்தியாக போராளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

இலங்கையில் தனது ஆதிக்கத்தை கொண்டு வருவதற்காக தமிழீழ விடுதலைப் போராளிகளை இந்தியா பகடைக் காய்களாக பயன்படுத்தியது. இதுதான் உண்மை.

எமக்கெல்லாம் ஆயுத உதவி வழங்கப்பட்டது; பயிற்சியும் தரப்பட்டது; இது உலகறிந்த உண்மை. உண்மையில் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்ற சிந்தனையில் இந்த உதவி வழங்கப்படவில்லை." (ஆதாரம்: "களத்தில்" - 19.2.1993)

இந்திரா காலத்திலிருந்தே இலங்கை மீதான வல்லாதிக்க நோக்கத்துடனேயே புலிகள் உட்பட விடுதலைப் போராளிகளைப் பகடைக் காயாக இந்திய அரசு பயன்படுத்தி வந்தது என்றும் புலிகளை எப்படியெல்லாம் ஆட்டிப் படைத்தது என்றும் விவரிக்கிறார் ஆண்டன் பாலசிங்கம். இருந்த போதும் இந்திரா சாவுக்கு

## அறிவிப்பு

இடமின்மையின் காரணமாக "முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்" தொடர் கட்டுரை இவ்விதழில் வெளிவரவில்லை. அடுத்த இதழில் வெளிவரும்.

— ஆசிரியர் குழு

www.padippakam.com

அஞ்சலி செலுத்தும் வகையில் ராஜீவுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு எழுதுகிறார், பிரபாகரன். அதில், ''திருமதி. இந்திரா காந்தி உலக சமாதானத்திற்காகவும் மனித சுதந்திரத்திற்காகவும் அயராது போராடிய வீராங்கனையாவார். ஒடுக்கப்பட்ட ஏழை மக்களின் ஏகோபித்த குரலாகத் திகழ்ந்தார். தீர்க்க தரிசனத்தோடும் பூரண அர்ப்பணிப்போடும் பாரத தேசத்தை சோசலிசப் பாதையில் நிர்மாணம் செய்ய அயராதுழைத்தார். நவபாரதத்தின் சிற்பியாகத் திகழ்ந்தார். இந்திய துணைக் கண்டத்தில் ஏகாதிபத்தியத்தையும் அதன் பேராதிக்க சதிவலைப் பின்னலையும் அவர் முழுமூச்சாக எதிர்த்து வந்தார். தேசங்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் உலகமெங்கும் நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்களை அவர் முன் நின்று ஆதரித்து வந்தார்.

''அநாதரவான நிலையில் துயருறும் தமிழீழ மக்களின்பால் அன்னை இந்திரா காந்தி எப்போதுமே அனுதாபமும் அக்கறையும் காட்டி வந்திருக்கிறார். ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரித்து வருவதனை அவர் எப்போதுமே கண்டித்தார். தமிழ் மக்களின் மீதான இனப் படுகொலையை நிறுத்தியாக வேண்டும் என்று அரசியல் ராஜதந்திர வழிகளில் அவர் ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்தித்தார். இந்தியாவின் நல்லெண்ண அனுசரணையின் கீழ் தமிழ் மக்களின் பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு தனிப்பட்ட முறையில் பெரும் அக்கறை செலுத்தினார். தமிழ் மக்களின் பெருங்காவலராகத் திகழ்ந்த அன்னை இந்திராவின் தனிப்பட்ட அக்கறை மட்டும் இல்லாது போயிருந்தால் எமது தேசமே அழிந்து போயிருக்கும். தமிழ் விடுதலை இயக்கத்தின் ஆத்மீக வலிமையின் கோபுரமாக அவர் திகழ்ந்தார். (ஆதாரம்: ''விடுதலைப் புலிகள்'' - டிசம்பர் - 84)

தெற்கு ஆசியாவின் மீது வல்லாதிக்கத்தை நிறுவும் நோக்குடன் விடுதலைப் போராளிகளைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்திய பாசிச இந்திராவுக்குப் பொய்களாலேயே புகழஞ்சலி செலுத்துகிறார் புலிகளின் தலைவர் பிரபாகரன். இதெல்லாம் அரசு தந்திர உத்தி என்று கூறி நியாயப்படுத்துவதற்கு தியாகு போன்றவர்கள் எப்போதும் காத்திருக்கின்றனர் அல்லவா! அதனால்தான்!

''இலங்கை - ஈழப் பிரச்சினையில் இந்தியா - நார்வே நாடுகளின் சமரச முயற்சியை ஆதரிப்பதாக அமெரிக்க வெளியுறவு மந்திரி நேரடியாக சந்திரிகாவிடம் கூறிவிட்டார்; இதன் விளைவாக இலங்கை அரசு தனிமைப்பட்டுவிட்டது; எந்த நாடும் இலங்கைக்கு வெளிப்படையாக உதவி



ஈழப் போரைக் கைவிட இந்திய ஆக்கிரமிப்பாளர்களிடம் பல கோடிக்குப் பேரம் நடத்தியதை ஒப்புக் கொண்ட புலிகளின் அதிகாரபூர்வ ஆலோசகர் ஆண்டன் பாலசிங்கம்.

புரியத் தயாராக இல்லை; பாகிஸ்தானும் இஸ்ரேலும் இலங்கைக்கு ஆயுத விற்பனை என்கிற முறையில் மட்டுமே முன் வந்துள்ளன. அதுவும் ஒரு நிலைக்கு மேல் கொடுக்க முடியாது; உலகின் எந்த நாட்டு இராணுவமும் இலங்கை அரசாங்கத்துக்கு உதவி செய்யத் தயாராக இல்லை; அதே நேரத்தில் போர்க்களத்தில் மட்டுமல்ல, ராஜதந்திரக் களத்திலும் புலிகள் வெற்றிகளை ஈட்டி வருகிறார்கள்'' என்று பழ.நெடுமாறன் ''விண்நாயகன்'' பத்திரிகைக்குப் பேட்டியளித்துள்ளார். இவை அப்பட்டமாக, அடிமுட்டாள்தனமான, பிதற்றல் என்று எழுதுவதைத் தவிர வேறு விமர்சனம் தேவையா? பழ.நெடுமாறனின் இந்த புளுகுகளைக் கூட சிங்களப் பேரினவாத அரசைத் தனிமைப்படுத்துவதற்கான பயன்பாடு என்று நியாயப்படுத்துகிறார், தியாகு. இப்படி அப்பட்டமாகப் புளுகுவதன் மூலம் சிங்களப் பேரினவாத அரசு தனிமைப்பட்டுவிடுமா?

இவ்வாறு ஈழ விடுதலைக்குப் பணியாற்றுவதாகக் கருதிக் கொண்டு புலிகளின் ஆதரவாளர்கள் முன் வைக்கும் துரோகத்தனமான பல வாதங்களையும் பு.ஜ. குறிப்பிட்டிருந்தது. ''பு.ஜ.'' குறிப்பிட்டிருந்த அந்த வாதங்களுக்கும் கூட ''ஆம்'' விகுதி சேர்த்து எல்லாம் பு.ஜ.வின் அவதூறுகள் நிலைப்பாடுகள் எமக்குத் தெரியாமலும் இல்லை, மறைக்கவும் இல்லை; அவதூறுகளும் இல்லை. எல்லாம் ஆதாரபூர்வமான உண்மைகள்தாம்.

உதாரணமாக, தமிழினவாதிகள் இங்கே தன்னுரிமை கோரிக்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட புலிகள் ஆதரவையே முதன்மைப் பணியாகக் கொண்டிருப்பதற்கு ஆதாரமாக, இது குறித்து ''தமிழர் கண்ணோட்டம்'' ஏட்டில் மணியரசன் எழுதியுள்ளவையே உள்ளன. காசுமீர் உட்பட இந்திய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை குறித்துப் பல துரோகத்தனமான பேட்டிகளை பழ. நெடுமாறனே அளித்துள்ளார். ஆண்டன் பாலசிங்கத்தின் பேட்டியை தியாகு நியாயப்படுத்தியிருப்பது இதை உறுதிப்படுத்துகிறது.

தொகுப்பாகப் பார்க்கும்போது, தியாகு தனது மறுப்புக் கட்டுரையில் முன்னுக்குப் பின் முரணாக உளறியிருக்கிறார்; தமது சகபாடிகளின் சந்தர்ப்பவாதங்களை நியாயப்படுத்த மேலும் சந்தர்ப்பவாதங்களை அடுக்கியிருக்கிறார். முக்கியமாக, ஈழ விடுதலைக்கு இந்திய அரசு மூல உத்தி வகையில் பகை சக்திதான்; இந்தியப் பேரரசு தெற்காசிய பிராந்திய மேலாதிக்க வல்லரசு நலன்களையும் திட்டங்களையும் கொண்டிருந்தபோதும் புலிகளின் இராணுவ வெற்றிகளையும், ஈழ விடுதலைக்கு மக்கள் ஆதரவு பெருகுவதையும், சர்வதேச நிலைமைகளையும் பொருத்து இந்திய அரசும் ஈழ ஆதரவு நிலையெடுக்கும் என்கிறார். இந்த நம்பிக்கையின் காரணமாக இந்திய அரசிடம் சந்தர்ப்பவாதமாக நடந்து கொள்வதை முரண்பாடுகளைப் பயன்படுத்துவது, எதிரி பழிபோடும்போது அதையே அவனுக்கு எதிராகத் திருப்புவது, மக்களுக்குப் புரிய வைப்பது, தந்திர உத்தி வகையில் ஆதரிப்பது என்று பல வகையிலும் அதை நியாயப்படுத்துகிறார்.

தாங்களே கோட்பாடு ரீதியாக பகை சதி, எதிரி சக்தி என்று கூறிக் கொள்ளுபவர்களைக் கூட, நடைமுறை ரீதியாக பகைத்துக் கொள்ளாத வகையில் அரசியல் நடத்துவதை போலி கம்யூனிஸ்டுகளும் திராவிடக் கட்சிகளும் கைதேர்ந்த முறையில் கடைப்பிடித்து வருகிறார்கள். ''அமைதி வழியிலேயே புரட்சி நடத்த கம்யூனிஸ்டுகள் விரும்புகிறார்கள். ஆனால் ஆளும் வர்க்கங்கள் அதற்கு அனுமதிக்க மாட்டார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்வோம்; அமைதி வழியா? ஆயுதப் போராட்டமா? என்ற கேள்வி எதிரியிடம் சிக்க வைப்பதற்கான கேள்வி'' என்று போலி கம்யூனிஸ்டுகள் தந்திர வாதம் புரிவதுண்டு. அதேபோல ''பிரிவினை கோர மாட்டோம், அந்த நிலைக்கு தள்ளினால் நாங்கள் பொறுப்பல்ல'' என்று திராவிடக் கட்சிகள் வாதம் புரிவதுண்டு. அவர்களது மழுப்பல் வழியிலே நின்றுதான் புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் சந்தர்ப்பவாத அரசியல் நடத்துகிறார்கள்.

தியாகு, மணியரசன் போன்ற தமிழினவாதிகளைப் பொருத்தவரை ''புலிகள் களத்தில் ஆயுதப்போராட்டம் நடத்துகின்றனர்'' என்கிற இன உணர்வு கொண்ட இளைஞர்களின் பரவசத்தில் குளிர் காய்வதிலேயே காலத்தை நகர்த்துகின்றனர். இராமதாசு, வைகோ போன்றவர்களின் அரசியலுக்குச் சூடேற்றுவதற்குத்தான் ஈழப் போர் உதவுகிறது என்றால் அது தமிழினவாதிகளின் அரசியல்வாழ்வுக்கான ஒரே ஆதாரமாக இருக்கிறது.

— ஆசிரியர் குழு

(முற்றும்)

www.padippakam.com

# “மனித உரிமை மயிருக்குச் சமம்” — தஞ்சை போலீசின் கொட்டம்

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் நாடு மீண்டும் காலனியாக்கப் பட்டு வருவதை எதிர்த்து ம.க.இ.க. - பு.மா.இ.மு. - வி.வி.மு - பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் பிரச்சார இயக்கத்தை வீச்சாக நடத்தி வருகின்றன. இதையொட்டி இவ்வமைப்புகள் செப்டம்பர் 3-ஆம் தேதியன்று தமிழகமெங்கும் கோக் - பெப்சி போன்ற அன்னியப் பொருட்கள் எரிப்புப் போராட்டத்தை அறிவித்து சுவரொட்டி, சுவரெழுத்து, துண்டுப் பிரசுரம், தெருமுனைக் கூட்டங்கள் என பிரச்சாரத்தை நடத்தின. தஞ்சை நகரிலும் பல இடங்களில் இப்போராட்டத்தை அறிவித்து பெரிய அளவில் சுவரெழுத்து, பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

காங்கிரசுப் பெருச்சாளியான பூண்டி வாண்டையாரின் வாரிசும் கட்டைப் பஞ்சாயத்துப் பேர்வழியுமான கிருஷ்ணசாமி வாண்டையார் என்பவர் தனது பிறந்தநாள் விழா விளம்பரத்தை இப்புரட்சிகர அமைப்புகளின் போராட்ட அறிவிப்பு சுவரெழுத்தை அழித்துவிட்டு தனது எடுபிடிகளைக் கொண்டு ஆகஸ்டு 29-ஆம் தேதியன்று எழுதினார்.

29-ஆம் தேதியன்று மாலையில் அன்னியப் பொருட்கள் எரிப்புப் போராட்டத்தை விளக்கி தெருமுனைக் கூட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பிய தோழர்கள் வாண்டையாரின் இந்த அராஜகத்தைக் கண்டனர். அன்றிரவே, “கட்டைப் பஞ்சாயத்துத் தலைவருக்குப் பிறந்த நாள் விழா விளம்பரம் ஒரு கேடா? நாட்டுப் பற்று இல்லாத துரோகக் கும்பலின் அராஜகத்தைப் பாரீர்! போலீசே, இந்த அராஜகக் கும்பல் மீது நடவடிக்கை எடு!” என்று கையால் எழுதப்பட்ட சுவரொட்டிகளை ஒட்டினர்.

நள்ளிரவில் ஒரு பகுதியில் தோழர் பரமானந்தமும் மற்றும் இரு தோழர்களும் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தபோது, “டேய்! யாருடா அவன்? என்னடா ஒட்டுறீங்க?” என்ற குரல் கேட்டு தோழர்கள் திரும்பிப் பார்த்தனர். அங்கே ஒரு காரில் வந்த டி.எஸ்.பி. (தஞ்சை நகர போலீசு துணை கண்காணிப்பாளர்) மூர்த்தியும், ஐந்தாறு போலீசாரும் நின்று கொண்டிருந்தனர். தோழர் பரமானந்தம் தமது அமைப்பை அறிமுகப்படுத்திக் கொண்டு, எதற்காக சுவரொட்டி ஒட்டுகிறோம் என்பதை விளக்கினார். “யாரைக் கேட்டு சுவரொட்டி ஒட்டுற? எங்கே பெர்மிஷன் வாங்கின? என்னடா பெரிய மயிரு கண்டனம் தெரிவிக்கிறே?” என்று வழக்கமான தனது சாக்கடை வாயினால் டி.எஸ்.பி. எகிறிக் குதித்தார். இதற்கெல்லாம் போலீசிடம் அனுமதி பெற வேண்டியதில்லை; கண்டனம் தெரிவிப்பது மிகச்சாதாரண ஜனநாயக உரிமை என்று தோழர் கூறியதும், ஆத்திரமடைந்த டி.எஸ்.பி. “டேய் நாயே, யாருகிட்ட சட்டத்தைப் பத்தி பேசற? உனக்கு என்னடா மயிரு சட்டம் தெரியும்? ஓடுங்கடா இங்கியிருந்து!” என்று கூச்சல் போட்டார். தோழர்களும் வேறிடத்தில் ஒட்டலாம் என பசை வாளியுடன் புறப்பட்டனர்.

ஆனால் ஆத்திரம், அடங்காதவராக, “பெரிய மயிரு கட்சி; புடுங்கி, சட்டம் பேச வந்துட்டானுங்க ஒக்...லி பயலுங்க” என்று அசிங்கமாக டி.எஸ்.பி. கூச்சல் போட்டார். இதைச் சகித்துக் கொள்ள முடியாமல், “எங்க அமைப்பைப் பத்தி இப்படி அவதூறாப் பேசாதீங்க. நீங்க போஸ்டர் ஒட்டக் கூடாதுன்னு எங்களைப் போகச் சொன்னீங்க; நாங்களும் போய்கிட்டு இருக்கோம். அப்புறம் எதுக்காக வீணா எங்க அமைப்பைப் பத்தி திட்டுறீங்க” என்று தோழர்கள் கூறியதும், வெறிபிடித்தவரைப் பேரல் காணப்பட்ட டி.எஸ்.பி., “டேய்! எங்கிட்டேயே வாதம் பண்ணுறியா? இவனுங்கள வண்டியில ஏத்துங்கடா!” என்று கூச்சலிட்டார். உடனே இது எந்த போலீசு நிலைய எல்லைக்குள் வருகிறது என்று போலீசாரிடம் கேட்டு தஞ்சை - கிழக்கு போலீசு நிலையத்துக்கு உத்தரவு பிறப்பித்தார்.

அடுத்த சில நிமிடங்களில் 15 போலீசார் வேனில் வந்து குவிந்தனர். திமுதிமுவென ஓடி வந்த போலீசார், தோழர்களை மிருகத்தனமாக அடித்து வண்டியில் ஏற்றுவதற்குத் தள்ளினர். சட்டையைப் பிடித்து இழுத்து பிடரியில் அடித்தனர். “நாங்கள் வண்டியில் ஏறிக் கொண்டிருக்கும்போது இப்படி அடிப்பது நியாயமில்லை” என்று தனது சட்டையைப் பிடித்து இழுத்த போலீசுக்காரரின் கையை ஒரு தோழர் விலக்கி விட்டார். உடனே போலீசையே திருப்பி அடிக்கத் துணிஞ்சிட்டானுங்க என்று அவர் கூச்சலிடவும், 15 போலீசாரும் தோழர்களைச் சூழ்ந்து கொண்டு தாக்கி போலீசு வண்டியில் தூக்கி வீசினர்.




தஞ்சை - கிழக்கு போலீசு நிலையத்தில் தோழர்களின் ஆடைகளைக் கிழித்து உள்ளாடையுடன் நிறுத்தி 15 போலீசார் சூழ்ந்து கொண்டு காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினர். பின்னர் ஒவ்வொரு தோழரது கால்களின் மீது 2 போலீசார் ஏறி நின்று கொள்ள, பாதங்களின் மீது மற்ற போலீசார் கொடூரமாக தடியால் அடித்து சித்திரவதை செய்தனர்.

ஒரு சுற்று இத்தாக்குதல் முடிந்ததும், டி.எஸ்.பி. மூர்த்தி எழுந்து வந்து, தோழர் பெரியசாமியைப் பிடித்து “இவன்தாண்டா போலீசு கையை தட்டி விட்டவன்; இவன் கையை முறிங்கடா” என்று உத்தரவிட்டார். உடனே 4 போலீசார் தோழர் பெரியசாமியின் கையை இழுத்து ஒரு பெஞ்சின் மீது வைத்து மாட்டை அடிப்பதைப் போல அடித்து நொறுக்கினர்.

பிறகு, டி.எஸ்.பி. மூர்த்தி போலீசுக்காரர்களைப் பார்த்து, “டேய்! இவனுங்க பொதுக் கூட்டத்துல போலீசைப் பத்தி ஏதாவது பேசினா, நீங்க மேடையில ஏறி இவனுங்கள மிதிங்கடா! அதனால என்ன பிரச்சினை வந்தாலும் நான் பார்த்துக்கிறேன்!” என்று போலீசு மிருகங்களைத் தூண்டி விட்டார்.

இத்தாக்குதலின்போது டி.எஸ்.பி. ஒரு அடி அடித்தால், தஞ்சை - மேற்கு போலீசு உதவி ஆய்வாளரான சேதுமணி மாதவன் நாலு மடங்கு வெறியோடு தோழர்களைத் தாக்கி, தனது மேலதிகாரிக்கு எஜமான விசுவாசத்தைக் காட்டினார்.

நள்ளிரவு 2 மணிக்குத் தொடங்கி அதிகாலை 5 மணிவரை தொடர்ச்சியாக இத்தாக்குதலும் சித்திரவதையும் ஆபாசவசவுகளும் நடந்தது.

இதற்கிடையே இவ்வமைப்பின் தோழர்களும் வழக்கறிஞர்களும் தஞ்சை


படிப்பகம்

www.padippakam.com

நகரின் அனைத்து போலீசு நிலையங்களுக்கும் சென்று விசாரித்த போதிலும், அப்படி யாரும் கைது செய்யப்படவில்லை என்றும், எங்களுக்குத் தெரியாது என்றும் போலீசார் கூசாமல் புளுகினர். பின்னர், விவரம் அறிந்து தோழர்கள் அடைக்கப்பட்டிருந்த போலீசு நிலையத்துக்கு வந்து சந்தித்துப் பேச அனுமதி கேட்டபோது, அனுமதி மறுத்து கோர்டில் பார்த்துக் கொள்ளுங்கள் என்றனர்.

மிகப் பெரிய கலவரத்தைத் தூண்டியது, போலீசாரைப் பணி செய்ய விடாமல் தடுத்தது, போலீசாரை மிரட்டி அச்சுறுத்தியது, பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தியது - என போலீசார் சோடித்த பொய் வழக்குகளின்படி நீதிமன்றம் தோழர்களைச் சிறையிலடைக்க உத்தரவிட்டது. அதன்படி, தஞ்சை கிளைச்சிறையிலும் பின்னர் திருச்சி மத்திய சிறையிலும் அடைக்கப்பட்ட தோழர்கள் பின்னர் பிணையில் வெளிவந்தனர்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் கைதைத் தொடர்ந்து, ஒருவரைக் கைது செய்யும் போது போலீசார் பின்பற்றவேண்டிய நடவடிக்கைகள் பற்றி உச்சநீதி மன்றம் அளித்துள்ள 11 கட்டளைகள் பற்றி பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதுகின்றன. ஆனாலும் தஞ்சையில் பு.மா.இ.மு. தோழர்கள் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் இவையனைத்தும் அப்பட்டமாகவே மீறப்பட்டுள்ளன. மனித உரிமையாவது, மண்ணாங்கட்டியாவது என்று உயர் போலீசு அதிகாரியே அதிக்கிரமங்களில் ஈடுபட்டு வெறியாட்டம் போட்டுள்ளார்.

டி.எஸ்.பி. மூர்த்தி தன்னை சினிமா கதாநாயகனைப் போலக் கருதிக் கொண்டு, அற்பத்தனமான் சூரத்தனங்களைக் காட்டி ஆட்டம் போடுகிறார். புரட்சிகர அமைப்புகள் - அரசியல் இயக்கங்கள் மீது மட்டுமல்ல; நடைபாதைக் கடைக்காரர்களை ஓங்கி அறைவது, தட்டு வண்டிகளையும் காய்கறிக் கூடைகளையும் எட்டி உதைத்து சாக்கடையில் தள்ளுவது என்று உழைக்கும் மக்களுக்கே பெருந்தொல்லையாக இவர் ஆட்டம் போட்டு வருகிறார். மிகச்சாதாரண ஜனநாயக உரிமை - மனித உரிமைகளைக் கூட காலில் போட்டு மிதித்து, 'சூரப்புலி' தேவாரத்தின் வாரிசாக வளரத் துடிக்கிறார்.

இதை இப்படியே நீடிக்க அனுமதித்தால் போலீசு அராஜகம் கேள்விமுறையின்றித் தலைவிரித்தாடும்; உழைக்கும் மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாகி விடும் என்பதால் தஞ்சை மட்டுமின்றி, தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகள் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு, தஞ்சை டி.எஸ்.பி. மூர்த்தியின் அராஜகத்தை எதிர்த்து கடந்த செப்டம்பர் 10-ஆம் தேதியன்று கண்டன ஆர்ப்பாட்டத்தைத் தமிழகத்தின் பல பகுதிகளில் நடத்தியுள்ளன.

தஞ்சை பு.மா.இ.மு. தோழர்கள் மீதான போலீசாரின் கொலைவெறித் தாக்குதலானது, தமிழகமெங்கும் தொடரும் போலீசு அட்டூழியங்களுக்கு ஒரு வகைமாதிரிதான். ஒரு அரசியல் இயக்கத்தின் முன்னணியாளர்களுக்கே இந்த கதி என்றால், சாமானிய மக்களின் கதியைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பணிந்து போவதாலோ, என்மீது தாக்குதல் வரவில்லை என்று ஒதுங்கிக் கொள்வதாலோ பெருகிவரும் போலீசு அராஜகத்தைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் உழைக்கும் மக்கள் திரண்டெழுந்து போராடுவதே, போலீசு அதிக்கிரமங்களையும், படர்ந்து வரும் பாசிச அபாயத்தையும் முறியடிக்கும். ●

# நம்பிக்கையான தொடக்கம்

மனித உரிமை பாதுகாப்பு கவுன்சிலின் (HRPC) கடலூர் மாவட்டக் கிளை துவக்க விழா, செப்டம்பர் 8-ஆம் தேதியன்று விருத்தாசலம் அன்பு திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

திரு. முகம்மது கவுஸ் (தலைவர், ம.உ.பா.க; கடலூர் மாவட்டம்) தலைமையில் திரு. ம.தி. சோழர் (தலைவர், ம.உ.பா.க., தமிழ்நாடு), திரு. இராமநாதன் (வழக்கறிஞர், முன்னாள் எம்.பி) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இத்துவக்க விழாவில், வழக்கறிஞர் திரு. திருமலைராஜன் (தமிழ்நாடு கீழமை நீதிமன்றங்களின் கூட்டமைப்பு சங்க செயலர்), புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் செயலர் தோழர் சுப. தங்கராசு, திரு. போஜகுமார் (செயலர், ம.உ.பா.க. தமிழ்நாடு), கடலூர் வழக்கறிஞர் திரு. ஆர். நடராஜன், விருத்தாசலம் வழக்கறிஞர்கள் திரு. வே. அம்பேத்கர் மற்றும் திரு. ஆர். சோமசுந்தரம், எழுத்தாளர் திரு. இமையம் மற்றும் பலர் சிறப்புரையாற்றினர்.

''நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதன் விளைவாக, உழைக்கும் மக்களின் வாழ்வுரிமையே பறிக்கப்படும் வேளையில் அதிலிருந்து மனித உரிமையைத் தனியாகப் பிரிக்க முடியாது. வாழ்வுரிமைக்கான போராட்டம் சாராம்சத்தில் மனித உரிமைக்கான போராட்டமேயாகும். நாடெங்கும் போலீசு அராஜகமும் மனித உரிமை மீறலும் பெருகி பாசிச இருள் சூழ்ந்து வரும் வேளையில் அனைத்து உழைக்கும் மக்களுடனும் இணைந்து ஜனநாயக உரிமை - மனித உரிமை - வாழ்வுரிமைக்காக ம.உ.பா.க. போராடும்; மக்களுக்கு விழிப்புணர்வூட்டும்'' என்று இவ்வமைப்பின் நோக்கங்களையும் கடமைகளையும் முன்னணியாளர்கள் விளக்கிப் பேசினர்.

இறுதியில், சாதி - மத - இன ஒடுக்குமுறை, தீண்டாமைக் கொடுமை, புரட்சிகர அமைப்புகள் மீது தீவிரவாத முத்திரை குத்தி ஒடுக்குதல், அண்மையில் நடந்த பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் ஆகியவற்றைக் கண்டித்தும், தொழிலாளர்கள் - விவசாயிகளது வாழ்வுரிமையைப் பறிக்கும் பன்னாட்டு நிறுவனங்களை வெளியேற்றக் கோரியும், ஒருவரைக் கைது செய்யும்போது காவல் துறையினர் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து உச்சநீதி மன்றத்தின் 11 கட்டளைகளை அனைத்து காவல் நி[illegible]லும் மக்களின் பார்வைக்கு வைக்குமாறும், இக்கட்டளைகளைச் செயல்படுத்தாத காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் 9 அம்சத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




வாழ்வுரிமைக்காகப் போராடும் உழைக்கும் மக்களுக்கும் ஜனநாயக உரிமைக்காகப் போராடும் சமூக அக்கறை கொண்டோருக்கும் ம.உ.பா.க.வின் கடலூர் மாவட்டக் கிளை துவக்கவிழா புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. ●

# பத்தாண்டுகளில் தாராளமயம்: பாதாளத்தை நோக்கி பாய்ச்சல்

எங்கள் ஊர் காய்கறிச் சந்தையில் நடந்த வாக்குவாதம் இது: காய்கறி வாங்கிச் செல்ல வந்த ஒரு பெண், ''இரண்டு நாளைக்கு முன்னே கூட விலை குறைவா சொன்னீங்க; இப்ப ஏன்பா யானை விலை, குதிரை விலை சொல்ற?'' என்று காய்கறி வியாபாரியிடம் கேட்க, அவர், ''அமெரிக்காவில் குண்டு வெடிச்சதனால விலை ஏறிப் போச்சு'' எனப் பதில் தந்தார். ''இரண்டு கிலோ மீட்டருக்கு அப்பால இருந்து காய்கறி கொண்டு வரும் உனக்கும் அமெரிக்காவுக்கும் என்னய்யா சம்மந்தம்?'' என முகத்தில் அறைந்தாற் போலக் கேட்டு விட்டு, அந்தப் பெண் நடையைக் கட்டிவிட்டார்.

அமெரிக்காவில் உலக வர்த்தக மையக் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டதையடுத்து, பிரதமர் வாஜ்பாயி வானொலி / தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், ''நமது நாட்டுப் பொருளாதாரம் கடினமான எதிர்காலத்தைச் சந்திக்க வேண்டியிருப்பதாக'' எச்சரிக்கை விடுத்தார். தேசியப் பத்திரிகைகள் / செய்தி ஊடகங்கள் அனைத்தும் வாஜ்பாயியின் எச்சரிக்கைக்கு ஒத்து ஊதின. உண்மையில், உள்ளூர் காய்கறி வியாபாரி தனது சொந்த இலாபத்திற்காக அவிழ்த்து விட்ட புளுகுக்கும், 'தேசிய நலனை' முன்னிட்டு வாஜ்பாயி விடுத்துள்ள எச்சரிக்கைக்கும் எந்த வேறுபாடும் கிடையாது.

எதற்கெடுத்தாலும் ''தீவிரவாதம்'' என்ற பல்லவியைப் பாடி வரும் ஆளுங் கும்பல், நாட்டின் பொருளாதாரம் சரிந்து கிடப்பதற்கும், முசுலீம் தீவிரவாதம் தான் காரணம் எனப் பழி போட்டுத் தப்பித்துக் கொள்ள எத்தனிக்கிறது. உலக வர்த்தக மையச் கட்டிடங்கள் மண்ணோடு மண்ணாகச் சரிந்து விழுவதற்கு முன்பே, இந்தியப் பொருளாதாரம் சரிந்து விழுந்து விட்டது என்பதே உண்மை. உலக வர்த்தக மையக் கட்டிடத்தை முசுலீம் தீவிரவாதம் தகர்த்தது என்றால், இந்தியப் பொருளாதாரத்தை ஆளுங் கும்பல் நடைமுறைப்படுத்தி வரும் 'சந்தை தீவிரவாதமே' மரணக் குழிக்குள் தள்ளிவிட்டு விட்டது.

ஒரிசாவின் பட்டினிச் சாவுகள், ஆலை மூடல், வேலையிழப்பு, விலைவாசி உயர்வு போன்ற உழைக்கும் மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளை எடுத்துப் போட்டு, இந்தியப் பொருளாதாரம் நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டு விட்டதாக நாம் 'இட்டுக் கட்டி'க் கூறவில்லை. இந்தப் பிரச்சினைகள் உழைக்கும் மக்களை எவ்வளவு தீவிரமாகத் தாக்கினாலும், அதையெல்லாம் மறைத்து விட்டு, மோசடி புள்ளி விவரங்களைத் தூக்கிப் போட்டு, பொருளாதாரம் வளர்ந்து கொண்டிருப்பதாகக் காட்டுவதுதான், ஆளுங் கும்பலின் வாடிக்கையாக இருக்கும். ஆனால், இப்பொழுது அவர்களே - மைய அரசு, தரகு முதலாளிகள், முன்னாள் நிதியமைச்சர்களான மன்மோகன் சிங், ப.சிதம்பரம் உள்ளிட்டு ஆளும் கும்பலைச் சேர்ந்த பலரும் இந்தியப் பொருளாதாரம் மூச்சுத் திணறிக் கொண்டிருப்பதை ஒப்புக் கொள்கிறார்கள்.

✱ ''மூடி ரேட்டிங்ஸ்'', ''ஸ்டாண்டர்டு அண்டு புவர்'' என்ற இரு பன்னாட்டு நிறுவனங்கள், ''இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி எதிர்மறையாக உள்ளதென்றும், இங்கு முதலீடு செய்வது அபாயகரமானதென்றும்'' மதிப்பீடு செய்து, அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

✱ தாராளமயத்திற்குப் பின் பன்னாட்டு கார் உற்பத்தி நிறுவனங்கள்தான் இந்தியாவினுள் புற்றீசல் போல் நுழைந்தன. அவை, இந்த ஆண்டு கார் விற்பனை முந்தைய ஆண்டைவிட 6 சதவீதம் சரிந்துவிட்டதாகப் புலம்புகின்றன. இதுபோல, அழகு சாதனப் பொருள் சந்தையைத் தனது பிடிக்குள் வைத்திருக்கும் இந்துஸ்தான் லீவரின் விற்பனையும் 6 சதவீதம் சரிந்து கிடக்கிறது.


✱ இந்த ஆண்டிற்கான பட்ஜெட்டை முதலாளித்துவப் பத்திரிகைகள் அனைத்தும் ''நமது பட்ஜெட்'' என் வானளவப் புகழ்ந்தன. முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரமும் ''பத்திற்கு எட்டு மதிப்பெண் பெறும் பழுதில்லாத பட்ஜெட்'' என்று சான்றிதழ் வழங்கினார். அதே சிதம்பரம் இன்று தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசை, ''செயல்படாத அரசாங்கம்'' எனச் சாடுகிறார். பொருளாதாரத்தை நிமிர்த்த, சட்ட அமைச்சரான அருண் ஜெட்லி போன்ற சீர்திருத்தப் புலிகளை இறக்கி விடுங்கள் என ஆலோசனை கூறுகிறார்.

✱ சின்காவின் 2001-02-ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் தரகு பெரு முதலாளிகளின் தொழில் வளர்ச்சிக்காக 8,000 கோடி ரூபாய் வரிச் சலுகை அளிக்கப்பட்டது. இதனால் தரகு பெருமுதலாளியான ராகுல் பஜாஜ், ''இந்தப் பட்ஜெட்டானது, பொருளாதார வளர்ச்சியில் புதிய பாய்ச்சலை எட்டும்'' எனப் புகழ்ந்தார். ஆனால் பொருளாதாரமோ பாய்வதற்குப் பதில் படுத்து விட்டது; அதனால், தரகு முதலாளிகள் இன்று, ''தங்களின் தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கம் வரிச் சலுகை மட்டும் கொடுத்தால் போதாது; அரசு, பத்துத் திட்டங்களைத் தயாரித்து, முதலீடு செய்து, நடைமுறைப்படுத்தினால்தான் நாங்கள் கரை சேர முடியும்'' எனக் கையேந்துகிறார்கள்.

தனியார் முதலாளிகள் புதிய தொழில்களில் முதலீடு செய்தால், இந்தப் பொருளாதார தேக்கத்தை உடைத்துவிடலாம் என்ற நோக்கில், மைய அரசு, முதலாளிகளுக்கு வழங்கும் தொழில் கடனுக்கான வட்டியைக் குறைத்தது. முதலாளிகளுக்குக் கடன் குறைந்த வட்டியில் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, வங்கி சேமிப்புக் கணக்குகள், தொழிலாளர்கள் சேமநலநிதி சேமிப்பு, அரசாங்கப் பத்திர முதலீடுகள் - ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டு வந்த வட்டியும் குறைக்கப்பட்டது. ஆனாலும் கூட, தனியார் முதலாளிகள் இந்தப் பொறியில் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை. மாறாக அரசாங்கம்தான் புதிய திட்டங்களில் முதலீடு செய்து, தங்களைத் தூக்கி விட வேண்டும் என ஒற்றைக் காலில் நிற்கிறார்கள்.

''அரசாங்கம் பொருளாதாரத்தில் தலையிடக் கூடாது; பொருளாதாரத்தைத் தனியார் தரகு முதலாளிகளிடமும், பன்னாட்டு நிறுவனங்களிடமும் தூக்கிக் கொடுத்துவிட வேண்டும்'' என்பதுதான் தாராளமயத்தின் நோக்கமாகக் கூறப்பட்டது. ஆனால் இன்றோ, அந்த நோக்கத்திற்கு மாறாக, தாராளமயவாதிகள் அனைவரும் பொருளாதாரத்தில் தலையிடும்படி அரசாங்கத்தை

சந்தையில் தேங்கிக் கிடக்கும் நுகர் பொருட்கள்: மூச்சுத் திணறலின் அறிகுறி.



www.padippakam.com

வேண்டுகிறார்கள்.

இது மட்டுமல்ல; ''பொருளாதாரத்தைத் தனியார் முதலாளிகளிடம் கொடுத்தால் தான், புதிய தொழில்நுட்பங்களும், நவீனமயமான உற்பத்தியும் பெருகும். பல கோடி பேருக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும்'' எனத் தாராளமயத்தை அலாவூதீனின் கையில் இருந்த அற்புத விளக்கைப் போலக் காட்டினார்கள். அரசாங்கமும், ''பொருளாதாரத்தைத் தனியார் முதலாளிகளிடம் ஒப்படைத்தால்தான், சமூக நலத்துறையில் முழு அக்கறை செலுத்த முடியும்'' எனத் தாராளமயம் - தனியார்மயத்தை நியாயப்படுத்தியது.



யு.டி.ஐ. திவாலானதையடுத்து, அதன் தலைமை அலுவலகத்தில் கவலையோடு நிற்கும் சிறு முதலீட்டாளர்கள்: நடுத்தர வர்க்கத்திற்கு தாராளமயம் தந்த 'பரிசு'.

இந்தத் தனியார்மயமும், தாராளமயமும் முழுமையான அளவில் நடைமுறைக்கு வந்து பத்து வருடங்கள் உருண்டோடி விட்டன. இந்தப் பத்தாண்டுகளில், தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் பாதுகாப்புத் துறையில் கூட நுழையலாம் என்ற அளவிற்கு இந்தியப் பொருளாதாரம் தாராளமயப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கமும் பல பொதுத்துறை நிறுவனங்களை மூடியோ அல்லது தனியார் முதலாளிகளுக்கு விற்றோ, பொருளாதாரத்தைத் தனியார்மயப்படுத்தி வருகிறது. இந்த நிலையில், தாராளமயமும், தனியார்மயமும் பொருளாதாரத்திலும், சமூக நலத்துறையிலும் சாதித்தது என்ன என்பதைப் புரட்டிப் பார்த்தால்தான் அதன் வெற்றுக் கூச்சல் புரிய வரும்.

***

1991- ஆம் ஆண்டு நாடு அந்நியச் செலாவணி நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டு விட்டதாகக் கூறித்தான், ஆளும் கும்பல் தாராளமயத்தை மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. அன்று, கையிருப்பில் இருந்த தங்கத்தை அடகு வைத்து அமெரிக்க டாலரைக் கடனாக வாங்கிய இந்தியாவிடம் இன்று 4220 கோடி அமெரிக்க டாலர்கள் அந்நியச் செலாவணி கையிருப்பாக உள்ளது. இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி குன்றி வரும் இந்த நேரத்திலும், இத்தனை ஆயிரம் கோடி டாலர்கள் அந்நியச் செலாவணி கையிருப்பாக இருப்பதுதான் தாராளமயத்தின் சாதனையாகக் காட்டப்படுகிறது.

இந்த நாலாயிரம் கோடி டாலர் கையிருப்பில், இந்தியா ஏற்றுமதி வர்த்தகத்தின் மூலம் சம்பாதித்தது வெறும் 410 கோடி டாலர்கள் தான். மீதி அனைத்தும் குறுகிய கால கடனாகவோ, பங்குச் சந்தை முதலீடாகவோ பெற்றது. இந்த நிலையில், அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் இந்தியப் பொருளாதாரத்தின் நெருக்கடியையும், முசுலீம் தீவிரவாதிகளின் தாக்குதலையும் காட்டி தங்களின் முதலீட்டைத் திரும்பப் பெற்றுக் கொள்ளத் தொடங்கினால், இந்தியா மீண்டும் 1991-ஐப் போல அந்நியச் செலாவணி நெருக்கடிக்குள் சிக்கிக் கொள்ளும் எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

தாராளமயம் கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் அந்நியச் செலவாணி நெருக்கடியைத் தீர்க்கவில்லை என்பது மட்டுமல்ல; இந்தியாவைத் தாராள இறக்குமதிக்கான சந்தையாக மாற்றி அமைத்திருப்பதன் மூலம், 1991-ஐக் காட்டிலும் கடுமையான நெருக்கடிக்குள் சிக்க வைக்கும் அபாயத்தை உருவாக்கியுள்ளது. 1991-ஆம் ஆண்டு நெருக்கடி ஏற்பட்ட பொழுது, இந்தியாவை ஏகாதிபத்தியங்களிடம் மறு அடகு வைத்துத் தப்பித்துக் கொண்ட ஆளும் கும்பலிடம், இனி அடகு வைப்பதற்கு எதுவும் மிஞ்சியிருக்கவில்லை.

நேற்றைய மன்மோகன் சிங், ப.சிதம்பரம் தொடங்கி இன்றைய யஷ்வந்த் சின்கா வரை - இவர்கள் மூவருமே தாராளமயத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு 1,000 கோடி அமெரிக்க டாலர்களை நேரடி அந்நிய முதலீடாக இந்தியாவினுள் இறக்குமதி செய்ய வேண்டும் எனச் சபதம் எடுத்துக் கொண்டவர்கள். ஆனால், கடந்த பத்தாண்டுகளில் எந்தவொரு ஆண்டும் இவர்களின் சபதம் பாதியளவிற்குக் கூட நிறைவேறியது கிடையாது. ஒவ்வொரு ஆண்டும் 300 கோடி அமெரிக்க டாலர்களை நேரடி அந்நிய முதலீடாக இறக்குமதி செய்வதற்கே, இந்திய அரசின் விழி பிதுங்கிப் போய் விடுகிறது. அதுவும் இந்த ஆண்டு 200 கோடி அமெரிக்க டாலர்கள் முதலீடாகக் கிடைப்பது கூடக் குதிரைக் கொம்புதான் என்கிறார்கள்.

இப்படி இந்தியாவில் பாய்ந்த அந்நிய மூலதனத்தில், மூன்றில் ஒரு பங்கு ஏற்கனவே இலாபத்தில் இயங்கி வந்த மாடர்ன் ஃபுட்ஸ், பால்கோ போன்ற தொழில் நிறுவனங்களைக் கைப்பற்றுவதற்குத்தான் பயன்பட்டதேயொழிய, தாராளமயத்தின் மூலம் இந்தியாவிற்கு புதிய தொழில் நுட்பமோ, நவீன உற்பத்தி முறையோ கிடைக்கவில்லை. கார், இரு சக்கர வாகனங்கள், டி.வி. போன்ற நுகர்பொருள் உற்பத்தியில் பாய்ந்த அந்நிய மூலதனத்தைக் கழித்துவிட்டுப் பார்த்தால், மின்சாரம், துறைமுகம் போன்ற அடிக்கட்டுமானத் துறையிலும், கனரக இயந்திர உற்பத்தியிலும் நுழைந்திருக்கும் அந்நிய மூலதனத்தைப் பூதக் கண்ணாடி கொண்டுதான் தேட வேண்டியிருக்கும்.

தயார் நிலையில் இருந்த, இலாப உத்தரவாதமிக்க தொலை தொடர்புத் துறையில் அந்நிய மூலதனம் பாய்ந்த அளவிற்குக் கூட, பிற அடிக் கட்டுமான துறைகளில் பாயவில்லை. மின்சாரத் துறையில் முதலீடு செய்யும் அந்நிய நிறுவனங்களுக்கு, மைய அரசால் இலாப உத்தரவாதம் அளிக்கப்பட்ட பின்னும், என்ரானைத் தவிர்த்து எந்தவொரு விரைவு மின்திட்டமும் இன்னமும் உற்பத்தியைத் தொடங்கவில்லை. தாராளமயத்தின் சாதனை எனப் பீற்றிக் கொள்ளப்பட்ட என்ரான் விவகாரமோ, பன்னாட்டு நிறுவனங்களின் பகற் கொள்ளையை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டது என்பதோடு, மாநில - மைய அரசுகளைப் பொருத்தவரை புலி வாலைப் பிடித்த கதையாகிவிட்டது.

நேரடி அந்நிய முதலீட்டைக் கவர்ந்திழுக்க முடியாமல் தோற்றுப் போன மைய அரசு, அமெரிக்க டாலரைக் குவித்துக் கொள்வதற்கு குறுக்கு வழியில் இறங்கியது. இந்தியப் பங்குச் சந்தை அந்நிய முதலீட்டாளர்களுக்குத் திறந்து விடப்பட்டது. அரசாங்கத்தின் கஜானாவில் அமெரிக்க டாலர் குவிந்த அளவிற்கு பங்குச் சந்தையில் ஊழலும் மலிந்தது. அமெரிக்க டாலரால் தூண்டிவிடப்பட்டு நடந்த பங்குச் சந்தை ஊழல்கள், சிறு முதலீட்டாளர்களைப் போண்டியாக்கியதோடு நின்று விடாமல், யு.டி.ஐ. நிறுவனத்தைப் போண்டியாக்கி விடும் அளவிற்குப் பூதாகரமாய் வளர்ந்து விட்டன.

பன்னாட்டு நிறுவனங்களுக்கும், உள்நாட்டு தரகு முதலாளிகளுக்கும் வழங்கப்பட்ட வரிச் சலுகைகளோ இந்திய அரசு எதிர்பார்த்தபடி தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குப் பதில், இந்திய அரசையே திவாலாக்கும் நிலைக்குத் தள்ளி விட்டுவிட்

www.padippakam.com

டன. இந்திய அரசு, தனது அன்றாட செலவு களுக்கே உள்நாட்டில் கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. இதனால், 1991 ஆம் ஆண்டு வெறும் 5000 கோடி ரூபாயாக இருந்த மைய அரசின் வருவாய் பற்றாக்குறை, இன்று 90,000 கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது. தாராள மயத்தினால், இந்தியப் பொருளாதாரம் கண்ட வளர்ச்சி இதுதான். 1991-ஆம் ஆண்டு அந்நியச் செலாவணி நெருக்கடி நம்மை பயமுறுத்தினால், இப்பொழுது உள்நாட்டுக் கடன் நம்மை அச்சுறுத்துகிறது எனப் பொருளாதார நிபுணர்கள் கையைப் பிசைகிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், தாராளமயம் இந்தியப் பொருளாதாரத்தை ''உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணா'' என்ற நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது. 1981-ஆம் ஆண்டு தொடங்கி 1991-ஆம் ஆண்டு முடிய உள்ள பத்தாண்டுகளில் 3.84 சதவீத மாக இருந்த விவசாய வளர்ச்சி, தாராள மயம் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட அடுத்த பத்தாண்டுகளில் (1991-2001) 1.24 சதவீதமாகச் சுருங்கி விட்டது; இதே கால அளவுகளில் தொழிற்துறை வளர்ச்சியோ 5.6 சதவீதத்தில் இருந்து 5.9 சதவீதம்தான் வளர்ந்திருக்கிறது. ஆளுங் கும்பலோ, தொழில் மற்றும் விவசாயத்தின் இந்தப் பரிதாபகரமான நிலையை, சேவை பொருளாதாரத்தின் கிடுகிடு வளர்ச்சியைக் காட்டி மூடி மறைத்து விட முயற்சி செய்கிறார்கள்.

சேவைப் பொருளாதாரத்தின் வளர்ச்சி என்றால், ''இந்தியாவில் கணினி மென்பொருள் உற்பத்தித் துறை கிடுகிடுவென வளருகிறது; அமெரிக்காவுக்கு இந்திய மென்பொருள் ஏற்றுமதியாவது அதிகரித்துக் கொண்டே போகிறது'' என்பது போல ஒரு போலிச் சித்திரத்தை வரைந்து காட்டுகிறார்கள். உண்மையில், சேவைப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு கணினி மென்பொருள் உற்பத்தியும், ஏற்றுமதியும் காரணமாக இல்லை. மாறாக, அரசு ஊழியர்களுக்கு ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி ஊதியம் உயர்த்திக் கொடுக்கப் பட்டதுதான் காரணம் என்ற உண்மையைச் சில பொருளாதார நிபுணர்கள் போட்டு உடைக்கிறார்கள்.

இந்த நிலையில், மைய மற்றும் மாநில அரசுத் துறைகளில் வேலை பார்க்கும் 10 சத வீத ஊழியர்களை வேலையை விட்டுத் துரத்திவிடத் திட்டம் போடுகிறார், நிதிய மைச்சர் சின்கா. 10 சதவீத ஊழியர்களை வேலையை விட்டுத் தூக்கினால், அரசின் பற்றாக்குறை குறையும் என அவர்கள் கணக்குப் போடுகிறார்கள். இந்த நடவடிக்கையால் அரசின் பற்றாக்குறை குறையுமோ, குறையாதோ; இதன் எதிர்மறையாக, சேவைப் பொருளாதாரத்தின் 'வளர்ச்சி' தடுமாறத் தொடங்கும். நுகர் பொருள் விற்பனையின் தேக்கம் மேலும் தீவிரமாகி, தொழில் 'வளர்ச்சி'யைத் தலை கீழாகக் கவிழ்த்துவிடும்.

இப்படி தாராளமயத்தை வெற்றியடையச் செய்வதற்காக ஆளுங் கும்பல் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும், உழைக்கும் மக்களின் மீது சுமைகளை ஏற்றுவதோடு, பொருளாதாரத்தையும் மேலும் மேலும் நெருக்கடிக்குள் சிக்க வைத்து விடுகிறது. அப்படியென்றால், கடந்த பத்தாண்டுகளில் தாராளமயத்தால் இந்தியாவிற்கு என்ன கிடைத்திருக்கிறது என்ற கேள்விக்கு, ''பத்து இனிய, நயமான வரவு - செலவு அறிக்கைகள் கிடைத்ததுதான் சாதனை'' என ப.சிதம்பரமே நக்கலாகக் குறிப்பிடுகிறார்.

இந்த இனிய, நயமான பத்து பட்ஜெட்டுகளில் ப.சிதம்பரம் போட்ட கனவு பட்ஜெட்டும் அடக்கம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ப.சிதம்பரம் நிதியமைச்சராக இருந்தபொழுதே, இந்தியப் பொருளாதாரம் நெருக்கடிக்குள் சிக்கத் தொடங்கியது. இந்த நெருடிக்கடியில் இருந்து தப்பிக்க, இந்திய அரசு பன்னாட்டு நிறுவனங்கள் வங்கி, காப்பீடு துறைகளில் நுழையவும், அந்நியப் பொருட்களின் தாராள இறக்குமதிக்கும் அனுமதியளித்தது. இந்த நடவடிக்கைகள் ஒருபுறம் பங்குச் சந்தை ஊழல் மோசடிகளையும், மறுபுறம் சிறு தொழில்களும், விவசாயமும் அழிவதையும் ஏற்படுத்தியது. இப்பொழுது, அமெரிக்காவின் உலக வர்த்தக மையம் தகர்ந்ததையடுத்து, இந்தியப் பங்குச் சந்தையும், இந்திய ரூபாயின் மதிப்பும் சரிந்து வருவது, தென்கிழக்காசிய நாடுகளைப் போன்று இந்தியாவும் திவாலாகி விடும் அபாயத்தை உருவாக்கிவிட்டது.



வாழ்வுரிமைக்காகப் போராடும் தினக்கூலித் தொழிலாளர்கள்: தாராளமயம் இவர்களுக்குத் தந்ததென்ன?

இந்த நெருக்கடியில் இருந்து தப்பிக்க 75,000 கோடி ரூபாய் செலவில், தேசிய நெடுஞ்சாலைத் திட்டமொன்றைத் தொடங்கப் போவதாக வாஜ்பாய் அறிவித்திருக்கிறார். வலிந்து போய் கிராக்கியை உருவாக்குவதன் மூலம், பொருளாதாரத்தை முடுக்கி விட முடியும் என்பதுதான் இவர்களின் கனவு. ஏற்கனவே பற்றாக்குறையால் திண்டாடிக் கொண்டிருக்கும் இந்திய அரசு, இத்தனை ஆயிரம் கோடி ரூபாய் மூலதனத்தைத் திரட்ட உலக வங்கியிடமோ, உள்நாட்டிலோ தட்டேந்துவதைத் தவிர வேறு வழியில்லை. இந்த முதலீடு, இந்தியாவின் கடன் சுமையை மேலும் தீவிரமாக்கும் என்பது ஒருபுறமிருக்க, இத்திட்டத்தால் பலன் அடையப் போகிறவர்கள் யார்? இத்திட்டத்தால் ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்குத் தற்காலிகமாக வேலை கிடைக்கலாம்; அதே சமயம், தோல்இருக்க சுளையை முழுங்குவதைப் போல, சிமெண்ட், உருக்காலை அதிபர்கள், ஒப்பந்தக்காரர்கள் என்ற சிறு கும்பல்தான் இத்திட்டத்தால் கொள்ளை இலாபமடையும்.

இது ஒருபுறமிருக்க, ''தொழிலாளர் சீர்திருத்த சட்டத்தை நிறைவேற்றுவது; இலவச மின்சாரத்தை ஒழித்து, மின் உற்பத்தி - விநியோகத்தைத் தனியார்மயப்படுத்துவது; அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசியப் பண்டங்களின் கொள்முதலைக் கைவிடுவது; 27 பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பது; 10 சதவீத அரசு ஊழியர்களை வேலையை விட்டுத் துரத்துவது'' என்ற இரண்டாம் கட்ட சீர்திருத்தத்தை அமல்படுத்துவதன் மூலமும் இந்நெருக்கடியில் இருந்து மீண்டு விடலாம் என ஆளுங் கும்பல் எண்ணுகிறது.

இது வெறும் பொருளாதார நெருக்கடி மட்டுமல்ல; தரகு முதலாளிகளும், ஏகாதிபத்தியவாதிகளும், ஆளும் வர்க்கம் என்ற தங்களின் இருப்புக்கே வேட்டு வைக்கும் அரசியல் நெருக்கடியாக இது வளர்ந்து விடுமோ என்ற அச்சமும் அவர்களைப் பிடித்தாட்டுகிறது. அதனால்தான், குடியரசுத் தலைவர் நாராயணன், ''ஏழை மக்கள் பொறுமையிழந்து வருகிறார்கள்'' என எச்சரிக்கிறார். திட்டக் கமிசனின் துணைத் தலைவர், கே.சி. பந்த், ''பொருளாதார நெருக்கடியும், வேலையின்மையும் சமூக அமைவைக் குலைத்து விடும்'' எனப் பதறுகிறார். தாராளமயத்தைத் தீவிரமாக்கி, விவசாயிகள், தொழிலாளர்கள், சிறு ஆலை அதிபர்களை மேலும் போண்டியாக்கி, இந்த அபாயத்தில் இருந்து தப்பித்து விடலாம் என ஆளும் வர்க்கம் கணக்குப் போடுகிறதே, அதைவிட முட்டாள்தனமான முடிவு வேறெதுவும் இருக்க முடியாது.

● ரஹீம்


படிப்பகம்

# வாசகர் கடிதம்

● முதலாளித்துவ பத்திரிக்கைகட்கும், அரசுக்கும் இடையேயான உறவை அம்பலப்படுத்தி 'கவர் கலாச்சாரத்தை' வெளிச்சம் போட்டுக் காட்டிய விதம் சிறப்பாய் இருந்தது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் யாருக்காக, யாரால் அமைக்கப்படுகிறதென்பதையும், அதிலும் போலி கம்யூனிஸ்டுகள் பங்கு பெற்றிருப்பதையும் அறிந்த போது, அதிர்ச்சியாயிருந்தது. தலையங்கம் சிறப்பாக இருந்தது. இம்மூன்று செய்திகளையும் விளக்கி, திருநெல்வேலி பேருந்து பிரச்சாரத்தின் போது பேசியது, மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றது.

**— சிவா, மானாமதுரை.**

● தற்போது தியாகுவின் அரசியல் வழி ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்த கருணாநிதி, முரசொலி மாறன் ஆகியோரின் அரசியல் வழிதான். எப்படி பாராளுமன்ற வாதம் காலாவதியாகிப் போனதோ, அது மாதிரி தியாகுவின் அரசியல் வழிமுறைகளும் காலாவதியாகிப் போனதுதான். இந்நிலையில் தியாகுவின் காலாவதியாகிப் போன இந்த அரசியல் விவாதங்களில் பு.ஜ. புகுந்து நட்புநிலை, பகை நிலை என்று விளக்கி கொண்டிருப்பது, சிரமப்பட்டு கொண்டு வரும் பு.ஜ. இதழின் பக்கங்களை வீணடிப்பதாகும்.

**— வி.பி. உசிலம்பட்டி**

● இராஜஸ்தான் மாநிலத்தில் காங்கிரசு கட்சி ஆட்சியில் இருந்தும், இடிக்கப்பட்ட மசூதியைத் திரும்பவும் கட்டித் தர அது முன் வரவில்லை. இதற்கு முன்பு பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது ஆட்சியில் இருந்ததும் காங்கிரசுதான். இதிலிருந்தே மசூதி விவகாரங்களில் பா.ஜ.க.வும் காங்கிரசும் ஒன்றுதான் என்று தெளிவாகிறது. பா.ஜ.க.வுக்கு நேரெதிர் கட்சி காங்கிரசு என்றும், அதுதான் மதச்சார்பற்ற சக்தி என்றும் நம்புபவர்கள் இனி தெளிவடைய வேண்டும். ஓட்டுக் கட்சி அரசியலைப் புறக்கணிப்பதுதான் முசுலீம்களைப் பொருத்த வரை சரியான வழியாக இருக்க முடியும்.

**— பு. முகமது இல்யாஸ், திருவிடைமருதூர்.**

● புதிய பொருளாதாரக் கொள்கையில் நோயாளிகள் மூலம் கூட கோடிக்கணக்கில் சம்பாதிக்க முடியும் என்று பன்னாட்டு நிறுவனங்கள் எண்ணம் கொண்டுள்ளன. இதுதான் இன்றைய இந்தியா கட்டுரை மூலம் தொட்டில் குழந்தை திட்டத்தின் உண்மை நிலையை அறிய முடிகிறது.

**— எம்.எம். லெனின்துரை, சென்னை.**

● நான் இதுவரை களஞ்சியம் 'சின்னப்பிள்ளை'யின் காலில் பிரதமர் மரியாதைக்குதான் விழுந்தார் என்று நினைத்தேன். ஆனால் இவ்வளவு விசயம் இருக்குமென்று தெரியாது. செய்திப் பதிவுகள் அனைத்தும் ஆவேசத்தை ஊட்டுகின்றன. மாணவனுக்கு நேர்ந்த மயிர் விவகாரம் பற்றி படிக்கும் போது "இப்படியுமா?" என நினைக்கத் தோன்றுகிறது.

**— எம். தங்கதுரை, அரியலூர்.**

● சமீபத்தில் காரைக்குடி உறவு வாசகர் வட்டம் நடத்திய மார்க்சியர்கள் மாநாட்டில் தியாகுவின் பேச்சைக் கேட்டேன். **"Workers of all countries, unite!"** என்பதை 'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்' என்று மொழி பெயர்க்கப்பட்டது தவறு என அவர் மயிர் பிளக்கும் விவாதங்கள் நடத்தினார். மூலதனம் மொழி பெயர்ப்பாளர், சிறையில் இருந்தவர், முன்னாள் மா-லெ இயக்கத் தோழர் என்ற பிம்பங்கள் தியாகு மீது உருவாக்கியிருந்த உணர்வுகளை இப்போது உதறிவிட முடிகிறது. மார்க்சியம் என்பதையே புரிந்து கொள்ளாமல் உளறும் இவரைப் போன்றவர்களை, கடந்தகாலத் தியாகத்திற்காக மதிப்பது நிகழ்கால மற்றும் எதிர்கால தீமைக்கே என்பதை தெளிந்து கொண்டோம்.

**— குருசாமி மயில்வாகனன், சிவகங்கை.**

● தமிழகத்தைக் கொள்ளையடிக்கக் கிளம்பியுள்ள புதிய பாசிசக் கூட்டணியைச் சித்தரித்த அட்டைப்படம், இம்முறை வித்தியாசமான வடிவமைப்பு - வண்ணங்களுடன் எடுப்பாக அமைந்திருந்தது. சராசரி மனிதனைப் போல வாழ்ந்து மடிவதைவிட தோழர் நல்லுவைப் போல உயர்ந்த லட்சியத்துக்காக புரட்சியாளனாக வாழ வேண்டும் என்ற உணர்வை தோழரது மறைவு எமக்கு உணர்த்தியது. சட்டமும் நீதியும் யாருக்காக உள்ளது என்பதை புதிய கோணத்தில் பு.ஜ. மட்டுமே, "விலை போகும் நீதித்துறை" என்ற தலையங்கக் கட்டுரை மூலம் சரியான நேரத்தில் சுட்டிக் காட்டியது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்பவை ஏகாதிபத்திய வலைப்பின்னலில் ஒரு கண்ணி என ஆதாரங்களுடன் எளிமையாகத் தொகுத்தளித்த தேனி மாவட்ட வி.வி.மு. தோழர்களுக்கு எமது வாழ்த்துக்கள். சிறைக் கைதிகளைக் கொத்தடிமையாக்கிச் சுரண்டும் அமெரிக்க ஜனநாயகத்தின் கோரமுகம் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஊட்டியது.

**— வாசகர் வட்டம், திருச்சி.**

● கோவையில் தொழிலாளர்களின் ஆவேசத்தைக் கண்டு ஓடி ஒளிந்த தொழிற்சங்க சுல்தான்களைப் பற்றிய செய்தியானது, எங்களைப் போல குமுறிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளித்தது. பாசிச ஜெயாவின் தொட்டில் குழந்தைத் திட்டம் பற்றியும், வரதட்சிணைக் கொடுமை - வறுமையை ஒழிக்காமல் பெண் சிசுக் கொலைகளைத் தடுக்க முடியாது என்பதையும் "இதுதான் இன்றைய இந்தியா" எடுப்பாக விளக்கியுள்ளது.

**— இராமன், கோவிந்தன், கே.எஸ்; தருமபுரி.**

● நான் சில பகுதிகளில் பெண்களிடம் சென்ற மாதம் தன்னார்வக் குழுக்களைப் பற்றியும் அவை செயல்படும் விதம் ஆகியவை குறித்தும் பேசிக் கொண்டிருந்தேன். எங்கள் பகுதியில் சுய உதவிக் குழுவில் உள்ள ஒரு பெண் என்னிடம், உங்கள் அமைப்பில் சொல்லி ஏதேனும் நடவடிக்கை எடுத்துடலாமே என்றார். இந்த இதழில் சுய உதவிக் குழுக்கள் பற்றிய கட்டுரையைக் காட்டி அந்தப் பெண்ணிடம் பேசியதில், 'நான் உங்களிடம்தானே சொல்லி விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தேன். அதற்குள் இவ்வளவு விரிவாக கட்டுரை வெளியிட்டு இருப்பது மிகவும் அருமையாக இருக்கிறது' என்றார்.

**— பவானி, திருச்சி.**

**● பு.ஜ.வில் சுய உதவிக்குழு பற்றி வந்த செய்திகள் அனைத்தும் நன்று. சி.பி.எம்-இன் வழிகாட்டுதலோடு நடைபெற்று வரும் அறிவியல் இயக்கம் விரைவில் உடையும் நிலையில் உள்ளது. காரணம் உண்மையானவர்கள் இந்த அமைப்பில் தொடர்ந்து செயல்பட விடுவதில்லை. சி.பி.எம்-இன் தலைவர்களின் வாரிசுகளே இந்த அமைப்பின் தலைவர்கள். நீங்கள் சுட்டிக்காட்டிய சுந்தரராமன் (அய்யர்) மனைவி சுதா மாதர் சங்க மாநில பொதுச் செயலாளர். AID அமைப்பின் பிரதிநிதி பாலாஜி சம்பத் என்பவன் மைதிலி சிவராமனின் மருமகன். அமெரிக்காவில் இருந்து பல பேர் தற்போது அறிவியல் இயக்கத்தை பயன்படுத்தி தன்னார்வக் குழுவாகவே செயல்படுகின்றனர். இதை தட்டிக் கேட்ட பல்வேறு மாவட்ட முழுநேர பணியாளர்களை காரணம் இல்லாமல் வெளியேற்றுகின்றனர். இதன் உண்மைநிலை தெரிந்த தலைவர்கள் இயக்கத்தை விட்டு ஒதுங்கி நிற்கின்றனர். பார்ப்பன கும்பல், மக்களிடம் எளிய முறையில் அறிவியலை பரப்பும் அறிவியல் இயக்கத்தை பயன்படுத்தி மகளிர் சுய உதவிக்குழு, தரிசுநில மேம்பாடு, கம்ப்யூட்டர் பயிற்சி மையம், மற்ற NGOக்களுடன் கூட்டுச் சேர்ந்து பல திட்டங்கள் என சி.பி.எம் கட்சியைப் போன்றே தரம் கெட்டு வருகிறது. பு.ஜ., பு.க. புத்தகங்கள் படித்த காரணங்களுக்காகவே மதுரை போன்ற இடங்களில் அறிவியல் இயக்க முழுநேரப் பணியாளர்கள் மீது வேறு பழி சுமத்தி அமைப்பை விட்டு வெளியேற்றி விட்டனர்.**

**— ஆர். ராமகிருஷ்ணன், மதுரை (தமிழ்நாடு அறிவியல் இயக்கம்)**

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

www.padippakam.com

PUTHIYA JANANAVAGAM
(TAMIL FORTNIGHTLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/Chief.PMG-544/2001



# இதுதான் இன்றைய இந்தியா

இந்தப் படத்தில் கால்கள் விலங்கு பூட்டப்பட்ட நிலையில், கட்டிலில் அமர்ந்திருக்கிறாரே அந்த இளைஞரின் பெயர் தியோனாத் லிண்டா. ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த இவர், கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு, விசாரணைக் கைதியாக ராஞ்சி சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். சிறையில் அடைக்கப்பட்ட மூன்றே மாதத்தில் இவரைக் காசநோய் தாக்க, தற்பொழுது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கைதிகளை, இப்படி விலங்கு பூட்டிக் கண்காணிப்பது மனித உரிமைக்கு எதிரானது என்கிறது சட்டம். தமிழ்நாடு போலீசுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள எல்லா மாநில போலீசுக்குமே மனித உரிமை என்பது மயிருக்குச் சமானம் என்பதைத்தான் இந்தப் படம் எடுத்துக் காட்டுகிறது..

ஆனாலும், ஒருவகையில் லிண்டா அதிருஷ்டசாலி. கால்களில் விலங்கு பூட்டப்பட்டிருந்தாலும், அவருக்கு இங்கே, இப்பொழுது உட்கார, படுக்க ஓரளவு வசதி கிடைத்திருக்கிறது. லிண்டா காசநோயால் பாதிக்கப்பட்டு இந்த மருத்துவமனைக்கு வராமல் இருந்திருந்தால், அவர் ராஞ்சி சிறையை விட்டு வெளியே வரும் நாள் வரை நின்று கொண்டேதான் நாட்களை ஓட்ட வேண்டியிருந்திருக்கும்.

லிண்டா மட்டுமல்ல, அந்தச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் பெரும்பாலான கைதிகள், விநோதமான முறையில் தினமும் தண்டிக்கப்படுகின்றனர். அக்கைதிகள் சிறை அறையில் உட்கார இடம் வேண்டும் என்றால், மாதம் ரூ. 100/- மாமூல் வெட்ட வேண்டும்; படுத்துக் கொள்ள வசதி வேண்டும் என்றால், ரூ. 500/- வெட்ட வேண்டும். அந்தச் சிறையில் இப்படியொரு கொள்ளை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு, கிரிமினல்களின் தலைமையில் நடந்து வருகிறது.

பணம் கொடுக்க வசதியிருந்தாலும், அச்சிறையில் உட்காரவோ, படுக்கவோ இடம் கிடைப்பது, அத்துணை சுலபமன்று. ஏனென்றால் 585 கைதிகளையே அடைக்க இட வசதி உள்ள அந்தச் சிறையில், தற்பொழுது 1850 கைதிகள் திணிக்கப்பட்டுள்ளனர். பண வசதி இல்லாததாலும், இட வசதி இல்லாததாலும் பெரும்பாலான கைதிகள், இரவு நேரத்தை சிறை அறைகளில் உள்ள கக்கூஸ்களில் நின்று கொண்டே கழிக்கின்றனர்.

தேசிய மனித உரிமை கமிசன், ராஞ்சி சிறையில் கைதிகள் பன்றிகளைப் போல அடைக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறது. சிறை மருத்துவர்கள் ராஞ்சி சிறையைத் தொற்றுநோய்க் கூடம் என்கிறார்கள். அச்சிறைக் கைதிகளோ, அரசிடம் வேறெந்த வசதியையும் கேட்கவில்லை, தாங்கள் இரவு நேரத்தில் ஆற அமர உட்கார, படுக்க ஓர் இடம் வேண்டும் என்பதைத் தவிர.



இதோ இந்தப் படத்தில் நாம் காணும் அழகு நிலையம் தில்லியில் உள்ள திகார் சிறையில், திகார் சிறை நிர்வாகத்தால் நடத்தப்படுகிறது. அச்சிறையில் உள்ள பெண் கைதிகள், இந்த அழகு நிலையத்திற்கு வந்து தங்களைச் சிங்காரித்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர்; தண்டிக்கப்பட்ட பெண் கைதிகளுக்கு இந்த அழகு நிலையத்தில் அழகுக் கலை பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதன் மூலம் விடுதலையாகிப் போகும் பெண் கைதிகளின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைப்பதாகப் பீற்றிக் கொள்கிறார், திகார் சிறைக் கண்காணிப்பாளர் சுனிதா.

கைதிகளும் மனிதர்கள்தான்; அவர்களுக்கும் அடிப்படை வசதிகள் வேண்டும் எனக் கேட்டால், அதிகார வர்க்கமோ அழகு நிலையத்தைக் கொண்டு வருகிறது. கைதிகளின் உரிமைகளை மறுக்கும் காலனிய கால சிறைச் சட்டங்களைச் சீர்திருத்தக் கோரினால், சிங்காரித்துக் கொள்ளும் 'உரிமை'யைத் தருகிறார்கள். கைதிகளுக்கு சுகாதாரமான உணவும், குடிநீரும், பிற வசதிகளும் அளிக்க வேண்டியதை தங்களின் அதிகாரக் கொள்ளையின் மூலம் தடுத்துவிடும் அதிகார வர்க்கம், கஞ்சாவையும், அபினையும் தாராளமாகப் புழங்க அனுமதிக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, சிறைச்சாலைதான் கிரிமினல்களை உருவாக்கும் பயிற்சிக் கூடமாக மாறி நிற்கிறது. இந்த மக்கள் விரோத அடக்குமுறைக் கருவியை நாம் அடித்து நொறுக்குவது எப்போது?